# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஆகஸ்ட் 2024




சுவிஸ் நாட்டுத் தமிழச்சி

திருமகள்

## உருபா அன்ரன்

நேர்காணல்



வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – ஆகஸ்ட் 2024

632

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ்நெஞ்ச வாசகர்களுக்கு இனிய வணக்கம்!

இன்னுமோர் புதிய திங்களில் அடியெடுத்து வைத்து உங்களையும் அன்புடன் வரவேற்கிறோம். இங்கு ஐரோப்பிய நாடுகளில் கோடையின் நீண்ட விடுமுறை ஆரம்பித்து விட்டதால், பலரும் அதைக் கொண்டாடி வெளியூர்ப் பயணங்கள், சுற்றுலாக்களென கொண்டாடித் தீர்க்க, தமிழை நேசிப்பவனாகத் தமிழ் வளர்க்கும் பணியில் உங்களுடன் நான் இணைந்திருக்கிறேன். இந்த காலகட்டத்தில் நான்காண்டுகளுக்கு ஒருமுறை, கோலாகலமாக நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் பாரீசில் இடம்பெற்றுக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சியான விடயமே! இவை செப்டெம்பர் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இம்மாதத்தில் ஏராளமாய் விசேட தினங்களும் உண்டு.அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாக 14 ஆம் திகதி உலக புகையிரத தினமும், உலக புகைபடப் பிடிப்பாளர் தினமும், 15 ஆம் திகதி நம் இந்திய நாட்டின் சுதந்திர தினத்தோடு.உலக நுகர்வோர் தினம் மற்றும் உலக ஊனமுற்றோர் தினமும் கொண்டாடப் படுகிறது.

21 ஆம் திகதி சர்வதேச காடுகள் தினம்', உலகக் கவிஞர் தினம், உலக பொம்மலாட்ட தினமும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது.உலகத்துக்கு உயிர்நாடியே இந்தக் காடுகள் தான். காடழிப்புகளும் இயற்கைக்கு மாபெரும் அச்சுறுத்தலைக் கொண்டு வந்திருப்பது கவலைக்குரிய விடயமே!

22 ஆம் திகதி உலக குடிநீர் தினமாக பிரகடனப்படுத்தி உள்ளதால் அதன் முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்து கொள்வது அவசியம். அரபுநாடுகளில் பெற்றோல் கொட்டிக் கிடந்தாலும், குடிநீர் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.அதனால் நமக்கு உள்ள நீர்வளத்தை நாம் வீண்விரயம் செய்யாது பயன்படுத்துதல் சிறப்பாகும். அடுத்து 23 ஆம் திகதி உலக காலநிலை தினமாகும். மக்களின் அன்றாட வாழ்வியல் முறைகள், இயற்கைக்குப் பெரும் பாதகத்தை உருவாக்கி, காலநிலையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாலோ என்னவோ மக்களை அறிவுறுத்தவே இந்த ஒருநாளை அறிவித்துள்ளார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

இயற்கையோடு ஒன்றி வாழ்வதே உலக மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதால் எங்கள் வாழ்வியல் முறைகளை இயற்கைக்கு ஊறு விளைவிக்காதவாறு அமைத்தால் உலகமே செழிக்கும்.பொதுநலமாக சிந்தித்து, செயல்படுத்தி நற்பயன்களைக் கைக்கொள்வோமாக!

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# இனி ஒரு வழி செய்வோம்



நம் நாடு பழங்காலத்திலிருந்தே காதலை மறுத்ததில்லை. இதற்கு சங்க கால இலக்கியங்கள், இதிகாசங்கள் மற்றும் புராணங்களிலேயே சான்றுகள் உள்ளன. ( அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்)

காதல் திருமணமா, நிச்சயிக்கப்பட்ட திருமணமா? தற்காலத்தில் திருமணங்கள் அநேகமாக குழப்பமான நிலையில்தான் இருக்கின்றன. 19-ம் நூற்றாண்டைப்போல தற்காலப் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இல்லாததால், ஆண்களுடன் பேசும்,பழகும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. இருபாலரும் ஒருவர் பால் ஒருவர் ஈர்க்கப்படும் சூழ்நிலையும் உருவாகிறது. விளைவு ? நிறைய காதல் திருமணங்கள். ஐயமுள்ளவரை பயம் இல்லை என்பதுபோல் எல்லாம் நன்றாக நடக்கும் வரை தவறு ஒன்றும் இல்லை. ஆனால், நிறைய கல்யாணங்களில் பிரச்னைகள் உருவாகி அவை தடுமாறுகின்றன. இதற்குக் காரணங்கள் என்ன?

முதல் காரணம் தவறான தேர்வுதான். மேலை நாட்டு நாகரிகத்தை அளவுக்கதிகமாகக் கடைப்பிடிப்பதும், உடைகளின் மாறுதலும், வரதட்சிணை கொடுமையால் கல்யாணம் தாமதமாகிவிடுதலும், சமயங்களில் பெற்றோர்கள் பெண்களை பொருளாதாரத்திற்கு சார்ந்திருத்தலும் காதல் கல்யாணங்களுக்கு வழி வகுக்கின்றன. அதில் தவறில்லை. ஆனால், தாங்கள் காதல் வயப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் சிறு வயதினர் பலருக்கு அது காதல் அல்ல, வெறும் பருவக்கவர்ச்சி தான் என்பது புரிவதில்லை. குறைந்த பட்சம் 20 வயதாவது ஆன பின்பு வரும் காதல் என்றால் அது நீடிக்கும். அப்போதும் செடிகளின் விதைகளுக்கு உறங்கும் காலம் என்று கொடுப்பதுபோல், தேவையான அளவு கால அவகாசம் கொடுத்தபின்பும் அந்த ஆண் பெண்களிடையே நேசம் நீடித்தால்தான் அதைக் காதல் எனக் கொள்ள முடியும்.



**மைதிலி சம்பத்.**
செகந்திராபாத்

சரி, கல்யாணத்திற்கு வருவோம். உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பிறகுதான் காதலும் மற்றவையும் ( பார்த்தால் பசிதீரும் என்பதெல்லாம் கவிதைகளில் மட்டுமே சாத்தியம்.) இவற்றைத் தன் மனைவிக்குக் கொடுக்க ஒரு ஆண் தயாராக இருக்கின்றானா? இயலாதென்றால் அதற்குமுன் திருமணத்தைப் பற்றி யோசிக்காமலிருத்தலே நன்று.

சில சமயங்களில் பெண்கள் சம்பாதிக்க ஆரம்பித்திருப்பர். சரி, கல்யாணம் செய்து கொள்வோம் என்று தீர்மானித்தால், ஆணுக்கு அன்றில்லாவிடினும் திடீரென ஒரு நாள் தன்மான உணர்ச்சி வந்தால் மணவாழ்க்கையில் உரசல்தான்.

எந்தப் பெற்றோரும் தங்கள் பெண்ணை நன்கு வைத்துக் காப்பாற்றக்கூடிய மருமகனையோ,அல்லது தன் பையனுடன் ஒத்துப்போய் மகிழ்ச்சி தரக்கூடிய மருமகளையோதான் தேர்ந்தெடுக்க விரும்புவர். அது இருக்காதோ என்று பெரியவர்களுக்கு சந்தேகம் வரும்போது தான் அவர்கள் மறுப்பதும், காதலர்கள் வீட்டைவிட்டு வெளியேறி ரகசியமாகக் கல்யாணம் செய்து கொள்வதும் நடக்கின்றன. வேறு ஜாதியில் தங்களுக்கு மருமகள் வருவதைக் கூட பெற்றோர்கள் ஏற்கப் பழகிவிட்டனர். வேறு மதமானால் பிரச்னைகள் நிச்சயமாக வலுக்கத்தான் செய்யும்.

இதற்கு என்ன வழி? குழந்தைகள் சற்று பெரியவர்கள் ஆகும்போதே தோழமையுடன் அவர்களை இது போன்ற விஷயங்களில் சற்றே ஜாக்கிரதையுடன் இருக்குமாறு அறிவுறுத்துவது பெற்றோர்களின் கடமையாகும். தாங்கள் யாரையாவது விரும்பும்போது அதை தைரியமாக தங்கள் பெற்றோரிடம் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை அவர்களுக்கு உருவாக்கித்தருவது மிகவும் அவசியம்.

முதலில் காதல் வயப்பட்டிருக்கிறோம் என நினைக்கும் இரு பாலருமே தங்கள் இருவருக்கும் பொருளாதாரத்திலும், மற்றும் பழக்க வழக்கங்களிலும் ஒத்துப்போகுமா என்று சீர் தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக சரிவராதென்றால், அப்போதைக்கு மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும், மறந்துவிடுவதுதான் வாழ்க்கையில் நிம்மதிக்கு வழி. திரைப்படங்களில் வேண்டுமானால் பங்களாவாசியான பெண் புருஷன் வீட்டிற்கு வந்து விறகடுப்பில் சட்டிப்பானையில் சமைப்பதெல்லாம் சரிவரும்.

இம்மாதிரி ஏற்ற தாழ்வுள்ள காதலை பெற்றோர் ஒப்புக்கொள்ளாத போது, இவர்களாகவே திருமணம் செய்து கொண்டு தனிக்குடித்தனம் தொடங்குகிறார்கள். அந்தப் பெண் கர்ப்பமடைந்ததுமே பிரச்னைகள் தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன. பிரசவமும், குழந்தை வளர்ப்பும் என்ன சாமான்யமா? அந்த நேரத்தில் பெரியவர்களின் துணை மிகவும் அவசியமாகிவிடுகிறது. குழந்தைக்கு அடிக்கடி வரும் ஜுரம் போன்றவை ஒரு பெண்ணை □தான் பாட்டிற்கு இருந்தோம், இதிலெல்லாம் மாட்டிக் கொண்டோமே, கணவன்

மட்டும் இன்னும் காதலனாக இருந்த காலம் போலவே இருக்கிறானே... என்ற சுய பச்சாதாபத்தில் தவிக்க வைக்கிறது. ஆணுக்கோ "ஏண்டா இந்த குடும்ப வாழ்க்கை? வீட்டிற்குப்போனாலே டாக்டரிடம் போக வேண்டும் அல்லது டயபரும், பால் பவுடரும் வாங்க வேண்டும் போன்ற தொணதொணப்பிலும் மாட்டிக் கொண்டோமே" என்ற எரிச்சல்.

இதே காதல் கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட கல்யாணமாக மாறியிருந்தால் பெரியவர்களின் அங்கீகாரமும் ஆதரவும் இருக்கும். வாழ்க்கை கசக்காது. எப்படி அங்ஙனம் மாற்றுவது? பெற்றோரிடம் இளைஞர்கள் எடுத்துச் சொல்லி, பொறுமை காத்து, சம்மதம் பெறுவதுதான் வழி.

பெரியவர்களுக்கு ஒரு யோசனை. நீங்கள் பெற்று, கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து, அருமையாக 25 வருடங்கள் போல் வளர்த்த உங்கள் செல்வங்கள் வாழ்க்கையின் முக்கியமான ஒன்றைக் கேட்கும்போது கூடுமானவரை மறுக்க வேண்டாமே ! சற்றே உங்கள் பிடிவாதத்தை விட்டுவிட்டு அந்தத் திருமணம் வெற்றி பெறுமா என்று யோசிக்கலாமே. எப்படியும் இரண்டு வருடங்களோ, நான்கு வருடங்களோ போன பிறகு ஏற்றுக் கொள்ளத்தானே போகிறீர்கள்? அதை நீங்கள் நிறைவாக, முன்னதாகவே ஏற்றுக்கொண்டு. மனதார வாழ்த்தி, அவர்களை மகிழச் செய்யுங்களேன். பிள்ளை, பெண் அவர்கள் உறவுகள் இல்லாமல் நீங்கள் மட்டும் எதிர்காலத்தைத் தள்ள முடியுமா? வீம்புக்காகத் தள்ளினாலும், அதில் நிம்மதி எங்கிருக்கும்? இந்த விஷயங்களை யோசிக்க வேண்டும்.

நீங்கள் மறுக்கும்போது, அதுவும் ஆண்களைப் பெற்றவர்கள் மறுக்கும்போது மற்றுமொரு அபாயம் இருக்கிறது. உங்கள் ( அநேகமாக தற்கொலை) பயமுறுத்தலுக்கு பயந்து கொண்டு நீங்கள் சொல்லும் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளும் உங்கள் மகன் ஏற்கனவே யாரையாவது ரகசியத் திருமணம் செய்து கொண்டிருக்கலாம். அது வெளியே வரும் நேரம் என்னவாகும்? எத்தனை பேர் எத்தனை விதமாகப் பாதிக்கப்படுவார்கள்? இப்படி எல்லாம் காதில்விழத்தானே செய்கிறது?

அநேகம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் காதல் கல்யாணத்தை ஒத்துக் கொள்ளாதது நாலு பேர் என்ன சொல்வார்களோ என்ற காரணத்தினால்தான். யோசியுங்கள். அந்த நாலு பேர் உங்களுக்குப் பேரன், பேத்தியை பெற்றுத் தரப்போகிறார்களா? உங்கள் முதுமையில் துணை நிற்கப்போகிறார்களா? வீட்டிற்கு வீடு வாசற்படி. அனைத்து இல்லங்களிலும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒன்றிரண்டு கல்யாணங்கள் நடக்கத்தான் செய்கின்றன.

இப்போதெல்லாம் பெண்கள் தரமான தொழில் கல்வி பெற்று பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து விடுகிறார்கள். திருமண விஷயத்திலும் அவர்களுடைய எதிர்பார்ப்பு அதிகமாகவே இருக்கிறது. 30 வயது ஆகிவிடுவதால் பிறந்த வீட்டில் இருப்பதைப் போலவே புகுந்த வீட்டிலும் வாழ நினைக்கிறார்கள்.

*சகிப்புத் தன்மையும்,
விட்டுக் கொடுத்தலும்
அடிபட்டுப் போகிறது.
வருகிறவனுக்கு பெற்றோர்
இருக்கக்கூடாது. தனி
வீடும், ஐந்து இலக்கத்தில்
தன்னை விட அதிக
சம்பாத்தியமும், கார்
போன்ற வசதிகளும்
நிச்சயமாக இருக்க
வேண்டும். என்பது
போன்ற தேவைகளை,
திருமணத்தின்
போதே மிகவும்
வலியுறுத்துகிறார்கள்.*

*இவை போன்ற
கோரிக்கைகளை
பெற்றோர்
ஆதரிக்கக்கூடாது.
எடுத்துச் சொல்லி புரிய
வைக்க வேண்டும்.
திருமணங்களை மிகவும்
தள்ளிப் போடக்கூடாது.
இதில் வயதாகி
மகப் பேறு போன்ற
உடல்கூறு சம்பந்தப்
பட்ட பிரச்னைகளும்
தவிர்க்கப்படுகின்றன.*

*ஆக, இரு தரப்பினரும்
முயன்று காதல்
கல்யாணங்களை
நிச்சயிக்கப்பட்ட
கல்யாணமாக மாற்றினால்
குடும்பக் கோர்ட்டுகளில்
கூட்டத்தைத்
தவிர்க்கலாம்.!!!
எல்லோரும் என்றும்
இன்பம் காணலாம்.*

# துளிப்பா

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

அலைகள் வந்து
கரையை தொட்டது
புயல் சீற்றம்

சீற்றமாய் எழுந்து
ஓடிக் கொண்டிருந்தது
காட்டுக்குள் அரவம்

அரவத்தின் நடமாட்டம்
அதிகமாய் இருந்தது
எரிபொருள் விலை

விலை ஏற்றம்
அறிவிப்பு வெளியிட்டது
பணி நியமனம்

நியமன வேலைகள்
குறைந்து வருகின்றன
மழைநீர் சேகரிப்பு

சேகரிக்கப்பட்ட நெகிழிகள்
அழித்து ஒழிக்கப்பட்டன
கள்ளச்சாராய ஊறல்

ஊறிடும் ஊற்றுநீர்
சுவையாக இருந்தது
சிறுதானிய உணவு

உணவே மருந்து
மூத்தோர் சொன்னது
அனுபவ பாடம்

பாடங்கள் யாவும்
மாறிக் கொண்டிருந்தன
பழக்க வழக்கம்

வழக்கமான பணிகளில்
ஓடிக் கொண்டிருந்தன
நீரின் அலைகள்

# போதை வரைந்த பாதையிலே...

போதையின் மாயைக்குள்
புதைந்து கிடக்கின்றாய்
பாதையின் ஓரங்களில்
புரண்டு விழுகின்றாய்

பேதையின் வாழ்க்கையை
பறித்து எறிகின்றாய்
பிஞ்சுகளின் உயிரை
பலியாய் எடுக்கின்றாய்.

பண்பட்ட வாலிபத்தை
புண்படுத்தி அழிக்கின்றாய்
பண்பற்ற மனிதனாய்
பாரினில் இகழப்படுகின்றாய்

படித்த கல்வியை
பிடித்துக் கிழிக்கின்றாய்
பிடித்த போதைக்குள்
புகுந்து கொள்கின்றாய்.

புதிய உற்சாக மாத்திரைக்குள்
புத்தியை தொலைக்கின்றாய்
பாழாக்கி உன்னையே
பரிதாபமாய் இழக்கின்றாய்

பிதாவை அவமானப்
படுத்தி பேசுகிறாய்
பெற்றவளை பணத்திற்காய்
பிசாசு என்கின்றாய்.

பூவையரின் மலர்ந்த
புன்னகையை பறிக்கின்றாய்
பறித்த உயிரை
புழுதிக்குள் புதைக்கின்றாய்.

போதையின் பாதையிலே
பல நாளாய் கிடக்கின்றாய்
பாசமான வாழ்க்கையை
பாழாக்கி விடுகின்றாய்.

**றஹீமா இன்ஷார்**
மீராவோடை

# இதுதான் விதி!

அகலம் நீளம் அறிய முடியா
அற்புதப் பாதை வாழ்வு
முகம்நக சந்தி முன்னும் பின்னும்
முடிவில் லாதத் தொடரு
சிகரம் அருவி சிறுசிறு நதியென
சிறப்புப் பலவும் இதிலே
அகம்புற மென்ற அரியப் பக்கம்
அடங்கியி ருக்குது அதிலே!

வாய்மை பொய்மை வகைப் பிரித்தாலும்
வல்லமைக் கொண்டது பொய்யே
ஆய்வின் முடிவு அளிக்கும் சான்று
அல்ல வல்லமை மெய்யே!
ஐயம் தெளிவு அதன்பின் வாழ்வு
அடையும் இலக்கு வட்டம்
ஐயோ இதுதான் அடையும் எல்லை
ஆண்டவன் போட்ட சட்டம்!

– பொன்மணிதாசன்



# அடரன்பின் நெடுங்காலத்தில்...

தனிமையின் இரகசிய அறைக்குள்
சேர்ந்து வாழ்கிறாய்
மிகமெல்லிய ஒளியில்
அழகாகும் இரவு போல..
இன்பமுயக்கத்தின்
திருச்சோபனம் இதயத்தில்.

ஒவ்வொன்றாய் அவிழும்
விண்மீன்களில் இருந்து
உன் சுகந்தப் பேரணி
கடல்துளைத்து அகணியடைந்து
அகிலம் கனிந்து சூழும்

அளந்து பொழிகின்றதா மழை?
ஆதியின் நீட்சியாய் ஓயாது நனைக்கும்
அடரன்பின் அற்புதங்களில்
நித்திய ரோஜாக்களின் சிவப்பில்
ஊனிக்கொண்டிருக்கிறேன்

ஆழத்தின் நேசத்தை
சுடரும் புலரியாலோ
சௌந்தர்யத்தின் வசந்தத்தாலோ
கனன்று எழுந்து வளரும்
தீயாலோ கற்பிக்க முடியுமா என்ன?

தியாகத்தின் தேன்சுவனத்தில்
நோன்பிருந்த காதையெல்லாம்
வைகறையின் புனிதத்தில்
எழுதிய வேதங்களாகும்.
புசித்திருக்கத் தோன்றாத
பசி கிளர்த்தும் போழ்து

நினைவுச்சுரங்கத்தின் இரகசியங்களை
இரத்தத்தில் தோய்த்து
சாந்தி கொள்கிறேன்.

கண்மூடித்தனமானதுதான் எனினும்
காடுபோல சடைத்திருக்கும் அதிமேதகு
ரோஜாத் தோட்டம் எங்கு காண்பாய்?
தீவடுவில் முத்தம் பெற்ற
மூங்கிலின் துளைகள் பூரணத்துவமாகி
நேசநாதத்தை பிரபஞ்சத்திற்குப்
படைக்கவில்லையா?

அருகாமை தொலைத்ததில்
எழுமடங்காத் தாகம் அதீதமாய்
உன்னை என்னிடம் கொண்டு
சேர்ப்பிக்கும்.
அடரன்பின் நெடுங்காலத்தில்
ஆனந்தமாய் நடந்து செல்கிறேன்.
உனது இருப்பின் கடலாய் நீ
ஒரு மீன் குஞ்சாய் நான்!!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர். இலங்கை





# ரஹீமா வம்சம்

**த.இர்ஃபான்**

ரஹீமா என்றொருவள் இருந்தாள். அவளுக்கு மூன்றுப்பிள்ளைகள், மூன்றுமே ஆண் பிள்ளைகள் தான். ஒன்றன் பின் ஒன்றாக மூவருக்கும் கல்யாணம் செய்து வைத்து அழகுப்பார்த்தாள். முதலாவது மகன் இளம் வயதிலேயே மரணம் கொண்டு சென்றது. மற்ற இரு பிள்ளைகளுக்கும் தலா மூன்று குழந்தைகள். இரண்டு பெண் ஒரு ஆண் . பதினெட்டு பூர்த்தியாகும் தருவாயில் இரண்டு ஆண் மக்களும் ஷார்ஜாவில் ஏதோ சேக்வீட்டில் பணியில் அமர்ந்தார்கள். மூத்த மகனுக்கு இரண்டு குழந்தைகள் பொண்ணொன்று ஆணொன்று. அந்த பையனையும் கூட்டிக்கொண்டு போய் தண்ணீர் கம்பெனியில் மூத்த மகன் சேர்த்துவிட்டார். ரஹீமா தன்னுடைய வீட்டிற்கும் தனது தங்கை வீட்டிற்கும் ஆண்டுக்கு 24 முறைக்கு மேல் வலம் வருவாள். நடுமகனுடைய மனைவி தான் குடும்பத்தை நடத்திவருவாள். ஆயினும் அவளுக்கு மரியாதையோ, கௌரவமோ கணவனும் கொடுக்கவில்லை மற்றவர் களும், அவளுக்கு 15 வயது கணவனுக்கு

30 வயது, வயது வித்தியாசம் பாதிக்கு பாதி. கொடுமை, சித்ரவதை இவையாவும் அங்கு பிசகாமல் அவளுக்கு நிகழ்ந்த ஒன்று. மனைவிக்கு பணமோ நகையோ வாங்கித்தந்ததே இல்லை கணவனாகிய மூத்த மகன்.

வெளிநாட்டில் இருப்பதால் தெனா வெட்டு, திமிர், தலைக்கணம் தன் மனைவி வீட்டார்களை மதிக்காதது இப்படி நீண்டுக்கொண்டு போன ஒன்று. திருமணத்திற்கு பிறகு 19 ஆண்டுகள் அதே சேக் வீட்டில் பணிப்புரிந்த நடுமகன். தன் மனைவியினுடைய தந்தை இறந்தப்போது ஆறுதல் தெரிவிப்பதற்காகவே 4,5 நாட்கள் விடுப்பு சொல்லாமல் எடுத்ததினால் சேக்கிடம் வேலை செய்த ஊழியர் சில பேர் நடுமகனைப்பற்றி புகார் செய்து சீட்டைக்கிழித்து ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். இளைய மகன் அதே ஸ்தலத்தில் வேறொரு வேலை செய்து பகுதிநேர உழைப்பு செய்து தன் கடின உழைப்பால் தொண்டு நிறுவனமும் ஒன்று ஆரம்பித்து பேரும் புகழும் பெற்று தன் நிலையை உயர்த்திக்கொண்டார். மூத்த மகனுடைய மகனை தாயிடமிருந்து பிரித்துவிட்டாள் ரஹீமா. இது நடந்து சில காலத்திற்கு பிறகே அந்த பாலகனுக்கு தெரியவந்தது. அதுவரை ரஹீமா தான் அம்மா என்று எண்ணிக்கொண்டிருந்த காலக்கட்டம் அது.நடுமகன் ஊர் வந்த ஓராண்டிலேயே மூத்த மகனுடைய மகனுக்கு கல்யாணம் செய்து வைத்தார்கள். குடும்பமே ஒன்று கூடி, அதற்கு முன்பாகவே நடுமகனுடைய முதல் மகளை மூத்த மகனுடைய மகனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று வற்புறுத்தல். அவள் படித்துக்கொண்டிருந்தாள் அவளும் ஒத்துக் கொள்ளவில்லை. அவளையும் பாடாயப்படுத்தி நடுமகனாகிய தந்தை. ஒரு கட்டத்திற்கு மேல் விசம் குடிக்கவும் தயாராகிவிட்டாள். பிறகு வேறொரு பெண் பார்த்து மூத்த மகனுடைய மகனுக்கு திருமணம் அரங்கேறியது. நடுமகன் ஷார்ஜாவிலிருந்து வந்ததோடு சரி. எந்த வேலைக்கும் செல்லவில்லை. உண்பது, உறங்குவது, செடி கொடிகளை பராமரிப்பது. மனைவியை தன் பிள்ளைகளை மிரட்டுவது இதே தான் வாடிக்கை. சும்மாவே சம்பாதிக்காமல் இருந்ததில் ஜமாத்தில் முக்கிய பதவி பத்தாண்டுகளுக்கு மேல் நடுமகன் வகித்தார்.

நடுமகனுடைய மனைவி நிஷ்மா. அவள் என்ன செய்வாள். மூன்று குழந்தைகளின் படிப்பு, குடும்பசெலவு அதற்கு என்ன செய்வாள் என்ற எண்ணம் துளிகூட இல்லை நடுமகனுக்கு. நிஷ்மா தன் அண்ணனிடம் மாதம் 2000ரூ. வாங்கி அதைக்கொண்டு குடும்பத்தை நடத்துவாள். தன் தம்பியும், தங்கையும் ஏராளமாய் அந்த மூன்று குழந்தைகளுக்கும் நிறையவே செய்தனர் வளர்ந்த பின்னும். ஒரு நாள் வழக்கம்போலவே தன் தங்கை வீட்டிற்கு சென்றப்போது ரஹீமாவின் ஏற்கனவே முறிந்த காலில் ஆணிக்காலிருந்து இரத்த கசிவு வந்தது. நிஷ்மாவுடைய மூத்த மகள் தான் காலில் டிரஸ்ஸிங் செய்துவிட்டாள். நீரிழிவு நோய், இரத்த கொதிப்பு 25 ஆண்டுகளுக்கு முன் தாழ்வாரத்தில் வழுக்கி விழுந்து கால் முறிவு போன்றவை இருந்தும் ரஹீமாவிற்கு வாய்க்கொழுப்பு ஜாஸ்தி தான். இங்கு உள்ளதை அங்கு சொல்வது அங்கு உள்ளதை இங்கு சொல்வது. நடுமகனைப்பற்றி இளையமகனிடம் புகழ்ந்துப்பேசுவது, இளையமகனைப்பற்றி நடுமகனிடம் அவதூறு பேசுவது. இது பலர் அறிந்த உண்மை. தன் கணவன் வேலைக்கு போகாததால் அத்தனை சுமைகளும் தன்னை தாக்கிக்கொண்டிருக்க ஒரு நாள்

வழக்கம் போலவே தன் தங்கை வீட்டு வேலைக்காரனோடு வீடு வந்த ரஹீமா காலை சுத்தம் செய்ய ஆஸ்பத்ரி தான் செல்ல வேண்டும் என்பதால் நிஷ்மாவிடம் பணம் ஏதும் இல்லாததினால் அந்த வேலைக்காரனிடம் என்னாலலாம் பார்க்க முடியாது. உடம்பு நல்லாருக்குறப்ப ஊர் ஊரா சுத்த வேண்டியது, உடம்புக்கு பலா ஏதும் வந்துட்டா இங்க வந்துடுறது என்று நிஷ்மா கூற கணவனாகிய நடுமகன் வாய் ஏதும் திறக்காமல் இருக்க, தன் துணிமணி ஜாமான் ஒன்றுகூட விடாமல் எடுத்துக்கொண்டு தன் இளையமகன் வீட்டிற்கு சென்றாள். திரும்பி வரவே இல்லை நடுமகன் வீட்டிற்கு. அங்கு சென்றப்பிறகும் உடல்நிலை சுமூகமாக இருக்கும் போது மூத்த மகனுடைய மகன் வீட்டிற்கு செல்வது, தங்கை வீட்டிற்கு செல்வது இப்படியே இருக்க. அங்கேயும் கெடுபிடி வந்தது எங்கேயும் செல்ல தடை உத்தரவு. அதன் பிறகு இளையமகனிடம் என்ன பேசினாலோ என்று தெரியவில்லை. அண்ணன் தம்பி இருவரும் பேசிக்கொள்வதில்லை. எங்கே யேனும் வழித்தடத்தில் இருவரும் எதேச்சை யாய் சந்தித்துக்கொண்டால் ‘ஸலாம்‘ சொல்லிக்கொள்வதோடு சரி மற்ற பேச்சுகள் எதுவும் இல்லை.மேலும் மேலும் நிஷ்மா பாதிப்படைந்தாள். மூத்த மகளுக்கு கல்யாணம் செய்யனும், நடுமகனுக்கு மேற்ப்படிப்பு படிக்க வைக்கனும் இளையமகள் வேறு ஒருத்தி இருக்கிறாள் என்ன செய்வதென்று தெரியாமல் திக்கற்று போயிருந்தாள்.

நிஷ்மா திருமணமனமான புதிதில் தீர்க்கதரிசியான அவளது தந்தை ஒரு மனையை மருமகனிடம் காண்பித்து இதை வாங்கியே ஆக வேண்டிமென்று வற்புறுத்தி வாங்கி வைத்திருந்த மனையை 12 லட்சத்திற்கு விற்று அதிலுள்ள பணத்தைக்கொண்டு நகை சீர்வரிசை போன்றவை செய்து இன்ஜீனியர் மாப்பிள்ளையிடம் தன் மகளை கரை சேர்த்தனர். நடுவில் உள்ள மகனின் வயதை எண்ணிக்கொண்டே வந்தாள் நிஷ்மா, இவனுக்கு 18வயது ஆகிவிட்டால் நம் கஷ்டம் தீருமே, எங்கேயேனும் யார் மூலமாவது ஒரு வேலையை ஏற்பாடு செய்துக்கொடுத்தால் போதுமே என, நிஷ்மாவின் கணவன் எப்போதும் போலவே யாரைப்பற்றியும் கவலை இல்லை. அவளது மகனும் வளர்ந்தான் மேற்படிப்பு படித்தான் எந்த வேலையோ ஏது வேலையோ தன்னை உட்படுத்திக்கொண்டு தியாகத் தோடு உழைக்க துவங்கினான். ஒரு நாள் சம்பளம் 20 ரூபாய்க்கு, பிறகு படிப்படியாக லட்சங்கள் வரை 10 ஆண்டுக்குள் சம்பாதிப்பதற்கு தன்னை வலுவாக்கிக்கொண்டான். ரஹீமாவை பார்க்க அவ்வப்போது செல்வான், அதுவும் நயந்து நயந்து பயந்து பயந்து சைக்கிளில்தன் தந்தையினுடைய தமையன் வீட்டிற்கு, சில சமயம் வாசலில் உட்கார்ந்திருப்பாள்,சில சமயம் கொல்லைப்புறத்தில் உட்கார்ந் திருப்பாள், சில சமயம் அறையில் சாய்ந்திருப்பாள், ரஹீமாவிற்கு 85ஐ வயது கடந்துக்கொண்டிருந்தது. நொண்டி நொண்டி நடக்க கூடியவள். நிஷ்மா மகன் நியாஸ்ஒவ்வொருமுறைசெல்லும்போதும் பல மாற்றங்களை கண்டுக்கொண்டே இருந்தான் நியாஸிற்கு புத்தகம் கொடுப்பாள், பண்டிகை தினமென்றால் காசும் கொடுப்பாள். நடுமகனுடைய மகள் திருமணத்திற்கும் ரஹீமா வரவில்லை. மற்றும் இளையமகனுடைய குடும்பமும். நியாஸ் ஒருமுறை சென்றப்போது வாசல்கதவு பூட்டப்பட்டிருந்தது, யாரும் திறக்கவில்லை நீண்ட நேரம் காத்திருந்து வீடு திரும்பினான் இப்படியும் சில பல நாட்கள். ஒரு முறை நியாஸ் ரஹீமாவை பார்க்க போனப்போது மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தாள். எங்கே என்று

அவன் அவ்வீட்டார்களிடம் கேட்க அறையினுள்ளிருக்கும் கழிவறையை காண்பித்தார்கள். அதற்குள் அவன் சென்றான் சிறியதொரு பேன், ஒரு மேஜை, இரண்டு பெஞ்ச் அதன் பக்கவாட்டில் மேற்கத்திய டாய்லெட் பார்த்து கதிகலங்கிப்போய்விட்டான் பேரனாகிய நியாஸ். சில சமயம் ரஹீமா பேசுவாள், சில நேரம் அவளால் பேச முடியாது. வயதாகிவிட்டதினால் அவளால் எதுவும் செய்ய முடியாமலும் போய்விட்டது. கழிவறையே அவளது அறை என்பதால் மிகவும் துர்நாற்றம் வீசிய வண்ணமிருந்தது கூடவே பினாயில் வாடையும்.

வெளிநாட்டிலேயே இளையமகன் இருப்பதினால் ரஹீமாவை பார்த்துக் கொள்ள ஒரு செவிலியரையும் வேலைக்கு அமர்த்தினார்கள். பகல் முழுக்க இருப்பாள் அவள். இரவானால் சென்று விடுவாள். பிறகு வீட்டிலிருக்கும் மருமகளே ரஹீமாவின் சிறுநீர், மலம் போன்றவற்றை சுத்தம் செய்ய வேண்டும். இளையமகனின் மனைவி தன் தாயை விட ஒரு படி மேல் கவனித்துக்கொண்டாள். பல முறை நியாஸ்... ரஹீமாவின் நிலைப்பற்றி கூறியும் நிஷ்மாவும் வரவில்லை அவனுடைய தந்தையும் வரவில்லை. ஒரு நோன்புத்திருநாளின் போது தான் வலுக்கட்டாயமாக தந்தையை அழைத்துக்கொண்டு சென் றான் மோட்டார் சைக்கிளில். ரஹீமா இருந்த கோலத்தை பார்த்து மடமடவென மகனுக்கு கண்ணீர் சொறிந்தது. வேறென்ன செய்வது நாமும் வேலைக்கு செல்லவில்லை சென்றிருந்தால் இந்த நிலை தன் தாய்க்கு வந்திருக்குமா என. மிகவும் ரஹீமா கவலைக்கிடமாக போனதினால் செவிலியரும் வருவது இல்லை. ஆஸ்பத்ரியிலும் சேர்க்கவில்லை மூச்சு மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் பஜ்ர் தொழுகையின் பிற்பாடு தனது சின்னத்தா மகனை பள்ளிவாயிலில் கண்டான் நியாஸ் 'அத்தம்மா மௌத்தாய்டாங்க' என்ற சொல் அவனுக்குள் அமிலத்தைப்போன்று இறங்கியது. பிற்பாடு ஓடோடி வந்து வீட்டிலுள்ளவர்களை ஆட்டோ ரிக்ஷா வில் அழைத்துச்சென்றான் நியாஸ். தஹஜ்ஜத் நேரத்தில் சுமார் 4:10 மணிக்கு இறந்துட்டாங்க அப்பவே குளிப்பாட்டியாச்சு என்று. ஈசி சோபாவில் நடுமகன் உட்கார்ந்திருக்க, இளையமகனை மட்டுமே பலர் பேசிக்கொண்டிருக்க நியாஸ் தன் தந்தையின் சார்பில் பள்ளி நிர்வாகத்திற்கு 12000 ஆயிரம் பணம் கொடுத்தான்.

எல்லா கிரியைகளும் இளையமக னுடைய மைத்துனரே கவனித்துக் கொண்டார். தந்தை சொன்னதுப்போலவே நியாஸ் மாங்கன்றொன்று, ரோஜாசெடி யொன்று வாங்கினான். பலத்த மழை பேய ஆரம்பித்துவிட்டது. அதனால் மரப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்ய நிர்வாகம் ஒப்புக்கொண்டது. கஃபன் துணி 2 மீட்டர் வேண்டும். போதிய அளவு துணி இல்லை என்றார்கள் ஓடோடி சென்று வாங்கி வந்தான் நியாஸ். அடக்கம் செய்துவிட்டு வந்தவர்கள் விலகிச்சென்றார்கள்...

'உறவுகள் விலகிச்செல்லுமா' என என்ற பரிதவிப்போடு சென்றான் நியாஸ்.

- முற்றும்



## ஒன்றில் ஐந்து

1.
**அறுசீர் விருத்தம்**
மா மா மா மா / காய் மா

ஏறு முகமே இளையோன் அழகே எழிலுருவே! போற்றி
வீறு நடையே விரும்பும் அமுதே விளைமலரே! போற்றி
ஆறு முகனே அறிவே தருவாய் அருள்மலையே! போற்றி
ஊறு களைவாய் உடனே வருவாய் உயர்குருவே! போற்றி

2.
**கட்டளைக் கலித்துறை**

ஏறு முகமே இளையோன் அழகே எழிலுருவே!
வீறு நடையே விரும்பும் அமுதே விளைமலரே!
ஆறு முகனே அறிவே தருவாய் அருள்மலையே!
ஊறு களைவாய் உடனே வருவாய் உயர்குருவே!

3
**கலி விருத்தம்**
தேமா புளிமா புளிமா புளிமா

ஏறு முகமே இளையோன் அழகே
வீறு நடையே விரும்பும் அமுதே
ஆறு முகனே அறிவே தருவாய் !
ஊறு களைவாய் உடனே வருவாய்

4.
**வஞ்சி விருத்தம்**
தேமா புளிமா புளிமா

ஏறு முகமே இளையோன்
வீறு நடையே விரும்பும்
ஆறு முகனே அறிவே
ஊறு களைவாய் உடனே!

5.
**வஞ்சித்துறை**
தேமா புளிமா

ஏறு முகமே
வீறு நடையே
ஆறு முகனே!
ஊறு களைவாய்!

**இராம வேல்முருகன்** வலங்கைமான்

# முனி

என்ன உண்டு இனி
எண்ணி எண்ணி முனி

உன்னை எண்ணி முனி
உலகை எண்ணி முனி
ஊக்கம் இன்மை முனி
உறங்கிக் கிடத்தல் முனி

ஈகை ஒழித்தல் முனி
ஈனப் பேச்சை முனி
ஓராண் வழியை முனி
ஒத்து ஊதலை முனி

புரளிப் பேச்சை முனி
புன்மை செய்வார் முனி
பூட்கை செய்தல் முனி
பூகம்ப வார்த்தை முனி

நாக நாக்கை முனி
வேகம் இன்மை முனி
சாதியம் பேசுவார் முனி
சந்ததி அழிப்பார் முனி

இரண்டகம் செய்வார் முனி
இடக்கு முடக்கரை முனி
தாறு மாறுகள் முனி
தகாத செயல்கள் முனி

சோம்பல் தனத்தை முனி
தோம்பல் எதற்கு இனி...?

**- தமிழ்க்கீரன்**
ஈழநாடு.



# ஆடம்பரம்



**பரணி சுப சேகர்**
மதுரை தமிழ்நாடு

அளவுகோல் ஏதுமில்லா அட்சய பாத்திரம் ஆடம்பரம். எடுக்க எடுக்க குறையாத மன விருப்பங்களின் ஊர்வலம் ஆடம்பரம். 'நாம் தேடிக் கொள்ளும் வறுமை என்கிறார் சாக்ரடீஸ்'. வசதிகள் நிரம்பப் பெற்று இருந்தாலும் எளிமையான வாழ்வு வாழ்வோருக்கு ஆடம்பரம் பிடிப்ப தில்லை. எளிமையானவர் களுக்குரிய மன நிறைவும், நிம்மதியும், ஆடம்பரத்தை விரும்புவோருக்கு இருப்பதில்லை. ஆடம்பரம் தனியாக நமக்குள் உருவாவது இல்லை. நம் பார்வையில் படும் காட்சிகளே ஆரம்பத்தின் படிக்கட்டுகளாக. கற்பனை யான ஒரு தடத்தில் நாம் இப்படியில்லை யென்றால் மதிக்க மாட்டார்கள் என்ற கண்ணோட்டத்தில் கடன்பட்டு ஆடம் பரத்தை உடுத்திக் கொள்வோர் ஒன்று மில்லாமல் ஒரு நாள் தெருவிலே நிற்பார்கள் என்றால் பொய்யில்லை.

ஆசைக்கு அளவில்லை என்பதால் ஆடம்பரத்தின் எல்லைகள் தெரிவ தில்லை. உன்னை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்று நினைப்பதில் எந்தத் தவறும் இல்லை. உனது மதிப்பானது உனது அறிவாலும் செயலாலும் இருக்க வேண்டுமே தவிர ஒன்றுக்கும் உதவாத ஆடம்பரத்தால் வரக்கூடாது. ஆடம்பரம் ஒரு போதை.. மற்றவர்களால் மனதுக்குள் ஏறும் இராச போதையே ஆடம்பரம். பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கலாம் என்பது ஏற்புடைய ஒன்றே. அத்தியாவசியம் எது ஆடம்பரம் எது என்பதில் புரிதல் வேண்டும். ஆடம்பரத்தை நாம் புரிந்து கொள்ளாத தால் குழந்தைகளை தவறாக வளர்க்கின்றோம். கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தால் அவன் நல்லவனாக வளரமாட்டான். பிடிவாதம் தலைதூக்கும். வார்த்தைகள் வலியைத் தரும். யாருக்கும் அடங்காதவனாகவே வளர்வான்.

பிள்ளைகள் வளர்ப்பில் பெற்றோர்கள் கடமை மிக முக்கியமானது. அவனை அவன் நோக்கத்திற்கு வளர விடக்கூடாது. இளங்கன்று பயமறியாது. கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தால் பிடிவாதம் தலைக்கேறி எதையும் அடைய வெறி கொள்வான். ஆடம்பர வெறியாளர்களின் வாழ்க்கை வரவு செலவு பார்ப்பதில்லை. அவசியமா என்று கூட பார்க்காமல் அலைபாயும் மனதோடு அழகுபூச்சுக்களோடு தர்க்கம் செய்கின்றனர். நல்லதோர் நிலையில் பணி செய்பவனுக்கு மாதம் ஒரு நாள் தான் காசு வரும். முப்பது நாளும் செலவிருக்கும். சோற்றுக்கிருக்கும் காசைக் கூட பாழாய் போன, 'மற்றவன் மதிப்புக்காக' ஊதாரியாய் செலவழித்து உபயோகம் இல்லாத ஒன்றுக்காக கையேந்தியோ கடன் வாங்கியோ காலத்தை ஓட்டுகின்றனர். தொட்டில் பழக்கம் சுடு காடு வரை உணர்ந்தவனே முன்னேறுவான்.

இயல்பான ஒன்றாக ஆடம்பரம் என்றுமே இருப்பதில்லை., ஆடம்பரம் ஒரு நோய் அதுவும் தொற்று நோய்'. ஆடம்பரத்துக்கு காசு இல்லையென்றால் அறம் தர்மம் கண்ணுக்கு தெரியாது. எந்த வழியிலாவது காசை இறைத்து தேவையானதை வாங்க வேண்டும் என நினைப்பவன் தேவையான ஒன்றை வாங்க முடியாமல் கடைசியில் தெருவில் திண்டாடுவான். ஆடம்பரத்தால் வருவது பொறாமை, ஆத்திரம், தவறான பேச்சு மற்றும் செய்கை, மறக்கடிக்கப்படும் தர்மநெறி இவையெல்லாம் தான். அள்ளியிறைக்கப்படும் காசால் ஒருவன்

முன்னுக்கு வந்தால் அது பெருமையாகாது. மனதை பின்னப் படுத்தி கோலோச்சும் ஆடம்பரம் ஒருநாள் புரட்டியெடுத்து விடும்.

ஆடம்பரம் தன் கதவுகளைத் திறக்கும் போது அன்பும் பாசமும் வெளியேறி விடுகின்றன. பிடிவாதமும் பேராசையும் உள்ள மனதுக்குள் உண்மை ஒட்டுவதில்லை. பகட்டான பார்வையால் தான் நமக்கு மதிப்பு உண்டாகிறது என்ற பயணத்தில் பள்ளங்களே பாதைகளாகின்றன. எழ முடியாது. தேவையில்லாத குப்பைகளாய் வீடும் மனதும் மாறி விடுகின்றன. வரவறிந்து வாழாதவன் வாழ்க்கையில் கடன்களே நிறைவாகி சங்கடத்தின் வாசலுக்குள் நிலைகொண்டிருப்பதை உணரலாம். நட்புகளின் உறவுகளின் நல் யோசனை கள் கேட்பாரற்று அநாதைகளாய் நிற்கும். எல்லோராலும் தனித்து விடப்பட்டு தன்னிலை அறியாத அசாதாரணம் குடி கொண்டிருக்கும்.

சம்பளத்திற்கு மட்டுமின்றி தவறான வழியில் கிம்பளத்திற்கும் கை நீட்டினால் எதையோ நம்பி எதையோ விட்ட கதைதான். பிடிவாதம் பேரழிவின் தொடக்கம் தான். ஆடம்பரத்தை வீட்டில் ஒருவர் மட்டும் விரட்டி விட முடியாது. எறும்பு ஊர கல்லும் தேயும் என்ற சொல்படி குடும்பத்தாரின் ஆசையும், தேவையற்ற தேவைகளும் குழிபறிக்கும் வேலையாகிறது. ஆடம்பரத்திற்கும் அத்தியாவசியத்திற்கும் பொருள் தெரியாமல் வளர்கின்றோம் வளர்க்கின்றோம். கைமீறி போன ஒன்றை கட்டுப்படுத்த முடிவதில்லை. வெள்ளம் வருமுன் தான் அணைபோட வேண்டும். அத்தியாவசியத் தேவைகள் முழுமையான பின் ஆடம்பரத்தை விரும்பினாலும் சிறிது ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் தன்னை வருத்திக் கொண்டு தண்ணீரைக் குடித்துக் கொண்டு மற்றவர்கள் பார்வைக்காக பகட்டோடு இருப்பவரை திருத்த முடியுமா? ‘பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும்‘ என்றார் பாரதி. உண்ண உணவு உடுக்க உடையும் என்றால் புரிகிறதா? காலத்துக்கும், உடலுக்கும் அவசியமானது உடை தான். பட்டு அப்படியில்லை. ஒரு பட்டுப்புடவை விலையில் பத்து உடுமாற்று புடவைகள் வாங்கலாம். ஆனால் பட்டினை வாங்கி உள்ளே வைக்கின்றோம். பராமரிப்பும் முடியவில்லை. புரிந்து கொண்டால் தவறில்லை. புரியவில்லை என்றால் புத்தி வேலை செய்யவில்லை என்றாகும்.

லஆடம்பரம் தற்பெருமை தேவை தானா?. திரைப்படத்திற்கு போக வேண்டாம் என்று சொல்லவில்லை. முதல் நாளே முதல் காட்சி பார்த்தால் தான் மதிப்பென்ற எண்ணம் உனக்கு வருகிறது என்றால் இது அவசியமா ஆடம்பரமா? கடந்த வாரம் தான் பொது வீதியில் ஒரு பொருளை வாங்கியிருப்பான். அவன் வியாபாரத்தைப் பெருக்கும் தந்திரமாக அதனை புத்தம் புது வடிவமைப்பு என்று விளம்பரப் படுத்துவான். ஒன்றுமில்லை. வலது புறம் இருந்த கைபிடியை இடது புறம் மாற்றி வைத்திருப்பான். மற்றபடி வேறில்லை. ஆடம்பரம் அதை வாங்க வைக்கும்.

அவசியம், இது தேவையா என கேள்வி கேட்கும். தகவல் பரிமாற்றத்திற்கு ஆன்ராய்டு போன் போதுமே... ஆப்பிள் போன் எதற்கு? புரியாதவனாய் நீ இருக்கும் வரை புதுபுது வரவுகள் வரத்தான் செய்யும். பல்குத்தும் குச்சியால் பள்ளம் தோண்ட முடியாது. ஆனால் பருத்த பலூனை கிழித்துவிட முடியும். ஆடம்பரம் உன்னைக் கிழித்துவிடும். தேவைக்கு வாங்குவதற்கும் தேவையில்லாது வாங்குவதற்கும்

வித்தியாசம் இருக்கும். ஒரு வீட்டுக்கு செல்கின்றோம். வாசலில் அதிக அளவில் விதவிதமாக காலணிகள் அணிவகுத்தி ருக்கும். சரி ஏதோ ஒரு விசேடம் போல நிறைய மனிதர்கள் வந்திருக்கலாம் என்று நினைக்கும்போது தான் தெரியும் வீட்டில் இருப்பதே ஓரிருவர்மட்டும் என்று. ஆடம்பரத்திற்காக வண்ண வண்ணக் காலணிகள் ஒருவருக்காகவே. இது ஆடம்பரம்தானே.

தங்கத்திலேயே காலணி என்றாலும் பாதத்துக்கு கீழேதான். தங்கமே என்றாலும் அது இருப்பது வீட்டிற்கு வெளியேதான். ஆடம்பரத்தை வெளியே தான் கழட்டி வைக்க வேண்டும். சில பெண்கள் நாளைக் கொரு காதணி என்பதற்காக கவரிங் பொருட்களை கடையளவுக்கு வாங்கி குவித்து வைத்திருப்பார்கள். அந்தக் காசுக்கு ஒரு தங்கத் தோடு வாங்கியிருந்தால் காலத்துக்கும் நிலைக்கும். பொருளும் மதிப்பாகும். உணர்வதில்லையே. மற்றவர் களுக்காக எதையும் செய்தால் மதிப்பில்லை என்று உணரவேண்டும்.

ஆழாக்கு அரிசியிலே அன்னதானம் அதற்கு ஆயிரம் ரூபாயில் விளம்பரம். இன்று விளம்பர யுகத்தில் நாம் வாழ்கின்றோம். காலத்துக்கும், நிலைக் கும் என எந்தப் பொருளும் இல்லை. உற்பத்தியாகும்போதே இது பல வருடங்களுக்கு இருக்கக் கூடாது என்றே தயாரிக்கப்படுவதை உணர வேண்டும். இதே மாதிரி உடல் அழகு, முடி பராமரிப்பு, இவைகளுக்காக நிறையவே செலவு செய்கிறார்கள். இவர்களுக்குத் தான் முடி வேகமாக கொட்டுகிறது. உப்பைக் கொண்டும் கரியைக் கொண்டும் பல்துலக்கும் போது பல்வலி வந்ததில்லை. விதவிதமான பற்பசை வந்தபின், பற்களே இருப்பதில்லை. இன்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றான். பற்பசையில் உப்பு இருக்கானு. எங்கே போய் முட்டிக் கொள்வது.

வாசலில் வந்து காய்கள் விற்கும் மூதாட்டியிடம் பத்துபைசாவுக்கு பேரம் பேசுபவன் ஒரு வாரத்துக்கு முன் பறித்து குளிரூட்டப்பட்ட நிலையில் இருக்கும் பொருளை பேரம் பேசாது வாங்குவதை என்ன சொல்வது? புத்தியில்லாத பேரணியில் நம்மை அடையாளப் படுத்திக் கொண்டிருப்பதை உணர வேண்டும். இருமனங்கள் இணையும் பந்தமே திருமணம். மனதார வரவேற்று விருந்தோம்பல் செய்த சமுதாயத்தில் ஆடம்பரமோகம் அதிகமாகி வரவேற்கக் கூட வாடகைக்கு ஆள்வைத்துள்ளோம். பசியாறப் படைக்கும் விருந்து, பகட்டாக மாறி மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்ற நிலையில் பதினாறு வகையான உணவுகளை பரிமாறி பாதிக்கும் மேலாக குப்பையில் விழும் போது பாதையில் ஒரு வேளை சோற்றுக்கு வழியின்றி தவிப்பவனை மறந்து விடுகின்றோம்.

வீண்விரையம் இதைத்தவிர ஆடம்பரம் என்ன தந்து விட்டது. ஒன்றுக்கு நாலாக உருப்படியில்லாத வாழ்வை ஆடம்பரம் தருகிறது. மனிதனை மதிப்பதற்கு மகத்தான செய்கைகள் போதுமென உணராதவனை திருத்த முடியாமல் திண்டாடுகின்றோம். ஆடம்பரம் அவசிய மில்லாதது. அது ஒரு அழிவுப்பாதை. ஆடம்பரத்தைத் தவிர்த்தால் மகிழ்ச்சி யான வாழ்வு உண்டு. முறையான திட்டமிடலில் சேமிப்பும் உண்டு. ஆடம்பரத்தை விரும்புபவன் கடனாளி யாகவே முடிந்து போகிறான் என்பதே வாழ்வில் எதார்த்தம். கஞ்சனாக இருக்க வேண்டாம். கண்டதையெல்லாம் கடன் வாங்கி கவலைப்பட வேண்டாம். புத்தியை திறந்து புதுப்பாதை காண ஆடம்பரத்திற்கு விடைகொடுப்போம்.

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

பிறப்பொக்கும் அனைத்துயிர்க்கும் என்றன்று சொன்னார்
பேதைமையை ஒழித்திடத்தான் வள்ளுவனார் ஐயன்!
மறந்தின்று மானிடரும் வாழுகின்ற வாழ்க்கை
மானுடத்தின் கேடென்று சொல்லிடுமே வையம் !
அறம்மறந்து நடக்கின்ற உலகோரின் பாதை
அழிவிற்கு வழிகோலும் ஐயமொன்றும் இல்லை!
நிறபேதம் இனபேதம் இழிவென்றே சொல்வோம் !
நெறிபிறழ்ந்து வாழ்வதிலே பொருளேதும் இல்லை!

வன்முறையைக் கைக்கொள்ளும் தலைமுறையைக் கண்டு
வருந்துகிறோம் வேதனையில் திருந்திடலே நன்று !
பெண்ணுடலைக் குறிவைக்கும் கயவர்களின் போக்கு
பேரிழிவாம் இந்நாளில் அருவருப்பின் உச்சம்!
பெண்ணித்தைச் சிதைக்கின்ற நாட்டிற்குக் கேடு
பேரிடராய் வருமென்போம் வரலாற்றுச் சான்று !
எண்ணத்தில் தூய்மையினைக் கொண்டோர்தாம் மேலோர்!
எளியோரைக் காப்பதுவே கடமையாகக் கொள்வோம் !

உயிர்நேயம் கொள்வதுதான் மனிதமென்று சொல்வோம்!
உணர்வுகளை மதித்திடலே உயர்வான பண்பாம் !
துயருற்ற மக்களது கண்ணீரைப் போக்கித்
துணையாக நிற்பதுவே பேருதவி யாகும் !
செயலாற்றும் திறனதுவில் பேதங்கள் நீக்கிச்
சிறப்பாகத் தலைமுறையை வழிநடத்திச் செல்வோம்!
அயராமல் பாடுபட்ட ஆன்றோரைப் போற்றி
அறநெறியில் வாழ்ந்திடுவோம் பிறப்பொக்கும் என்றே!

ஓசூர் மணிமேகலை





# ஆதலால் காதல் செய்வீர்

**வ:.பீரா வ:.பி**

ஐரோப்பிய நாடுகள் எப்போதுமே இயற்கையழகில இளமைத்துள்ள செழிப்பாகக்காட்சியளிக்கும். அங்குபனிப் பொழிவின் ஆரம்பமும், பூக்கள் குலுங்கும் வசந்தகாலமும், இலையுதிர்க்காலமும் என்றும் ரம்மியமாகவே இருக்கும். அதிலும் சுவிட்ஸலாந்து என்பது ஏனைய நாட்டவரின் கனவு உலகம் என்றே சொல்லலாம். இங்கு கோடைக்காலங்களில் சூரிய அஸ்தமனம் இரவு 9.30 மணியளவில் நிகழும். அதைப் பார்க்கவென்றே மக்கள் கூட்டம் காத்திருக்கும். அதேநேரம் சுமார் ஏழரை மணிநேர குறுகிய பகலைக் கொண்டிருக்கும் குளிர்காலத்தில், மாலை 4.30 க்கே அவசரமாக சூரியன் பிரியாவிடை பெற்றுச் செல்லும். சுவிஸ் மக்களின் வாழ்வியல் மிக அழகானது என்பதையும் சொல்லியாக வேண்டும். இங்கு வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்போடும் மரியாதை கொடுக்கக்

கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பச்சைப் புல் வெளிகளும் அதில் ஆங்காங்கே சயனித்திருக்கும் பனிக்கட்டிகளும், நீல வண்ண நீரோடைகளும், பனி போர்த்திய மலைகளும், வெண்பஞ்சு மேகக் குவியல்களைச் சுமந்த நீல வானமும், லேசாகப் பனி மூடிய ஏரிகளும், பெரும்பாலான நேரங்களில் தூறலிடும் மழையும் இங்கு கொள்ளை அழகு.

காலைப் பொழுதொன்றில் லேக் ஒஃப் ஸூரிச்சின் கண்கொள்ளாக் காட்சி ஸூரிச் நகரையே செழுமையாக்கிக் கொண்டிருந்தது. ஏரியை ரசிப்பதற்கென்றே போடப்பட்டிருந்த இருக்கையொன்றில் லியா அமர்ந்திருந்தாள். அவளின் கண்கள் கைக்கடிகாரத்தை உற்றுப் பார்ப்பதும், பின் நடைபாதையை நோக்குவதுமாக இருந்ததில், யாரின் வரவுக்காகவோ காத்திருப்பது புரிந்தது.

லியா இருபத்தி இரண்டு வயது நிரம்பிய அழகிய மங்கை. அவளின் தங்க நிறத்தினாலான கூந்தல் தோளுக்குக் கொஞ்சம் கீழே கத்தரிக்கப் பட்டு காற்றில் அலைமோதிக் கொண்டிருக்க, அவளின் நீலக் கண்களில் தேடல் நிரம்பியிருந்தது. ஐந்தே அடிதான் உயரமாக இருந்தாலும், ஹைஹீல்ஸூம் குளிருக்காக அணிந்திருந்த கோட்டும் கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்த சால்வையும் அவளை மிடுக்காகவே உட்கார வைத்திருந்தன. திறந்த கோட்டினூடே தெரிந்த மிடி தன்னை அணிந்திருப்பவளும் அழகிதானென சொல்லாமல் சொல்லியது.

காத்திருந்த கண்களில் பரபரப்பு தொற்றிக் கொள்ள, கைப்பையை இருக்கையில் வைத்துவிட்டு சட்டென எழுந்தவள், தன்னை நோக்கிப் புன்னகையுடன் வந்த ஆஜானுபாகுவான எட்வட் கையில், தான் கொண்டு வந்த பூங்கொத்தைக் கொடுத்து விட்டு ஆரத் தழுவிக் கொண்டாள். அவளை இறுகத் தழுவியவன் குனிந்து இதழில் மென்மையாக முத்தமிட்டு விலக, இருவரும் இருக்கையில் அமர்ந்து அளவளாவத் தொடங்கினர். மேலைத்தேய கலாசாரத்தில் முத்தமென்பது ஒரு இயல்பான விடயமே! ஏனைய நாடுகளில் கைலாகு கொடுத்து வரவேற்பதைப் போன்றதே ஐரோப்பிய நாட்டு மக்களின் முத்தம்.

சுவிஸ்ஸின் உத்தியோகபூர்வ மொழிகளில் ஜேர்மன் மற்றும் ஃப்ரென்ச்சும் அடங்கும். இம்மொழிகளுடன் எட்வட், லியாவின் இரு குடும்பங்களும் ஆங்கிலத்தை சரளமாகப் பேசக்கூடியவர்களாகவும் இருந்தனர். எட்வட்டின் தந்தைவழி உறவுகளினதும், லியாவின் தாய்வழி உறவுகளினதும் பூர்வீகம் லண்டனாக இருந்ததே அதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

அதுசரி, இன்று ஏன் இந்தக் கொண்டாட்டமும் வாழ்த்தும் என்றுதானே யோசனை? இன்றுடன் இவர்கள் காதலுக்கு வயது ஐந்து. அவனை மியூஸிக் கிளாசில் பார்த்ததும், நோட்ஸ் எழுதிய புத்தகத்தை இவள் எங்கோ தவறவிட்டிருக்க, கன்னங்கள் குழி விழப் புன்னகையுடன் அவன் நோட்புக்கை நீட்டியதும், இவளும் நன்றியுடன் பெற்றுக் கொண்டதும் தான் இவர்களின் முதல் சந்திப்பாக அமைந்திருந்தது. ஆரம்பத்தில் இயற்கைக் காட்சிகளின் ஓவியங்களை வரைந்து இவளுக்குப் பரிசளித்து ஆச்சர்யப் படுத்தியவன், ஒருநாள் இவளையே வரைந்து வந்து பிரமிக்க வைத்ததோடு 'ஐ லவ் யூ லியா.டு யூ லவ் மீ' எனக் கண்பார்த்து கேட்டபோது அவனுடைய கபில நிறக் கண்கள் முழுக்கக் காதல்

நிரவியிருக்கக் கண்டாள் லியா. அவனைப் பார்க்கும் கணங்களில் இதயக்கூட்டில் பட்டாம்பூச்சிகளின் சிறகடிப்பை உணரக் கூடியவளுக்கு வேறென்ன வேண்டும். அவனை மென்மையாக அணைத்து சம்மதம் சொன்னாள்.

அதன் பிறகு வளர்பிறையானது அவர்களின் காதல். இந்த ஐந்து வருடத்தில் ஒருநாள் கூட எட்வட் அவளிடம் அத்துமீறி நடந்து கொண்டதில்லை. மனதைக் காயப்படுத்தியதுமில்லை. அதுவே லியா அவன் மீது கொண்ட காதலை அதிகமாக்கியது.

லியாவுக்குத் தாய் ரெபேக்கா மட்டுமே உறவென்றிருப்பவர். லண்டனைப் பூர்வீகமாகக் கொண்ட அவர் ஒரு ஆங்கில ஆசிரியை. கணவன் டெனியல் அவரை விவாகரத்து செய்ய முடிவு செய்ததை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு மியூச்சுவலாகப் பிரிந்தாலும், மறுமணம் செய்து கொள்ளாமலும், வேறு ஆண்களின் துணை தேடாமலும், தனியாகவே வாழும் இரும்புப் பெண்ணவர். சிங்கிள் பேரண்ட்டாகவே லியாவை வளர்த்து ஆளாக்கியவர். அவளின் நியாயமான ஆசைகளுக்குத் தடைபோடாத பாசக் கோயிலவர். என்னதான் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்தாலும், பண்பாட்டுடன் வளர்க்கப்பட்டவள் லியா. அவளின் சக வயதுப் பெண்கள் போலல்லாமல், தனக்கென சில வரைமுறைகளுடன் வாழ்பவள் ஆதலால், தாய் ரெபேக்காவும் அவள் மீது நம்பிக்கை வைத்து முழு சுதந்திரத்தையும் கொடுத்திருந்தாலும், ஒருபோதும் லியா அதைத் தவறாகப் பயன்படுத்தியது இல்லை. தாய் மகள் பாச உறவைவிட அவர்களிடையே இரு நெருக்கமான நண்பிகளுக்கு இடையிலான ஒளிவு மறைவில்லா நட்பு இருந்ததால், புரிந்துணர்வுடன் கூடிய அன்பு அவர்களிடம் நிலை கொண்டிருந்தது.

எட்வட்டும் லியாவும் இரு வேறு நிறுவனங்களில் மென்பொறியியலாளர்களாகக் கடமை புரிபவர்கள். எட்வட் ஓய்வு நேரங்களில் தகப்பனாரின் பேக்கரியிலும் உதவிகள் செய்து வந்தான். எட்வட்டின் தம்பி மைக்கல் ஜெனீவாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் (University of Geneva) மருத்துவத் துறையில் கல்வி கற்று வரும் மாணவன் ஒவ்வொரு செமஸ்ட்டர் விடுமுறையின் போதும் தகப்பனாரின் பேக்கரியில் உதவியாக இருப்பான். எனினும் பல்கலைக்கழக ஆய்வுகூடத்திலேயே அவனின் பெரும் பொழுதுகள் கழிவதுமுண்டு.

எட்வட் தினசரி என்ன வேலைகள் இருந்தாலும், குறைந்தது இரண்டு மணி நேரமாவது தன் காதலிக்காக செலவிடுவதை வழமையாக்கி இருந்தான். இருவருக்குள்ளும் இருந்த அதீத அன்பு தினசரி நிகழும் சந்திப்பில் இரட்டிப்பானது. இலையுதிர்க் காலத்தில் லியாவுடன் காரில் வின்ட்டதா சிட்டிக்கு (Winterthur city) வரும் எட்வட் அங்கு



றோமன் ஸ்ட்ரீட்டில் ஒரு ஒதுக்குப்புறமாக காரை பாக் செய்து விட்டு லியாவின் கைகோர்த்து நடந்து செல்வான். அழகிய மாலைப் பொழுதில் மஞ்சள்,செம்மஞ்சள், சிவப்பு வண்ணங்களில் இலைகள் நிறைந்த மரங்களும், தரையில் வண்ணக் கோலமாகப் பாய் விரித்திருக்கும் உதிர்ந்த இலைகளுமாய் சுவர்க்கத்தில் நடப்பதைப் போன்ற பிரமையைக் கொடுக்கும்.அதுவும் காதல் தேவதையுடன் கைபிடித்துப் பயணிக்கும் போது அலைபாயும் ஆனந்தத் துக்கு கேட்கவா வேண்டும்? இலையுதிர் காலத்தில் சுவிஸ்ஸில் மரங்கள் சூழ்ந்த இடமெல்லாம் ரம்மியமாகத் தான் இருக்கும். ஆனாலும் இவர்கள் இருவரும் நடைப்பயிற்சிக்கு இந்த வின்ட்டதா சிட்டியில் உள்ள றோமன் வீதியைத் தெரிவு செய்யக் காரணம் காதலைச் சொன்ன பிறகு இவர்கள் இருவருமே காதலர்களாக சென்ற முதல் இடம் இதுவென்பது தான்.

அன்று அவளின் பிறந்தநாளில் தன் கையால் செய்த இதயவடிவிலான ரெட் வெல்வட் கேக், அடர் சிவப்பு ரோஜா போக்கேயுமாக வந்தவன், ஏரியருகில் அவளுக்காக காத்திருந்தான். உரிய நேரத் துக்கு வந்து சேர்ந்தவள், வெண்ணிற நீண்ட அங்கியில் தேவதையாக காட்சி யளிக்க அவளை ரசித்தவன் ‘கமோன் மை ஏஞ்சல்! மெனி மெனி மோ ஹெப்பி ரிடன்ஸ் ஒஃப் த டே!‘ என்று வாழ்த்தி, ரோஜாச் செண்டைக் கொடுத்து,அவளை இருகைகளால் அலேக்காக தூக்கி சுழற்றி னான். பிறகு கையோடு கொண்டு வந்த சிவப்புக் கல் பதித்த மோதிரத்தைக் கையில் பிடித்த படி முழந்தாளிட்டு ‘வில் யூ மெரி மீ பேபி‘ என்று தலை சாய்த்துக் கேட்க, காதல் தவழும் அவன் கண்களையும் அவனின் ஃப்ரென்ச் மீசையையும் ரசித்தபடி லேசாகத் தலையாட்டி ஆமென்றவள் கண்களில் கண்ணீர். நடுங்கும் அவள் மெல்லிய விரல் பிடித்து மோதிரத்தை

# ஓட்டம்

கடுகதி வேக ஓட்டம்
  கனதியாய் மனத்தில் மூட்டம்
நடுமையக் கோட்டில் ஓடி
  நானுமே வெல்ல எண்ணம்
சுடுசுடு வெயில் தாக்கம்
  தொடர்ந்திடும் ஓட்டம் தானே!
எடுத்திடும் வேகம் கண்டு
  எழுந்ததே உயர்ச்சி என்னுள்!

ஓட்டமோ வேகங் கொள்ள
  ஓடிய காலும் சோர
நாட்டமாய் ஓடும் ஓட்டம்
  நாடினேன் பாதித் தூரம்!
காட்டிய ஆர்வம் கண்டு
  கண்டவர் வியப்பே யுற்றார்!
வாட்டமே இல்லா ஊக்கம்
வரலாறு பதிக்கச் செய்யும்!

முயற்சியே என்றும் வெல்லும்
முடிபுகள் நாளை சொல்லும்
பயிற்சியும் எடுத்து பாராய்!
பலனது கிடைக்கும் நாளை
அயற்சியே இல்லா வாழ்வில்
அனுதினம் ஓடும் காலம்
முயன்றிடும் செயல்கள் தாமே
முடிவினில் வெற்றி கிட்டும்

பாவலர்மணி நகுலா சிவநாதன்
Germany

அணிவித்து இறுகவே அணைத்து முத்த மிட்டான் சற்று ஆழமாகவே. என்ன இருந்தாலும் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து, அவளின் தோளை அணைத்தவாறே அருகில் அமர்ந்து கொண்டான். கொஞ்சநேரம் மௌனமாகவே பார்வையில் கரைந்தது.

பிறகு தன் காரில் அவளை உட்கார வைத்து ஒரு லோங் ட்ரைவ் கூட்டிப் போனான். அது எட்வட்டின் பூர்வீகக் கிராமமான க்ரிண்டெல்வோல்ட் (Grindlewal) போகும் வழிகளெல்லாம் பல சுரங்கப் பாதைகளைக் கடக்க வேண்டியிருந்ததோடு இயற்கையும் அவர் களை ஈர்த்தெடுத்தது. வான் முட்டும் மலைமுகடுகளும், காற்றில் விசிறியடிக்கும் நீர்வீழ்ச்சிகளின் சாரலும் மனதை மயக்கின.

நிறைய மாட்டுப் பட்டிகளில் செழுமை யான மாடுகள் அசை போட்டபடி இருந்தன. போகும் வழியில் Lauterbrunnen ஐக் கடக்கும்போது, பாதையோரமாக நிறைய சின்னஞ்சிறு கடைகளைக் காண முடிந்தது. இவை பல்கலைக்கழக மற்றும் கல்லூரி செல்லும் மாணவ மாணவியரால், பாட் டைம் ஜொப் ஆக மேலதிக வருமானத்துக்கென உருவாக்கப் பட்டவையாக இருந்தன. அங்கு தென்பட்ட ஒரு கொஃபி ஷொப்பில் கப்பச்சினோ இரண்டு கப் ஓடர் செய்து, அதற்குரிய பணம் 12 சுவிஸ் ஃப்ராங்குகளாக இருந்த போதும் 20 சுவிஸ் ஃப்ராங்குகளை செலுத்திவிட்டு வந்தமர்ந்தவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் லியா.



'என்ன அப்படி பார்க்கிறாய் பேபி' என்றபடி கை தொட்ட எட்வட்டை பார்த்து 'நம் லவ் அழகான ஒரு குழந்தை வளர்வது போல நாள்தோறும் வளர்கிறதை நினைத்தால் ஐ ஃபீல் லைக் ஃப்ளைங். வயசானாலும் இந்த அன்பு மாறாது தொடரும். அப்பவும் நீங்க இதே போல ஹாண்ட்சமா என் கண்ணுக்கு தெரிவீங்க!'. எட்வட் அவளின் தோள் பற்றி அழுத்தி 'யெஸ் பேபி! யூ ட்டூ! 'என்றான். உடனுக்குடன் ஃப்ரெஷ்ஷாக அரைத்த காப்பித்தூளைக் கலந்து கொஞ்ச நேரமெடுத்து தயாரிக்கப்பட்ட கப்பச்சினோ இரண்டு கப்களில் வந்து சேர்ந்தது இரு வெண்ணிற இதயங்களை மிதக்க விட்டபடி. ஒருவரை ஒருவர் ரசித்தபடியே கொஃபியை குடித்து, நன்றி சொல்லி புறப்பட்டார்கள் இருவரும்.

போகும் வழியில் சொக்லட்களையும், அழகிய மலர்க்கொத்தொன்றையும் வாங்கிக் கொள்ள லியா மறக்க வில்லை. இயற்கையின் அழகை ரசித்தபடியே 195 கிலோமீட்டர்களைக் கடக்க மூன்று மணிநேரம் தேவைப்பட்டது அவர்களுக்கு. ஊர் வந்து சேர்ந்த போது எட்வட்டின் பாட்டி சிரித்தபடியே வரவேற்றாள். லியா கொண்டு வந்த பரிசுகளை பாட்டியிடம் கொடுத்து, 'ப்ளெஸ் மீ க்ராண்ட்மா' என்றபடி பாதம் பணிய பாட்டியும்

'கோட் ப்ளெஸ் யு மை சைல்ட்' என ஆரத் தழுவிக் கொண்டாள். பக்கத்திலேயே லியாவை அமர்த்தி எட்வட்டின் சிறு பராய குறும்புக் கதைகளை சொல்லிச் சிரித்தாள். பாட்டியின் கைப்பட செய்த garlic brea உடன் பலவகை சாண்ட்விச்சும், ஸ்ட்டூ செய்த இறைச்சியும், ஹனி & நட்ஸ் மிக்ஸ்ட் சிக்கனும், பழங்களும், வீட்டிலேயே செய்த சீஸ் வகைகளும் அந்த பகல் போசன விருந்தில் இடம் பிடித்திருந்தன. பாட்டியும் எட்வட்டின் அத்தை வெரோனிக்காவும் லியா மீது அன்பைப் பொழிந்தனர். அவர்களின் ஃபாம் ஹவுஸூம் மலைகள் சூழ்ந்த அந்த கிராமமும் லியாவுக்குப் பிடித்துப் போனது. பின்னேரம் தேநீர் உபசரிப்பு கூட ஸ்பெஷலாக இருப்பதாக லியாவிற்கு தோன்றியது. வெரோனிக்கா சிக்கன் பை, தொட்டுக் கொள்ள ஹோம் மேட் க்ரேப் ஃப்ருட் ஜாம், ஐசிங் ஷூகரும் கறுவாத் தூளும் கலந்து தூவப்பட்ட சினமன் குக்கீஸ், ப்ளுபெரி சீஸ் கேக், சிட்ரஸ் டீ என வகை வகையாக செய்து உபசரித்தாள். சுவையும் அவர்கள் மனம் போலவே தித்திப்பாக இருந்தது.

இரவு ஸூரிச்சில் ஹில்ஸ் ரெஸ்டோரண்ட்டில் பார்ட்டி ஒன்றை நண்பர் களுக்காக எட்வட் ஏற்பாடு செய்திருந்ததால், அதனால் பின்னேரம் விடைபெற்று புறப்பட்டார்கள். அவனுடனான இந்தப் பயணம் மரணத்தின் விளிம்பு வரை நீடிக்க வேண்டு மென லியா விரும்பினாள்.

மெழுகுதிரியின் மெலிதான வெளிச்சத்தில்இரவுவிருந்துஅமர்க்களமாகநடந்தேற, ஷம்பேன் போத்தலைக் குலுக்கித் திறந்து நுரை ததும்பும் கண்ணாடிக் குவளைகளை நண்பர்களின் கையில் கொடுத்து 'யூ கெரி ஒன் கைஸ்' என்றவாறு லியாவின் பக்கத்தில் வந்தமர்ந்து கொண்டு, குளிர் பானத்தை சுவைத்தவனையே பார்த்துக்

தன்முனை கவிதைச் சரம்

# வீரம்

■

அறம் அறிந்து
ஆற்றுபவன் வீரன்
மருளையும் மாற்றிடுவான்
திறத்தினால் அவன் மறவன்

■

வெற்றியும் தோல்வியும்
சமன் என்பான் வீரன்
பெற்ற வெற்றியில்
பற்றில்லா சூரன்

■

வன்ம மனத்தில்
பொங்கும் சினம்
தங்கும் அங்கு
வஞ்சகம் இன்றி வஞ்சம்

■

விவேகத்தில் முளைத்த
வீரம் விளைந்து வரும்
வளர்ந்து எழும் தீரத்தில்
துளிர்த்து நிற்கும் அறம்.

■

எண்ணா துணிவு
தீமையே பண்ணும்
பண்ணுவது பலவும்
போகும் வெறு மண்ணாக

■

பணிந்து போவதும்
தணிந்து இருப்பதும் துணிவு
என்பான் கனிந்து இருந்து
மன்னித்தலும் துணிவு

**சசிகலா விஸ்வநாதன்**

கொண்டிருந்தாள் லியா.

கையில் மதுக்கிண்ணத்துடன் பக்கத்தில் வந்தமர்ந்த ஜீன் கேட்டாள் 'என்ன எட்வட் நீ குடிப்பதில்லையா' என.அதற்கு எட்வட் 'நான் நீண்ட காலம் என் பேபியுடன் வாழ ஆசைப்படுகிறேன்.அதனால் எந்த கெட்ட பழக்கங்களுக்கும்அடிமையாகமாட்டேன்' என்று சொல்ல 'க்ளுக்' என சிரித்த ஜீன் கண்ணை சிமிட்டியபடி' இன்டைக்கு தான் லியாவின் பேத்டே ஆச்சே! ஸ்பெஷல் கிப்ட் கொடுப்பாய் தானே? ஐ மீன் நீங்கள் இருவரும் இன்றிரவை ஒன்றாகக் கழிக்கப் போகிறீர்கள். சரி தானே?' என்றாள் மறுபடியும் ஒற்றைக் கண்ணை சிமிட்டியபடி. லியாவும் எட்வட்டும் ஒரே நேரத்தில் 'நோ வே ஜீன்' என மறுத்தார்கள். 'நாங்கள் கல்யாணம் செய்து லைஃப்லோங் ஒன்றாகத் தான் வாழப் போகிறோம். அதுவரை செல்ஃப் கன்ட்ரோலுடன் இருப்பதில் உறுதியாக இருக்கிறோம். கல்யாணம் வரை அப்படி இருப்பதில் த்ரில் இருப்பதோடு நாளுக்கு நாள் நம் காதலும் கூடுது. இதில் உள்ள சுகமே தனி.இது ஓப்பன் ரிலேஷன்ஷிப்பில் இருக்கும் உனக்குப் புரியாது ஜீன்' என்றான் எட்வட். 'ம்ஹூம்' என நீண்ட பெருமூச்சு விட்ட ஜீன் 'யூ போத் ஆ லக்கி கைஸ்! கோட் ப்ளெஸ் யூ போத்' என்று நகர்ந்தாள்.

அன்று சனிக்கிழமையாதலால், சரியாக இரவு பதினொரு மணிவரை பார்ட்டி தொடர்ந்தது. இதுவே வாரநாட்களாக இருந்தால் பத்து மணியுடன் ரெஸ்டோரண்ட்டை மூடி விடுவார்கள். இரவு விருந்துடன் எட்வட்டின் கிட்டார் இன்னிசையும் செவிக்குணவு படைக்கத் தவறவில்லை. வந்திருந்த எல்லோருக்கும் விடை கொடுத்தனுப்பி, கிடைத்த பூங்கொத்துகளும், பரிசுப் பொருட்களும் காரின் பின்சீட்டை ஆக்கிரமித்துக் கொள்ள, இருவரும் நள்ளிரவுக்கு முன்பாகவே வீடு வந்து சேர்ந்தார்கள். காரிலிருந்து இறங்குமுன் அவள் தோளை அணைத்து இதழில் முத்தமிட்டான் எட்வட். வாசல்வரை வந்தவனை, கதவைத் திறந்த ரெபேக்காவின் குரல் வரவேற்றது. 'ஹௌ வொஸ் த பார்ட்டி சில்ரன்' என்றவளின் பாதம் பணிந் தெழுந்த எட்வட் 'இட் வொஸ் சூப்பர்ப் மொம். ஒன்லி திங் தட் வீ மிஸ்ட் யூ எ லொட்' என்றான். தம் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்காக இருவரும் ரெபேக்காவிற்கு நன்றி சொன்னார்கள். 'பிள்ளைகள்மீதுபெற்றோர் வைக்கும் நம்பிக்கை தான் அவர்களின் எதிர்காலத்துக்கான ஒளிவிளக்கு. அந்த நம்பிக்கையை எப்போதும் வீணடிக்க மாட்டீர்கள் என எனக்கு தெரியும்' என தாய் சொன்னதும் இருவரும் 'தாங்க் யூ மொம்!' என ரெபேக்காவின் கன்னத்தில் முத்தமிட்டார்கள். பின் எட்வட் விடை பெற்றுப் போக, அம்மாவிடம் பாட்டி வீட்டின் உபசரிப்புகளை சந்தோஷத்துடன் பகிர்ந்தாள் லியா.

இன்னும் இரண்டு வருடங்கள் அழகாக வளர்ந்த இவர்களின் காதல் கல்யாணம் என்ற அடுத்த அழகிய கட்டத்தை நோக்கி நகர்ந்தது. ஆம், அவர்களின் திருமணம் ஸூரிச்சில் இருக்கும் பெரிய தேவாலயமான க்ரொஸ்மன்ஸ்டரில் (Grossmunster) வெகு விமரிசையாக நடைபெற்றது. காதலை வென்ற திருப்தி இருவரின் முகத்திலும் பளிச்சிட்டது. மேலைத்தேய கலாச்சாரங்கள் கொஞ்சம் முற்போக்கானது என்றாலும், அங்கும் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காதலை வென்று காட்டும் உறுதியான உள்ளங்களும் உண்டு, நம் எட்வட்- லியா ஜோடி போல. இந்த அன்பும் அன்னியோன்னியமும் கடைசி மூச்சுவரை அவர்களுக்குள் தழைக்கும்.

(முற்றும்)

# இன்பமும் நாமும் இனி

நிலையென் றெதுவும் வாழ்வி லில்லை
நினைத்துப் பார்புரியும்
அலையும் மனத்தை அடக்கி ஆண்டால்
அமைதி கிட்டிவிடும்
கலைந்து போகும் மேகம் போலக்
கவலை மாறிவிடும்
தலைக்கு மேலே தோன்றும் சுமையும்
தரையில் இறங்கிவிடும் !

வரவுக் குள்ளே செலவைச் சுருக்க
வாழ்வு வளமாகும்
வருத்தும் பிரிவை முயன்று மறந்தால்
மனதும் தெளிவாகும்
இருக்கும் வரையில் இல்லார்க் குதவும்
எண்ணம் உயர்வாகும்
பெரியார் சொன்ன வழியில் நடந்தால்
பெருமை உனதாகும் !

கட்டம் காட்டும் பாதை நம்பிக்
காலம் கடத்தாதே
வட்டத் துள்ளே யுழன்று கிடந்து
மதிப்பை இழக்காதே
முட்டி மண்ணை மோதும் விதைதான்
முளைத்து மரமாகும்
திட்ட மிட்டுச் செய்யும் செயலால்
சிறக்கும் வாழ்வாகும் !

இதயம் கனத்த வேளை தன்னில்
இசையே மருந்தாகும்
உதயமாகும் புதிய விடியல்
உயிருக் குரமாகும்
வதைத்து நசுக்கும் வலிகள் எல்லாம்
மாறிச் சுகம்பிறக்கும்
புதையல் கிடைத்தாற் போன்று நெஞ்சம்
பூத்து மகிழ்ந்தாடும் !

அன்பைக் கூட்டி அறிவைப் பெருக்க
ஆற்றல் வசமாகும்
நன்மை செய்தால் நலமே விளையும்
நாளை நமதாகும்
துன்பம் வந்தால் எதிர்த்து நிற்கும்
துணிவும் வசமாகும்
இன்பம் தானாய்த் தேடு முன்பே
இணையும் நம்மோடே!

சியாமளா ராஜசேகர்

## தமிழ்நெஞ்சம்

## இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்தி ற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தய வாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**




**லறீனா அப்துல் ஹக் அவர்களின் "தஜ்ஜாலின் சொர்க்கம்" சிறுகதை தொகுப்பை முன்வைத்து**

## எஸ். ஃபாயிஸா அலி

"அவளைப் பன்மையில் பார்த்தேன்
இல்லை அவள் பெருகிக் கொண்டிருந்தாள்
அந்தக் கூட்டத்தில்
அவளைப் பிரித்தெடுக்க முடியவில்லை"


சகோதரர் றியாஸ் குரானாவின் இந்தக் கவி வரிகளை வாசிக்கும் போதெல்லாம் சட்டென நினைவுக்கு வருவது தங்கை லறீனாவின் முகமே.

கவிதை, பாடல், இசை, மெட்டு, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வு, மொழியாக்கம், விளையாட்டு (அதிலும் பல்வகைமை), குடும்பப் பொறுப்புகள் நான் பிரமித்துப் போகும் அவருக்கான முகங்கள் தான் எத்தனை எத்தனை! இத்தனைக்கும் அவர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதிக் கற்கைக்கான ஆய்வு மாணவரும் கூட! அல்ஹம்துலில்லாஹ்.

லறீனாவின், "தஜ்ஜாலின் சொர்க்கம்" சிறுகதைத் தொகுதியைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சகோதரர் ஹபிபுல்லாஹ் மௌலவி அவர்கள் வீடு தேடி வந்து தந்த அன்று இரவோடு இரவாய் வாசித்து முடித்திருந்தேன். ஈரம் கசிந்த விழிகளோடும் நொந்திளகிப் போன இதயத்தோடும் என் வாசிப்பனுபவத்தைப் பதிவாக்க வேண்டும் என்னும் பேரவா வோடு அடுத்தடுத்து வந்த பல இரவுகள் புத்தகமும் பேனாவும் குறிப்புக் கொப்பி யுமாய் மறுபடியும் மறுபடியும் பக்கங் களுக்குள் கரைந்தும் கதைகளின் உயிர்ப் பாத்திரமாய் வாழ்ந்து முடித்தேனே தவிர எழுத ஒருவரி கூட வரவில்லை.

எத்தனை எத்தனை வலிகள், வேதனைகள், உதிரம், கண்ணீர்...அதனை எதிர்கொள்ளவும் கடக்கவும் துணியும் அப்பெண் மனங்களின் போராட்டங் களின் பல்பரிமாணத் தன்மைக்குள் நம் கண்ணீரும் வலியும் மறுபடியும் நம்மைப் புதுப்பித்தும் உயிர்ப்பித்தும் கொள்கின்றனவேயொழிய வெண் தாளில் வரிகள் மட்டும் வந்து விழுவதாயில்லை. ஏறத்தாழ 100 புத்தகங்களுக்கு மேல் என் வாசிப்பு அனுபவத்தை இரசனைக் குறிப்பாய் எழுதி முடித்திருந்தும் வார்த்தையில் வடித்துவிட முடியாத, உணர மட்டுமே முடிந்த 'தோற்றுப் போதலின்' புத்தம்புது அனுபவம்.

‘‘ஆழ்ந்த துயரால் மன கிண்ணம் நிரம்பி வழிகின்ற பொழுதுகளில் அவை வார்த்தையின் வடிவெடுத்துத் தான் அழிந்துவிடுகின்றனவோ’’ எனும் குமுறலோடு தொடரும் இச்சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 10 சிறுகதைகள். இது அவரின் 10 வருட கடின உழைப்பும் கூடவாம். கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட தொகுதி இது.



சகோதரர் றஷ்மி அஹ்மதின் கை வண்ணத்தில் ஒற்றைக் கண் கொண்ட தஜ்ஜாலின் கொடூர முகம் முன் அட்டையிலும், லறீனா அப்துல் ஹக்கின் கம்பீரப் பார்வையுடன் கூடிய அழகுப் புன்னகை பின்னட்டையிலும் ஓவியக் கவிதையாய் விரிகின்றன.

“கவிதை எழுதும் கதைகள்” எனும் தலைப்பில் கவிஞர் புதிய மாதவி மிகச் செறிவான உரை ஒன்றைத் தந்திருக்கிறார். அதில் தான் உணர்ந்து கொண்ட லறீனா பற்றியும், அவரது கவிதை மொழி பற்றியும், அதனூடாக லறீனா விவரிக்கும் கதை மாந்தர்களின் நுண்ணிய உணர்வுகள் பற்றியும் எடுத்துச் சொல்கிறார்.

“எழுதவரும்பெண்களின்வாழ்க்கையும் அவர்கள் எதிர்கொள்ளும் ஊசிமுனைப் போராட்டங்களும் கண்ணுக்குத் தெரியாத காயங்களும் கதைப்பொருள் ஆகின்றன. எழுத்துலகில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு பெண்ணும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பதாக இருப்பது பெண்களின் கதைக் களம் காணும் புனைவுகள் அல்ல. அவை வாழ்க்கையில் அப்பெண்கள் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கின்றவை தாம்’’ என்கிறார், புதிய மாதவி.

தொகுதியின் முதல் கதை, ‘ஒரே ஒரு கனவுகூட மிஞ்சவில்லை’. சிசுவாய், குழந்தையாய், சிறுமியாய், குமரியாய் என பெண்களின் வாழ்க்கைப் பருவங்கள் அத்தனையிலும் அவள் சுமக்கும் கனவுகளோ கோடி கோடி. பல வண்ணங்களில் பல பருமன்களில் மனத்தரையினில் மலைக்குன்றுகள் என நிறைந்து கிடக்கும் கனவுகள் நனவாகும் வரம் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்தம் வாழ்வோ கொண்டாட்டத்திற்குரியவை. பூரிப்பு நிறைந்தவை. ஆனாலும், கதையின் நாயகி நிஸா மாமியின் மொத்தக் கனவுகளும் ஊதிக் கட்டிய பலூன்களில் ஊசியால் குத்துவது போல ஒவ்வொன்றாய் உடைக்கப்படுகின்றன.

புரிந்து கொள்ளாத கணவ ரோடு இணைந்து வாழ முடியாத நிலை வந்தபோதும் கூட, வயிற்றில் வளரும் தன் வாரிசுக்காய் எல்லா வற்றையும் சகித்துக் கொண்டு மிச்ச வாழ்க்கையையும் வாழ்ந்துவிட முடிவு செய்கிறாள் நிஸா. அப்போதும்கூட இறுமாப்பு நிறைந்த அந்த ஆண் அவளைச் சும்மா விட்டு விடவில்லை. ‘ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து’ என்பது போல இறுதியில், “ஒன்னை மாதிரி ஒரு புள்ள பொறக்காட்டியும் பரவாயில்லை” என்கிறான்.

“என்ட குணங்கள் என்ட புள்ளைக்கி வரப்படாதாமே... அப்பிடி ஒரு புள்ளையே

## திகைத்துப் போன உலகம்!

உலகம் படைக்கப்பட்டது
உயிர்கள் நிரப்பப்பட்டது
உவகை நிறைக்கப்பட்டது
மனிதன் பிறக்கும் முன்

மனிதன் படைக்கப்பட்டான்
பல துறைகளை பயின்றான்
எங்கும் முற்றுகையிட்டான்
உலகை ஆட்டி வித்தான்

இயற்கையினுள் வாழ்ந்தவன்
ஆறறிவு பெற்றான்
இயற்கைக்கு முரண்
திட்டங்கள் செய்தான்

பசுந்த பூமியை பந்தாடினான்
சூழல் சமநிலை இழக்க செய்தான்
இயற்கை சீரிட இன்னல் கண்டான்
அச்சம் விழிக்க அஞ்சிக் கொண்டான்

ஆறறிவை கசக்கி பிழிந்தான்
இயற்கைக்குள் மீள முடிவெடுத்தான்
பூமி தழைக்க திட்டமிட்டான்
இயற்கையை காத்திட சட்டமிட்டான்

அறிவியலின் உச்சமா இது
அறியாமையின் எச்சமா இது
உலகம் திகைத்தது
மனிதனைப் பார்த்து

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம் இலங்கை

*தேவையில்லையாமே! அப்படியென்டா நான் கூட தேவையத்தவள் தானோ?" (ப.48). அத்தோடு முடிந்து விடுகிறது, அவள் இறுதிக் கனவும்.*

*"வசந்தங்கள் பூத்தபோது குயில் இறந்து போவது எவ்வளவு துக்ககரமானது என்பதை உன்னால் உணர முடிகிறதா?" (ப.42) என்று அந்தப் பெண் கேட்பாளே ஒரு கேள்வி. இதற்கு மேல் வேறென்ன வேண்டும் அந்த நிஸாவின் உணர்வுநிலையினை உணர்ந்திட?*

*இரண்டாவது கதை, 'பொம்புள'. கணவனைப் பறிகொடுத்த விதவைப் பெண் தனது மிச்ச வாழ்க்கையை வாழவும், தன் குழந்தைகளை வாழ வைக்கவும் வழியின்றித் தவிக்கிறாள். இறுதியில் தனது அன்புக் கணவர் விட்டுச்சென்ற 'ஸ்கூல் சர்வீஸ் வேனை' தான் ஓட்டும் முடிவுக்கு வருகிறாள் சித்திம்மா. அவளின் இந்தத் துணிச்சலான முடிவைக் கண்டு அதிர்ந்து போகும் அவளைச் சுற்றியுள்ள ஆண்கள் சமூகமோ, 'விதவைப் பெண் என்றால் அடங்கி ஒடுங்கி வீட்டுக்குள்ளேயே கிடக்க வேண்டும்; தாம் பிச்சை போடும் சாக்கில் அடிக்கடி அவள் அருகில் சென்று உரசிக் கொள்ள வேண்டும்' என்றே விரும்புகிறது. அந்தப் பெண் தன் தொழில் முடிவில் உறுதியாக நிற்பது கண்டு சமூகம் அவள் மீது சந்தேகம் கொண்டு களங்கம் கற்பிக்க முற்படுகிறது. என்றாலும், அந்தப் பெண் கொண்ட ஈமானிய உறுதி அவளை வாழவைக்கும் என்ற பெரும் நம்பிக்கை கதைசொல்லிக்குப் போன்றே எனக்கும்.*

*அடுத்து 'கறுப்பி'. அவள் ஓர் ஏழை கறுப்பி. பாடசாலைச் சமூகத்தாலும் சுற்றுச்சூழலாலும் ஏன், தன் பெற்ற தாயாலுமே புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப் படும் ஏழைக் கறுப்புச் சிறுமி ஒருத்தியின் கண்ணீரும் குருதியும் இணைந்த இன்*

னொரு சோகக் காவியம், கறுப்பி. ‘கொடிது கொடிது இளமையில் வறுமை’ என்பது எவ்வளவு பெரிய உண்மை! அத்துணை புறக்கணிப்புக்கு மத்தியிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறுகிறாள் அவள். அதுவரை வன்சொற்களாலும் சரீரத் தண்டனையாலும் துன்புறுத்திய ஆசிரியைகூட பாராட்டிப் பேச முற்படுகிறார். இறுதியில் கன்னங் கரேலென்ற அவளது புறங்கை அந்த வீதி விபத்தில் குருதியில் குளித்துச் செக்கச் செவேலென்றாகிறது. ஐசியூவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அந்த ஏழைச் சிறுமிக்கு உயிராபத்து ஏதும் வந்து விடக் கூடாதே என்ற பதைப்போடும் பிரார்த்தனையோடும் தான் அடுத்த கதைக்குள் நுழைய முடிகிறது.

நான்காவது கதை, ‘எனக்கான வெளி’. நான் நினைக்கின்றேன், ஏதோ ஓர் இணையப் பக்கத்தில் இந்தக் கதையை வாசித்த போதுதான் லறீனாவை சந்திக்க வேண்டும்; அவரோடு பேச வேண்டும் என்ற ஓர் உந்துதலும் அவாவும் என்னுள் ஏற்பட்டிருக்க வேண்டும். கணவனின் காதலையும் கனிவான அரவணைப்பையும் எதிர்பார்த்து, அது கிடைக்காத ஏக்கமும் வெறுமையும் நிறைந்திருந்த இன்னொரு பெண்ணின் கேவல் தான் ‘எனக்கான வெளி’ சிறுகதை. கனவும் நிகழ்கால நனவுமாய் அவளின் எதிர்பார்ப்புகளும் நிஜத்தில் எதிர்கொள்பவையுமாய் என ஒரு வினா விடைக் குறிப்பொழுங்கில் மாறி மாறி நனவோடை கதை சொல்லல் முறையில் சொல்லப்பட்டுக் கொண்டே நகரும் இக்கதையில் அவளின் உடல் உள நிலையை, உணர்வுகளை அதன் கெஞ்சல்களைச் சிறிதும் கணக்கில் கொள்ளாமல் தனது கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒரு ‘ரோபோ’ போன்று தனக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று ஆணையிடும் கணவனும் கண்ணீரோடு காலம் தள்ளும் அவளும்... இருந்தும் அந்தக் கண்ணீரைத் துடைக்க வரும் பிஞ்சுக் கரங்களோடும் நெஞ்சு நிறைந்த பரிவோடும் அவள் பெற்ற பெண் பிள்ளை. அவளின் எதிர்காலம் தொடர்பான கைப்பிடியளவு நம்பிக்கை யோடு அடுத்த கதைக்குள் நுழைகிறேன்.

ஐந்தாவது கதை, ‘எழுதப்படாத கவிதை’. கதை சொல்லல் முறையில் இருந்து சற்றே விலகி ஓர் ஆண் குரலில் நகர்கிறது. ஆனால், மீண்டும் அதே பெண் வலிதான் பேசப்படுகிறது. அவள் தனக்குப் பொருத்தமான துணை என நம்பியிருந்த அவளது பள்ளித் தோழனான முறைமச்சான் பெற்றவளின் பேச்சுக்கும் சொத்தாசைக்கும் அடங்கிப் போய் இன்னொருத்தியைத் துணையாக்கி கொள்கின்றான். அந்த ஏமாற்றத்தில் சிதைந்த தன் மென் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தனக்கென அமைத்துக் கொடுக்கப்பட்ட வாழ்க்கைக்குள் நுழைகிறாள், ‘எழுதப்படாத கவிதை’ கமருன்னிஸா - நிலாப்பெண் -. மனசு நிறைந்த எதிர்பார்ப்புகளோடு புகுந்த வீடு வரும் அறிவார்ந்த அப்பெண்ணின் கலகலவென்ற பேச்சும் சிரிப்பும் கவிதை மொழியும் கணவனுக்கு எரிச்சல் நிறைந்த ஒன்றாக மாறிப் போகிறது. குடும்பப் பெண் என்றால் அதிகம் பேசாமல், வாய்விட்டுச் சிரிக்காமல் அடங்கியொடுங்கித்தான் இருந்தாக வேண்டும் எனக் காலங்காலமாக இறுக்கமாகக் கட்டி எழுப்பப்பட்டு இருக்கும் பெண்ணுக்கான சட்டகத்தையே சரியானது என நம்பும் பலரில் அவனும் ஒருவனாயிருந்தான். ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அந்தச் சின்னப் பெண்ணின் காதல் மனதை கண்டுணர மறுக்கும் அவன், இறுதியில் அவளைக் கைகழுவியும் விடுகிறான்.

அவள் மகிழ்வாக வாழ்வதாய் நம்பிக்கொண்டிருந்த அந்த முறைமச்சான் தன்னை விரும்பியவளின் வாழ்க்கை செழிக்கவில்லை என்பதை அறிந்து துடிதுடித்துப் போகின்றான். காலம் கடந்த ஞானம்! அவளை மறுபடியும் கரம்பற்றி அவள் வாழ விரும்பிய வாழ்க்கையை அவளுக்குப் பரிசளிக்க வேண்டும் என்று ஆவலோடு அவளைத் தேடி வருகிறான். ஆனாலும் அவளோ அவனை விட்டும் அவளை வஞ்சித்த இவ்வுலகைவிட்டும் மொத்தமாய் விடை பெற்றிருப்பாள். கவிதை வரிகளால் ஓர் அழகிய சித்திரமாய் விரித்துச் சொல்லப்படும் இக்கதையின் கோர முடிவை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

அடுத்து “மனச்சிறகு”. அட, இதுவும் ஓர் இளம்பெண்ணின் மனசு நிறைய சேமித்து வைத்த ஆசைகள், கனவுகள் சருகான கதைதான். வாழ்நாள் முழுதும் சேமித்த தன் கனவுகள், உணர்வுகள், கற்பனைகளோடு எதிர்பார்ப்புகளோடு கட்டார் வந்து சேர்கிறாள், நிஸா. வேலைப்பளுவும் அவளில் பெரிய அளவான விருப்பும் இல்லாத அவளின் கணவனும் தெரிந்தோ தெரியாமலோ அவளை அவள் ஆசைக் கனவுகளை, உணர்வுகளைப் புறக் கணிக்கத் தொடங்குகிறான். அந்தப் புறக்கணிப்பு களின் பெருவெக்கையில் அவள் கனவுகள் சருகாய் உதிரத் தொடங்குகின்றன.

இருவேறு மன உலகங்களுக்குள் வாழ்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாமல் திணறித் தவிக்கும் வாழ்வைச் சூனியம் என்று நினைத்த அந்தத் தம்பதியருக்கு இடை யில் அவன் பள்ளித்தோழி பானு வந்து சமரசம் செய்ய முனைகிறாள். தன் தோழியின் அழகழகான அறிவுரைகளால் நிஸாவின் கணவனின் வரண்ட சிந்தனை தெளிவாக புதுப்பிறவி காண்கிறான். ஆர்வம் பொங்க தன் மனைவியைக் காண வருகிறான் அவ்வாறு வீடு வரும் நிஸாவின் கணவன் எதிர்கொள்ளப் போவது அவள் இல்லாமல் வெறுமையாய் வெறிச்சோடிக் கிடக்கும் வீட்டைக் காணத்தானா? இந்த இடத்தில் ஓர் இனம்புரியாத தவிப்பும் முதன்முதலாய் நிஸா மீதான மெல்லிய கோபமும் முளைவிடத் தொடங்குகிறது, எனக்குள். இன்னும் ஒரு தரம் பேசிப் பார்த்து இருக்கலாம் என்ற அங்கலாய்ப்பு எழுகிறது. அட! எவ்வளவுதான் விரக்தி தரும் வாழ்வாக இருந்தாலும், அதைக் கடைசிவரை பொறுத்துக் கொண்டு அவள் வாழ்ந்தாக வேண்டும் என்று அடிமனசு எப்படி நினைக்கலாம்? இனியும் சகித்து வாழ இயலாது என்று நம்பிக்கையிழந்த நிலையில் தன் வாழ்வின் அடுத்த கட்டம் குறித்துச் சுயமாக முடிவெடுக்கும் நிலைக்கு அவள் வருவதை சிலபோது பெண்களாலேயேகூட சட்டென ஏற்றுக் கொள்ள முடியாமல் போகும் அளவுக்கு இச்சமூகமும் கலாசாரமும் நம் மனநிலை யைக் கட்டமைத்து வைத்திருக்கி றதோ என்ற சிந்தனையோடு அடுத்த கதைக்குள் நுழைகிறேன்.

ஏழாவது கதை, “ஸெய்னம்பு நாச்சி”. நான் விரும்பி வாசிக்கும் லரீனாவின் முகநூல் பதிவுகளுக்குள் இடைக்கிடையே கெத்தாக எட்டிப் பார்த்து சமூகத்தின் குறைகளைப் பயமின்றி சுட்டிக் காட்ட முனைகின்ற ஓர்மம் நிறைந்த அதே ஸெய்னம்பு நாச்சியே தான்.

ஒன்பது வயதான ஓர் ஏழை சிறுமி வளர்வதற்குத் தனது வீட்டுச்சூழலைப் பொருத்தமற்றதாக காணும் ஒரு தாய் தனது உறவுமுறைப் பெண் வீட்டில் அவளை விட்டுச் செல்கிறாள். அந்த உறவுப் பெண் சிறுமி நஸ்லியாவின் சக்திக்கு மீறிய பல கடினமான வேலைகளைக் கொடுத்து அவளை கொடுமைப் படுத்துகிறாள்.

அந்தச் சிறுமியின் கஷ்டங்களை, மனவேதனைகளைஉணர்ந்துஅவளைத்தாயாரோடு வீடு செல்வதற்கு உதவி புரிகிறார், செய்னம்பு நாச்சி. அந்தச் சிறுமிக்காகத் தானும் வீட்டை விட்டு வெளியேறவும் துணிகிறார். தலைநகரில் மலையகச் சிறுமிகள் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவது பற்றி நாம் அடிக்கடி செய்திகளில் பார்க்கிறோம்; கொதித்துப் போகிறோம். உண்மையில் இதுவும் ஒருவகை சிறுவர் துஷ்பிரயோகமே. நல்லவேளை, முளையிலேயே கருகிப் போகாமல் தன் கறாரான பேச்சுக்களால் அந்தப் பிஞ்சை மறுபடியும் துளிர்க்கச் செய்கிறார், செய்னம்பு நாச்சியார்.

கதைக்குள்ளே அவர் கலந்து கொள்ளும் பலவகைப்பட்ட உரையாடல்களுக்கு கதைசொல்லியின் புத்திக்கூர்மையும் முற்போக்குச் சிந்தனைகளும் பளிச்சிடும். மார்க்கத்தின்பெயரால்சமூகத்தில்நடக்கும் கேலிக் கூத்துக்கள், மூடநம்பிக்கைகள், அதற்கூடாக நசுக்கப்படும் பெண்களின் மன உணர்வுகள் என வெகு அழகாய்க் கதை நகர்த்தப்பட்டு இருக்கும்.

"கொஞ்சம் உட்டா இவனுவள் அங்ஙக்கிற மியூஸியத்தையும் இஸ்லாத்துக்கு எடுக்கிறய் எண்டு ஷெல்லி, அந்தப் பொணத்துக்கெல்லாம் ஜூப்பாவும் அபாயாவும் உடுப்பாட்டினாலும் புதினப்படுறதுக்கில்லடா வாப்பா!'' இவனுகள் இஸ்லாம் இஸ்லாமுண்டு ஷெல்லி இஸ்லாத்த இந்த ஒலகத்துக்கே லாயக்கில்லாத மார்க்கம் ஆக்கிட்டு வாறானவள். ஏன்ட வாப்பாண்டே! எங்கட காலத்திலயிம் இஸ்லாம் இல்லாமையா போச்சி? "எப்ப இந்த குரூப் குரூப்பா தொடங்கி இஸ்லாத்த வித்துத் திண்டு தண்ணி குடிக்கத் தொடங்கினான்களோ, அப்ப புடிச்சது எங்கட சமூகத்துக்கு முஸீபத்து."(ப.128 )

செய்னம்பு நாச்சி என்ன சொல்ல வருகிறார் என்பது புரிகிறது தானே?

அவர் சொல்வதாக இன்னொரு வரியும் வரும் 'பசியோ பட்டினியோ பெத்த புள்ளவள் உம்மாக்கிட்ட ஈக்கிக்கிறது தான் நல்லம்" (ப.132) என்று. உண்மைக்கு உண்மையான கருத்து அது.

எட்டாவது கதைதான் தஜ்ஜாலின் சொர்க்கம். நூலின் பெயரும் அதுதானே! தஜ்ஜால் என்பது முஸ்லிம் பண்பாட்டு மரபின் அடியான ஒரு தொன்ம நம்பிக்கை. அதனை நிகழ்வெளிக் கதைக்குள் கொண்டு வந்து இணைத்துள்ள விதம் மிக அற்புதமாக அமைந்துள்ளது. பெச்சிம்மாக் கிழவி சொல்லும் கதையாக தஜ்ஜால் இக்கதைக்குள் மெதுவாக நுழைகிறான்,

"அவன் இப்பவும் ஒலகத்துல எங்ஙயோ ஒரு மூலைல ரகசியமான ஒரு குகைக்குள்ள ஈக்கிறான். அது நெலத்துக்கடியிலயா கடலுக்கு அடியிலயாண்டு தாறுக்குமே தெரியா. அவன அங்க பென்னாம் பெரிய்ய்ய சங்கிலியால கட்டிவெச்சி ஈக்கிது. அவன் எந்த நாளும் ராவெல்லாம் அந்தக் குகைட சுவர நாக்கால நக்கி நக்கி வெளிசாக்கிட்டே வருவானாம். அப்ப...'' (ப.137) என்று பெச்சிம்மா நிறுத்தும் போது, அவரைக் குழுமியுள்ள சின்னஞ்சிறுகளோடு நாமும் கதைக்குள் ஆழ்ந்து விடுகின்றோம்.

இவ்வாறு, தஜ்ஜால் பற்றிய தொன்மக் கதையையும் இணைத்துக் கொண்டு முனீராவின் கதையை நம் கண்முன் விரிக்கின்றார் கதைசொல்லி. என்ன சொல்வது? சோகம்.. சோகம். முழுக்கதையும் அப்படி ஒரு சோகம். வீட்டில் தன்னோடு வாழும் துணைவியின் அறிவையும் திறன்களையும் அடக்கி நசுக்கிக் கொண்டே

உலகம் தன்னை ஒரு முற்போக்குவாதியாகக் கருத வேண்டும் என்று போலிப் பெண் சுதந்திரம் பேசித் திரியும் இரட்டை வேடதாரிகளையும், மார்க்கத்தின் பெயரால் ஊரை ஏய்க்கும் நயவஞ்சகர்களுடைய கபட நாடகத்தையும் தோலுரித்துக் காட்டும் அதேநேரம், பெண் மக்களே ஆனாலும் அவர்கள் தற்சார்புடையோராய் வாழ்வதை ஊக்குவித்து உதவும் முனீராவின் பெரியப்பா போன்ற பரந்த மனதுடைய ஆண்களும் சமூகத்தில் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டி கதாபாத்திர வார்ப்பில் சமநிலை பேணுகிறார் கதை சொல்லி.

இக்கதையில் வரும் முனீரா போன்ற பெண்களின் நிலையைக் கண்டு தானோ அன்றைய பாரதியும், 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?' எனப் பாடி இருப்பானோ என்ற எண்ணம் மனதில் தோன்றி மறைந்தது. மறுபடியும் கனவுகள் சிதைக்கப்பட்ட இன்னொரு பெண்ணின் மனக்குமுறலாக இக்கதை இருந்த போதிலும், பெச்சிம்மாவின் கதையினூடே சொல்லப்பட்ட தஜ்ஜால், ஒரு கதாபாத்திரமாகக் கதைக்குள் உள் நுழைந்து எல்லோரையும் கிடுகலங்க வைப்பது ஒரு சுவாரஷ்யமான திருப்பு முனையாக அமைகிறது. இக்கதையில், தஜ்ஜால் என்பதும் அவன் காட்டும் சொர்க்கம் என்பதும் கதைக் கருவுக்கு வலுசேர்க்கும் இரு குறியீடுகளாக மாறிவிடுகின்றன. அவற்றைக் கதைக்குள் எடுத்தாண்டு மிகச் சுவாரஷ்யமாகக் கதையை வளர்த்துச் செல்லும் அவரது புனைவு உத்தி கூர்மை பெற்ற ஓர் அருமையான கதையாக இத்தலைப்புக் கதையினை அடையாளப்படுத்தலாம்.

இக்கதையில் முனீராவின் குடும்ப வாழ்வில் நடக்கக்கூடாத அசம்பாவிதங்கள் நடந்து முடிந்த பின்புதான், தஜ்ஜாலின் பிரவேசம் கதையில் இடம்பெறுகிறது. முதலாவது தரம் இக்கதையை வாசித்த போது, இவ்வளவுக்குப் பின்னும் முனீரா ஏன் பழையபடி தஜ்ஜாலின் சொர்க்கத்தை உண்மை என நம்பி மீண்டும் போகிறாள் என்ற ஒரு கேள்வி மனதில் தோன்றவே செய்தது. மேலும் இருமுறை வாசித்த பின்புதான் கதைசொல்லி தன் கதையில் உளவியல்சார்ந்த இயல்புநிலையை உல்வாங்கிக் கதையை விபரித்துள்ளார் எனப் புரிந்தது. அதாவது, பொதுவாக ஒருவருக்குத் தோன்றும் கனவுகள், அதில் வரும் நபர்களோ பிறவோ அவரது வாழ்வில் அவர் ஏலவே கண்ட, அவரது மனதில் ஆழமாகப் பதிந்த விடயங்களை அடிப்படையாக வைத்தே தோன்றும். அந்த அடிப்படையில், பெச்சிம்மாவின் கதையைக் கேட்டபடியே கண்ணயர்ந்துவிடும் முனீராவுக்கு, அவள் அதுவரை கேட்ட, அதேவேளை ஏலவே தான் சமயபாட வகுப்பில் கற்றிருந்த தஜ்ஜால் பற்றிய கதையின் நீட்சியாகக் காட்சிகள் கனவாக நீள்கின்றன. இப்பின்னணியில் அவளின் மனதின் அடியாழத்தில் ரணமாய்ப் பதிந்த சொந்த வாழ்வின் துயரங்களும், அதனோடு சம்பந்தப்பட்ட நபர்களும் உயிர்ப்பாத்திரங்கள் போல அங்கு உலாவருவதை கதைசொல்லி கச்சிதமாகப் படைத்துள்ளதோடு, தொலைவில் கேட்கும் மகளுடைய குரல் முனீரா அதுவரை கண்டுகொண்டிருக்கும் உலகுக்கு வெளியில் ஒலிப்பதுபோல் காட்டி, நம் ஐயத்துக்கு விடையளித்தும் உள்ளார். இந்தக் கதையின் சம்பவ உருவாக்கம், தொன்ம நம்பிக்கையோடு கலந்து அவற்றைச் சுவைபட இணைத்துள்ள விதம், கவித்துவ வீச்சுடன் இயங்கும் மொழிநடை என லறீனாவின் படைப்பாளுமைக்கு அணிசேர்க்கிறது, 'தஜ்ஜாலின் சொர்க்கம்'.

அடுத்து, ஒன்பதாவது கதைக்குள் நுழைகிறேன். ஆத்தா. கதை சொல்லி பிறந்து வளர்ந்த மண்ணில், மலையக மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், அவர்களின் கொண்டாட்டங்கள் என்பவற்றைப் பற்றிப் பேசும் கதை. இதில் உயிரோட்டமுள்ள பாத்திரங்களாக மலையகமே உலகம் என வாழும் ஆத்தாக் கிழவியும், தோட்டப் பிள்ளைகளும், அவர்களின் கல்விக்காகவும் அவர்களுடைய உள்ளார்ந்து ஒளிரும் கலைத் திறமைகளை வளர்ப்பதற்காகவும் பெரிதும் பாடுபட்டு வருபவருமான தினகர் மாஸ்டரும் என நம் மனதில் நிரந்தரமாக தங்கி விடுகின்றனர். காட்சி, வர்ணனைகள், பாத்திர உரையாடல்கள் வெகு இயல்பாகவும் உயிரோட்டம் நிறைந்ததாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மது போதை தரும் அழிவுகளும், அதை எதிர்க்க ஆத்தா செய்யும் அளப்பரிய தியாகமும் வியக்க வைப்பவை. பொன்னாத்தாக் கிழவியின் பாத்திர உருவாக்கம் மிக வலுவாகவும் வெகு இயல்பாகவும் அமைந்திருப்பதோடு, எந்த ஒரு சமூக மாற்றத்துக்குமான வித்து முதலில் அவரவர் வீட்டுக்குள் விதைக்கப்படுதல் வேண்டும் என்ற ஆழமான செய்தியை இக்கதை அனாயாசமாகச் சொல்லிச் செல்கிற அழகை மிகவும் இரசித்தேன்.

அதேபோல், இக்கதையில் இடம் பெறும் மகிஷாசுர வதம் கூத்தும் பாடலும் காட்சியும் மிக அருமை. கிராமியக் கலையான கூத்து வடிவத்தினை சமூக மாற்றச் சிந்தனையை விதைப்பதற்கான கருவியாக முன்னிறுத்தி இருப்பதும், காலங் காலமாக மலையக மக்களை ஏமாற்றிச் சுரண்டும் அரசியல்வாதிகள், அவர்களுக்குத் துணைபோகும் அடிவருடிகள் குறித்த சமூக விமர்சனத்தை ஒருவித எள்ளல் பாணியில் முன்வைக்கும் கதையாக இது அமைந்திருப்பதும் சிறப்பு.

"அடக்குமுறை யாளர் காட்டில்
அடைமழை பொழிந்ததை - இனித்
தடந்தெரியா தழிப்பதற்கு
தேவி நானும் வருகிறேன்
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா
இருளடர்ந்த நாட்டில் தீபம்
ஏற்ற நானும் வருகிறேன்
பொருளிருக்கும் திருடர்கொட்டம்
போக்க இன்று வருகிறேன்...
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா

பெண்குரல் உடுக்கொலியோடு ஓங்கியொலித்து ஓய, அதைத் தொடர்ந்து கோரஸ் ஒலித்தது:

"மதுவரக்கன் ஒழிகவே!
மலைநாடு உயர்கவே!
புதுபுரட்சி ஓங்கி வாழ்வு
புதிய விடியல் காணவே!
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா
வருக காளி வருகவே!
பருகத் தீயர் உதிரமே!"

(ப.165) என்ற வரிகளை வாசித்துச் செல்கையில் ஒருவித உத்வேக உணர்ச்சி தோன்றி மயிர்க்கூச்செறிவதான சிலிர்ப்புணர்வு.

"ஆமாடி, எவெ வூட்டுக் குடியெக் கெடுத்தாச்சூ, எவெளெவளுவ தாலி அறுந்தாலூ, தங்கட அடிமடி ரொம்பினாச் செரின்னு நெனக்கிற பொணந்தின்னிக் கூட்டத்துக்கு, மக்களப் பத்தி என்னா அக்கற இருக்கப் போவூது?"

"அடியாத்தீ! நம்ப பொன்னாத்தாக் கிழவிக்கு கற்பூரப் புத்திடி! பாரே,

*எம்புட்டு செரியா விசயத்தப் புடிச்சிக் கிட்டான்னு!" (ப.164) என்று மலையகப் பேச்சுமொழி கொஞ்சி விளையாடும் 'ஆத்தா'வின் மலையக மண்வாசனையில் மயங்கியவாறே இறுதிக் கதையான புளிய மரத்துப் பேய்களுக்குள் நுழைகிறேன்.*

*ப்பாஹ்! என்ன சொல்வது? எத்தனை தடவை வாசித்தாலும் மறுபடியும் மறுபடியும் வாசிக்கத் தூண்டும் அற்புதமான ஒரு கவிதை மொழியில் சின்னப் பெண்ணொருத்தியின் மன ஓட்டத்தை அடுக்கிக் கொண்டே போகின்றார், கதைசொல்லி. சொந்த வீட்டுக்குள், குடும்பத்தவர்களால், அண்டை அயலவர்களால் பெண் என்ற ரீதியில் அடையும் இன்னல்கள், சுரண்டல்கள் தாம் எத்தனை! எத்தனை! மொத்த சோகங்களுக்கும் வடிகாலாய் தன் ஆயிரம் கரம் கொண்டு அவளை அணைத்து ஆறுதல் கொள்ளச் செய்யும் புளியமரம் கதையின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்று. பின்நவீனத்துவப் புனைவுக் கூறுகளைக் கொண்டமைந்த இக்கதை பலவகையிலும் தனித்துவமான ஒரு படைப்பு எனலாம்.*

*"புளியமரம் அவளை வாஞ்சையோடு கூவி அழைப்பதான உள்ளுணர்வு அவளுக்குள். தாயைப் பிரிந்த பிள்ளையைப் போல் இரு கைகளையும் விரித்து புளியமரத்தின் அடியைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சில கணங்கள்வரை கண்மூடிக் கிடந்தாள். சற்றைக்கெல்லாம் கோப்பி மரக்கிளையில் தாவி ஏறி, புளியமரத்தில் தொற்றிக் கொண்டாயிற்று. கிளிகளுக்கும் குயில்களுக்கும் போட்டியாக அவள் வாய்விட்டு உல்லாசமாகப் பாடத் தொடங்கி விட்டாள்." (ப.180)*

*"மெல்ல மெல்ல அவளுடல் நெகிழ்ந்து உருகத் தொடங்கிவிட்டது. திரி பற்றியெரியும்போது மெழுகு உருகியுருகித் துளிகளாய் வழிவதுபோல அவள் உடலின் அங்கங்கள் ஒவ்வொன்றாய் கரைந்து கிளைகளினூடே வழியத் தொடங்கிவிட்டன. 'இப்படியே முழு உடலும் கரைந்து தான் அழிந்துவிடுவேனா' என்று அவள் அஞ்சத் தொடங்கியதும், புளிய மரத்தின் கிளைகள் நீண்டுவந்து அவளது அங்கங்களைத் தம்மோடு பிணைத்துக் கொள்ளத் தொடங்கின. சதையும் கிளையும் கலந்து அவள் மரமா,*

# அதேப் புன்னகை

**ஒரு கண்**
**பிறவிக் குருடாயுள்ள**
**குமரேசன் - தன்**
**அடகுக் கடையிலுள்ள நகைகளை**
**பத்திரமாய் பாதுக்காத்து**
**வாடிக்கையாளர்களுக்கு**
**திரும்பத் தருகிறார்**

**ஆயிரம் கண்ணுடைய**
**மகமாயோ**
**அனைத்து நகைகளையும்**
**அர்ச்சகர்கள்**
**அள்ளிக்கொண்டுப் போனபின்னும்**
**அதேப் புன்னகையோடு**
**ஆயுதமேந்தி**
**அமர்ந்திருக்கிறாள்.**

**- நாகை ஆசைத்தம்பி**
**கோவை**

மனுஷியா என்று பிரித்துணர முடியாத ஓர் அபூர்வ உயிரியாகிவிட்டாள். '' (ப.189)

என்ற சித்திரிப்புகளினூடே தாயன்பு கிடைக்காத சின்னஞ்சிறிய மனது, தாயின் மடியாகப் புளியமரத்தை வரித்து அணைத்துக் கொள்வதும், கொஞ்சி விளையாடுவதும், தன் உணர்வுகளோடு ஒன்றிவிட்ட அம்மரத்துடன் ஊனும் உயிரும் இரண்டறக் கலந்துவிடுவதான கற்பனையில் மிதப்பதுமாகத் தீட்டப் பட்டுள்ள அபூர்வமான ஒரு கதை, 'புளியமரத்துப் பேய்கள்.

ஓர் இளஞ்சிறுமியின் கொண்டாட்டங் கள், கள்ளங்கபடமோ சமூகம் கற்பித்த வரையறைகளோ அறியாமல் காடு மேடெங்கும் சுற்றித் திரியும் துள்ளாட்டம், குறும்புத்தனங்கள் என வெகு சுவாரசிய மாக நகரும் கதையெங்கும் 'குட்டி'யே நிறைந்து இருக்கிறாள். பேய்கள் வாழ்வது புளியமரத்தில் அல்ல, வீடுகளில்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லிச் செல்லும் அருமையான படைப்பு.

"அந்த உருவம் சற்று முன்னால் வந்தபின்தான் கைகளில் பால் போத் தல்கள் நான்குடன் சோமபால நடந்து வருவதைக் கண்டாள். அவள் மனதுக்குள் குறும்பு கூத்தாடத் தொடங்கிவிட்டது. 'இரி ஒனக்குச் செய்யிறன் வேல!' என்று கருவியபடி மரக்கிளையில் நிமிர்ந்து வசதியாக அமர்ந்துகொண்டாள். முதுகுக்குப் பின்னால் விரிந்திருந்ததலை முடியை முன்னால் இழுத்து முகத்தை மறைத்துத் தொங்கவிட்டாள். கைகளை இருபுறமும் விரித்து வெள்ளைத் தாவணியை மேலே போட்டுக்கொண்டாள். ஏதோ யோசனையில் நடந்துவந்த சோமபால புளியமரத்தை நெருங்கியதும் வெள்ளை நிறத்தில் ஏதோ அசைவதைக் கண்டு துணுக்குற்றான். முதல் நாளிரவு குடித் திருந்த 'கசிப்பு' தந்த மப்பு முற்றாக நீங்காத விழிகளால் மறுபடியும் புளியமரத்தை ஏறிட்ட அதேகணத்தில்... 'ஹோ!!!!' என்று அடித்தொண்டையால் கத்தினாள் குட்டி. அடுத்தகணம், சோமபாலவின் கையில் இருந்த நான்கு பால் போத்தல்களும் நழுவிக் கீழே விழுந்து உடைந்தன." (பக்.90-91)

என வாழ்வின் எல்லா இன்னல்களை யும் எதிர்கொள்ளத் துணிந்த அந்தச் சின்ன குட்டியின் தீமைக்கெதிரான எளிய எதிர்ப்புணர்வு வெளிப்படும் பாங்கு மிகவும் இரசிக்கத்தக்கதாக அமைந்திருக்கிறது.

கலகலவென்ற வாய்கொள்ளாத சிரிப்போடு முடிகிற இந்த அற்புதச் சொல்லோவியம், லறீனா பத்து வருட கால இடைவெளிக்குப் பிறகு எழுதிய சிறுகதைகளில் அதிசிறந்த கதையாகத் தோன்றுகிறது. இக்கதையில் மூவினத்து மக்களையும் உள்ளடக்கியதாக அமைத் திருப்பதும் சிங்கள ''தமிழ்'' முஸ்லிம் மக்கள் கலந்து வாழும் ஒரு கிராமிய வாழ்வினைச் சுவைபட கண்முன் நிறுத்தி இருப்பதும் மற்றுமொரு சிறப்பு எனலாம். லறீனாவின் பத்து கதைகளிலும் என்னை மிகவும் கவர்ந்த சிறுகதை இது என்றே சொல்லலாம். இந்தக் கதையைப் படித்து முடித்தபோது, லறீனா இத்தோடு நிறுத்திவிடாமல், இதையொத்த கதைகள் பலவற்றை எதிர்காலத்தில் இலக்கிய உலகுக்குத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு என்னுள் மேலோங்கியது.

இத்தொகுதியில் உள்ள கதைகள் அனைத்தும் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டவை என்றாலும், அவற்றில் அனேகமான கதைகளை வாசிக்கும்போது ஒரே பெண்ணின் பல்வேறுபட்ட

துயரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிச் செல்வதான ஒரு பிரமை எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அனேகமான கதைகளில் கதாநாயகியின் பெயரும் ‘நிஸா’ “பெண்” என்பதாகவே அமைந்திருப்பது அந்தப் பிரமைக்கு மேலும் வலுசேர்க்கிறது. இது வாசகர்களை ஒருவகையான சலிப்புணர்வுக்குள் அல்லது அயர்ச்சிக்குள் தள்ளவும்கூடும்.

எனினும், பெண்ணின், குறிப்பாக முஸ்லிம் பெண்களின் அகவலிகளை இந்தளவுதூரம் ஆழமாகப் பேசிய வேறொரு சிறுகதைத் தொகுதி ஈழத்தில் எழுந்திருக்குமா எனத் தெரியவில்லை. அந்த அளவுக்கு, இலகுவில் யாரும் உய்த்துணரவோ பேசவோ முற்படாத பெண் மனதின் ஏக்கங்கள், அகவலிகள், நிராசைகளை மனதை அப்படியே ஈர்த்தெடுத்துக் கட்டிப் போடும் கவித்துவமான நடையில் இக்கதைகள் பதிவு செய்துள்ளன என்றால், அது மிகையன்று.

கண்ணீரும் விசும்பலும் ஆவேசமும் ஆத்திரமும் ஆற்றாமையும் ஒப்பாரியும் என இவ்வொற்றைப் பெண்குரல் சொல்லிக் கொண்டே போகும் இக்கதைகளினூடே ஒரு வரலாறு மிக அழுத்தமாய்ச் சொல்லப்பட்டுக் கொண்டே வருகிறது.

இலங்கை இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் ஏபிஎம் இத்ரீஸ் அவர்கள் இந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டு இருப்பதுபோல், ‘தன் காலத்தை அறிந்துகொள்ள விழையும் அழைப்பாளன், ஆணாதிக்கத்தின் எண்ணற்ற முகங்களைப் புரிந்துகொள்ள முனையும் பெண்ணிலைவாதி போன்றோர் லறீனாவின் கதையுலகத்தைப் படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இச்சமூகம், அதற்குள் அடங்கும் ஆண்கள், பெண்கள் அனைவரும் மீளவும் மீளவும் படிக்க வேண்டிய பெண்ணின் வரலாறு இது. அதனூடே தான் தம்முள்ளே சிந்தனை மாற்றத்தைக் கொண்டுவரவும், பால்நிலை சார்ந்த பாரபட்சங்களாலும் ஒதுக்குதல்களாலும் சிதைந்துபோன சமூகக் கட்டமைப்பை, ஆண் பெண் சமத்துவ உறவைக் கட்டியெழுப்பவும், சமூகத்தில் புத்தொளி பரப்பவும் முடியும்.

சோதனை பல கடந்து வரலாறு ஆகிப்போன இப்பெண்குரல் மேன்மேலும் பல சாதனைகள் படைத்திட என் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.

**எஸ். ஃபாயிஸா அலி-இலங்கை**

---

**மனம்**



மனந்தான் கோயில் என்போமே
மனமே தூய்மை கொண்டாலே
தினமும் தோன்றும் நினைவுகளே
செழிப்பை யூட்டும் வாழ்வோங்கக்
கனவு மிங்கே காண்கின்றோம்
கவிதை போல வாழ்ந்திடவே
நனவாய் ஆகி மகிழ்ந்திடவே
நாளும் எண்ணி ஏங்குகிறோம்!

பாவலர்மணி தென்றல் கவி



# உளங்கவர் உயிரோவியமே

பாவையின் பார்வையில்
உள்ளமது உருகியதே

இமைகள் இசைந்திட
இனிமை உண்டாகுதே

அதரங்களின் சுழிப்பில்
சிலிர்ப்பும் வந்ததே

கன்னக் கதுப்பில்
முத்திரைப் பதித்திடவோ

மல்லிகையின் வாசமதில்
மனமும் மயங்குதே

இதயவானில் உதித்திட்ட
உதயநிலவும் நீதானே

பூந்தென்றல் காற்றே
பொங்கிடும் ஊற்றே

குறுநகை சிந்தும்
காதல் நாயகியே

கண் சிமிட்டலில்
வசமானேன் உன்னிடமே

நெஞ்சமும் துடிக்கிறதே
மஞ்சமும் அழைக்கிறதே

வஞ்சமில்லாப் பெண்ணே
தஞ்சமானேன் கண்ணே

கஞ்சம் வேண்டாமே
கொஞ்சிடும் பொழுதினிலே


நற்காரிகையே நயனத்தில்
மயங்குகிறேன் அன்பே

என்னில் பாதியானவளே
உயிரில் கலந்திடு

உணர்வில் உறவாகி
காதலைத் தந்திடு

படித்திடும் காவியமே
உளங்கவர் உயிரோவியமே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்



# உளி பேசும் மொழி



17

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவரின் வாக்கு.

இக்குறளின் கருத்தினை உற்று நோக்கினால், எப்படிப்பட்ட சக்தி வாய்ந்தவராயினும், நீரில்லாமல் இவ்வுலக வாழ்க்கை அமையாது. அவ்வழியே, நீரானது மழையின் வாயிலாகவே இப் புவிக்குக் கிடைக்கப் பெறுகிறது. மழை இல்லையென்றால் இவ்வுலக வாழ்வில் ஒழுக்கமும் நிலை பெறாமல் போய்விடும். இதனைக் கருத்தில் கொண்டே வள்ளுவரும் 'வான்சிறப்பு' என்ற அதிகாரம் முழுமையும் நீர் மற்றும் மழையின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். இப்பூமிப்பந்தில் வாழும் அனைத்து விதமான உயிரினங்களும், வாழ்வதற்கு அடிப்படை மூலக்கூறாக விளங்குவது நீராகும். இதில் மானிட சமூகம் மற்றும் விலங்குகள் மட்டுமின்றி உயிருள்ள அனைத்து ஜீவராசிகளும், தாவரங்களும் உள்ளடங்கும்.

இதில், தாவரங்களுக்கும் உயிர் மற்றும் உணர்வு உள்ளது என்பதனை அறிவியல் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு கடந்த 18ம் நூற்றாண்டின் இறுதியில் தான் கண்டறிந்தனர். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்ட நம் தமிழ் இலக்கியங்களில் தாவரங்களையும், மரங்களையும் தமது குடும்ப உறுப்பினராக மட்டுமன்றி உடன் பிறவாத சகோதர மனப்பான்மையுடன் பாவித்து நம் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதனை நம் இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இதனைச் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில், தன் தாய் வளர்த்த புன்னை மரத்தினை தனது தமக்கையாகவே எண்ணி அம்மரத்தின் கீழ் நின்று தன் தலைவனுடன் உரையாட நாணமாக உள்ளதாகத் தலைவி கூறுவதனைக் கொண்டு, தாவரங்களுடன் சங்ககால மக்கள் உறவுமுறையோடு வாழ்ந்துள்ளனர் என்பதனை நம்மால்

கரிகாலன் கட்டிய கல்லணை



அறிய முடியும். இதன் மூலம் சங்க கால மக்கள் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அஃறிணையே ஆயினும், அதன் மீது அளவு கடந்த அன்பினைக் கொண்டிருந்தனர் என்பதனை நம்மால் உணர முடியும். அவ்வழியே ஐந்தறிவு மற்றும் ஆறறிவு கொண்ட உயிரினங்களான விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு அடிப்படை ஆதார மான மற்றும் முதன்மை உணவாவதும் தாவரங்களே ஆகும். இத்தாவரத்தின் உயிர்ப்பு, வளர்ச்சி மற்றும் உணவு தயாரித்தலுக்கு மூலமாக விளங்குவது நீர் என்றால் மிகையாகாது.



சிற்ப நுட்பத்துடன் கூடிய கல்தூண்கள்

இப்புவிப்பரப்பானது 71 சதவீதம் நீராலும், மற்ற பகுதிகள் நிலத்தாலும் சூழப்பட்டுள்ளது. புவியானது முதன்மையாக, பெரும்பாலும் நீரால் சூழப்பட்டிருப்பினும், அதில் மனித ஜீவராசிகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ள நன்னீரானது தோராயமாக நீரின் மொத்த அளவில் 3 சதவீதம் மட்டுமே உள்ளது. இதிலிருந்து, நீரானது பல்வேறு வகைகளில் ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் இன்றியமையாததாக இருப்பதனை நம் அனைவராலும் உணர முடிகிறதல்லவா?

ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு, சங்க காலம் தொட்டு, நீரின் இன்றியமையாததையும், அதன் வலிமையையும் நமது பண்டைய தமிழ் இலக்கியங்கள் பல இடங்களில் எடுத்துரைக்கிறது. அக்காலகட்டத்தில், சோழர்களின் நிலப்பகுதிகளில், தவழ்ந்து பாய்ந்து ஓடிய காவிரியானது, பல நேரங்களில், கட்டுக்கடங்கா சீற்றத்துடன், பெருவெள்ளமாக நிலப்பரப்பு அனைத்தையும் ஆக்கிரமித்து, அப்பகுதியினைக் கடந்து கடலினைச் சென்றடையும். இவ்வாறான காவிரியின் சீற்றத்தைத் தணித்து, அதன் பெரும் வலிமையை மடைமாற்றி மக்கள் மற்றும் அனைத்து ஜீவராசிகளின் அல்லலைப் போக்கும் வகையிலும், மேலும் விவசாயம் மற்றும் அனைத்து விதமான நீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் ஏற்படுத்தப்பட்டது தான் கரிகாற் பெருவளத்தான் கட்டிய ‘கல்லணை‘ என்ற அரிய பொக்கிஷமாகும். அதனாலேயே பண்டைய காலந்தொட்டு இன்றுவரை சோழமண்டலமானது நெற் களஞ்சியமாகப் போற்றப்படுகிறது,

இந்த அரிய பொக்கிஷமான அணை யானது, இன்றைய நவீனத் தொழில் நுட்பத்தினாலும் கணக்கிட முடியாத அளவில்கட்டப்பட்டுள்ளது. அந்த தொழில் நுட்பமானது, காவிரி ஆற்றின் குறுக்கே, நீரின் அரிப்பினை தடுக்க, பெரிய பெரிய பாறைகளைக் கொண்டு, அடுக்கடுக்காக அமைக்கப்பட்டு ஒவ்வொரு அடுக்கின் இடைப்பட்ட பகுதியில் தண்ணீரில் கரையாத ஒருவித களிமண்ணைப் பூசி பாறைகள் நன்றாக ஒட்டிக் கொள்ளும் விதமாக உருவாக்கப்பட்டு அதன் மீது கட்டப்பட்டுள்ளது.

மேலும் இரண்டாயிரம் வருடங்க ளுக்கு முன்பு கட்டப்பட்ட நீர்த்தேக்க மானது இன்றும் பயன்பாட்டில் இருப்பது உலகளவில் 'கல்லணை' மட்டும்தான் என்பதனை எண்ணும் போது தமிழரின் தொழில் நுட்ப மற்றும் நீர் மேலாண்மை அறிவானது ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே சிறந்து விளங்கியது என்பது நமது மூதாதையர்களின் பெருமையை உலகுக்குப் பறை சாற்றுவதாக அமைந் துள்ளது. இவ்வணை கட்டப்பெற்ற நோக்கத்திற்கு ஏற்ப காவிரியின் நீரானது முற்கால சோழப் பேரரசின் நிலப்பகுதி அனைத்தும் நீர்நிலைகளால் செழிப்புற்று, விவசாயமானது, அனைத்து காலநிலைகளிலும் சிறந்தோங்கியது. அதன் வழியே,

'சோழ வள நாடு சோறுடைத்து' என்ற சிறப்புப் பெயரும் பெற்றுத் திகழ்ந்தது.

அக்கால சோழ நாட்டின் பெருமை யைத் தாங்கி பல நூற்றாண்டுகள் கடந்து இன்றும் நம் தமிழகத்தில் விவசாயத்திற்கான ஆணிவேரின் அடிநாத மாகக் கல்லணையானது கம்பீரமாக தன்னுடைய பணியினை இடைவிடாது செய்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் நம் மூதாதையர்கள் நீருக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும், அந்த கோட்பாடுகள் இன்றும் என்றும், எக்காலத்திற்கும் பொருத்தமானவை என்பதனை எவராலும் மறுக்க இயலாது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த, ஒவ்வொரு மானுடனின், உயிர் நாதமாக விளங்கும், நீரினை அடிப்படை தத்துவ மாகக் கொண்டு, ஒரு ஆலயமானது தமிழகத்தின் நடுநாயகமான நிலப்பரப்பில் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுப்பப் பட்டு, இன்றும் செம்மையுடன் காட்சித் தரும் அவ்வாலயச் சிறப்பினைப் பற்றி அறிந்து கொள்ளத் தொடர்ந்து உளியின் மொழியோடு இணைந்து இருங்கள்.

- உளியின் மொழி தொடரும்-





# மருதாணியும் நானும்

நான் : -

என்னவளின் நாணம் இளையமா லைப்பொழுதின்
பெண்ணவள் போலும் பளபளக்கும் - வண்ணமது
உன்னிடமே பெற்றாள் என்றே உளம்வியந்து
என்னிடமே செப்பல் இழுக்கு.

மருதாணி : -

பூவாய்க்; கொடியாய்ப்; புகழ்விரலில் கோலமாய்;
பாவாய்க் கரத்தில் படர்ந்திருப்பேன்; - நீவாய்த்
திறக்காதே உன்னவள்கை ஒப்பனையாம் நானே
மறக்காதே கொள்வாய் மனம்.

நான் : -

மறைகின்ற பூவே; மதுச்சுவையே இன்றி
கரைகின்ற சாந்துக் களியே; - நிறைஒளி
அம்பிறையாள் கையை அழகுமலர் என்றெண்ணித்
தும்பியினம் தேடும் துடித்து.

மருதாணி : -

வண்டினங்கள் தேடும் விரைமலராள் உன்னவள்;அப்
பெண்டினங்கை வாசமெல்லாம் பெற்றதென்னில் - செண்டினத்தை
ஏனிழுக்குச் செய்கின்றாய்? என்றும் வனம்வளரும்
நினிழுக்காப் பெண்முன் நவில்?

நான் : -

வண்ணமுலைப் புற்று; வளர்க்கூந்தல் கோநாகம்;
கன்னங்கள் மாங்கனிகள்; கால்வாழைக்; - கண்ணல்லி
கொஞ்சிப்பே சும்வாய்க் குடந்தேனே ஓதக்கேள்
வஞ்சியவள் சோலை வனம்.

# ஏடி வரதராசன்

மருதாணி : -

வெய்யில் குயில்கூவும்; வண்ண மயிலாடும்;
துய்யதோர்த் தென்றல் தொடர்ந்துவரும்; - மெய்க்குளிர
வைக்கும் நிழல்கள்; வரதா இதிலிருந்துப்
பொய்க்கும்உன் பாவைப் பதம்.

நான் : -

பேசக் குயில்பாட்டாம்; பெண்டாள் நடைமயிலாம்;
வீசவருந் தென்றல் வருகையாம் - நேசநிழல்
ஏங்குமே காண இவள்குழலை; நீயுரைத்த(து)
ஆங்குத் தனித்தனிப்பார் ஆய்ந்து.

மருதாணி : -

காருலவும் வானில் கதிரும் அடங்குதல்போல்
போருலவும் வாளின் பெருவிழியின் - சீருடலில்
தைத்ததொருப் பூவாய்த் தளிர்க்கையில் நீயரைத்து
வைத்ததேன் என்னை வரைந்து.

நான் : -

பாலையில் மீன்கள்; பகலில் பனித்துளிகள்;
ஆலையில் சாகும்நீள் அங்கரும்பு; - சேலை
மதியழகாள் கையில் மலர்ந்தபடி நீயுன்
விதியழைக்கச் சென்றாய் விரைந்து.

மருதாணி : -

விண்ணொளியில் காய்வதினும்; வீழ்ந்தே அழிவதினும்;
மண்விலங்கு உண்டுநான் மாள்வதினும் - பொன்னழகுப்
பெண்ணைநான் தொட்டுப் பிரிந்தவரந் தாராயோ
என்னைப்போல் வாழும் இலைக்கு.?



# எனது அண்டார்டிகா பயணம்

நான் பார்க்க வேண்டும் என்று குறித்து வைத்திருக்கும் இடங்களில் அண்டார்டிகா கண்டம் இல்லை. ஆனால் எனக்குத் தெரிந்தவர்கள் தங்கள் குழுவுடன், எனக்கு பழக்கப்பட்ட, பிடித்த கப்பலில் பயணப் படுகிறார்கள் என்று தெரிந்ததும் ஒரு ஆசை பிறந்தது. என் பிள்ளை, பெண்கள் நான் போவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். நம்ம குடும்பத்தில் யாருமே போகாத இடம் அம்மா; கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று அம்மா; நிச்சயம் போய்விட்டு வா அம்மா; ரிடையர் ஆனதே ஊரைப் பார்க்கத்தானே என்றெல்லோரும் ஊக்குவிக்க, சரி போய்தான் பார்ப்போமே என்று ஜூன் மாதம் 2023 ல் புக் செய்து விட்டு சென்னைக்கு வந்துவிட்டோம். பயணம் ஜனவரி 20, 2024 ல் தானே என்று


## வசுந்தரா ராமராஜன்



பல இக்கட்டுக்களால் எந்த விதமான ஏற்பாடும் செய்யாது இருந்துமே ஜனவரி 13, 2024-ம் உருண்டோடி வர நாங்களும் அவசரம் அவசரமாகப் பாஸ்டன் திரும்பி பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தோம். என்ன ஏற்பாடா? நாங்கள் அண்டார்டிகாதீபகற்பத்தை கப்பலிலேயே இருந்தபடிதான் பார்க்கப் போகிறோம் என்றாலும் அங்கு செல்லும் வழியில் தென் அமெரிக்காவில் 3 இடங்களில் இறங்கி பார்த்து விட்டு போவதாக இருந்ததால் எடுத்துச் செல்ல வேண்டிய போருள்களின் பட்டியலைப் பார்த்து பயந்து தான் விட்டோம். ஏன் என்றால் சென்னையின் தகிக்கும் வெய்யில் போல் இருக்கும் தென் அமெரிக்க நாடுகளில் அணிந்து கொள்ள, உபயோகிக்கத் தேவையானது மட்டும் அல்ல, அண்டார்டிகாவில் மிகக் குளிரான நிலைக்கு ஏற்பவும் எடுத்து வைக்க வேண்டி இருந்தது. எப்படியோ எல்லாம் மறக்காமல் எடுத்து வைத்துக் கொண்டு ஜனவரி 19ந்தேதி பாஸ்டனில் இருந்து கிளம்பினோம். இந்த கட்டுரையில் அண்டார்டிகா தீபகற்பத்தில் பார்த்ததை மட்டும் பார்க்கலாம். மற்ற தென் அமெரிக்க நாடுகளில் பார்த்த இடங்களைப் பிறகு பார்ப்போம்.

**அண்டார்டிகா கண்டம்:** ஏழு கண்டங்களுள் ஒன்றான இது உலகின் தெற்கு கோடியில் உள்ளது. தென் துருவமும் இந்த கண்டத்தில்தான் உள்ளது. 1895ல் தான் முதன் முதலில் மனிதர்கள் இக்கண்டத்தில் காலடி எடுத்து வைத்தது உறுதியாகிறது. தொடர்ந்து பலப்பல

ஆராய்ச்சியாளர்கள் அங்கு சென்று அக்கண்டம் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்தனர். 1959-ல் அண்டார்டிகா ஒப்பந்தம் பல நாடுகளிடையே ஏற்பட்டு அக்கண்டத்தைப் பாதுகாக்க நிறைய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன. பல நாடுகள் அங்கு ஆராய்ச்சி நிறுவனம் நிறுவி செயல்பட்டு வருகின்றன. அதில் இந்தியாவும் ஒன்று. இன்று 3 இந்திய ஆராய்ச்சி நிலையங்கள் அண்டார்டிகாவில் உள்ளன. வெய்யில் காலத்தில் இக்கண்டத்தில் 5000 பேர்கள் போல் வாழ்ந்தாலும், குளிர்காலத்தில் 1000 பேர் போல்தான் இருப்பார்கள். இங்கு வெய்யில் காலமும், குளிர் காலமும்தான். உலகின் மற்ற நாடுகள் போல 4 காலங் களோ, 6 காலங்களோ கிடையாது இங்கு. அண்டார்டிகா உலகின் தென் பாதியில் உள்ளதால் அவர்களது வெய்யில் காலம் அக்டோபர் முதல் பிப்ரவரி வரை. ஆனால் வெய்யில் காலத்தில் சூரியன் சில நாட்களில் மறையவே மறையாதாம். ஆனால் நாங்கள் போனபோது வெயில் காலத்தின் இறுதி என்பதால் சூரியன் 10 மணிவரை மறையவில்லை. சூரிய உதயமும் காலை 41/2-5 இருந்தது.




நாங்கள் போனது போன்ற பெரிய கப்பல்கள்அண்டார்டிகாகண்டத்தின்வால் பகுதியாக இருக்கும் தீபகற்பப் பகுதிக்கே செல்ல முடியும். இப்பகுதி மட்டுமே தென் அமெரிக்காவிலிருந்து சென்று பார்க்கும் நிலையில் உள்ளது. பெரிய கப்பல் என்பதாலும், பனிப்பாறைகள் நிறைந்த இடம் என்பதாலும் எங்களால் மற்ற இடங்களைப்போல நங்கூரம் பாய்ச்சி அண்டார்டிக் நிலப்பரப்பில் நடக்க முடியவில்லை. 4 நாட்களில் கப்பலில் இருந்த படியேதான் அத்தனை காட்சிகளையும் கண்டு களித்தோம்.

தென் அமெரிக்க நகரங்களில் ஒன்றான யுஷுவயா (Ushuaia) வில் இருந்து மாலையில் எங்கள் கப்பல் இந்த அண்டார்டிகா தீபகற்பத்தை நோக்கி பயணப்பட்டது. கேப் ஹார்ன் என்ற தென் அமெரிக்காவின் முனையில் காலை ஒரு மணி நேரம் இருந்து அங்கிருந்து எங்கள் கப்பலை அண்டார்டிகா தீபகற்பத்தைச் சுற்றி சிறப்பாக செலுத்துவதில் இன்னொரு வல்லுநரை அழைத்துப் போவதாக ஏற்பாடு. மேலும் 5 நாட்கள் எங்கும் கப்பலை நிறுத்தி எதுவும் செய்ய முடியாது என்பதால், அங்கு கப்பலுக்குத் தேவையான சாமான்களை ஏற்றிக் கொள்வதாகவும் ஏற்பாடு. கப்பலின் கேப்டன் ஏறிய முதல் நிமிடத்தில் இருந்து பயணிகளின் பாதுகாப்பு தான் மிக மிக முக்கியமானது. இயற்கை சூழ்நிலைகள் பயணிகளின் பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படாமல் இருந்தால்தான் பயணம் அடுத்த கட்டத்திற்கு நகரும். அப்படி இல்லாது சூழ்நிலை மாறினால் போகப்போகும் இடங்களுக்குப் போகாமலே கப்பல் திரும்பவும் திரும்பலாம் என்றும் சொல்லி இருந்தார். அதனால் அன்றிரவு கேப்டன்,

கேப் ஹார்ன் முனையில் நிறுத்தாது, நேராக தீபகற்பத்தை நோக்கி பயணப்படுவோம் என்றதும் ஆச்சர்யமாக இருந்தது. ஆனால் அவர் கொடுத்த காரணம் எனக்குள் ஆச்சர்யத்தை மட்டும் இல்லை கேள்வி களையும்தான் எழுப்பியது. அப்படி அவர் என்ன தான் சொன்னார் என்றால் புA24ழி என்ற பனிப்பாறை நகர்ந்து கொண்டே இருக்கிறதாம் அதைத் தன் கப்பலில் பயணிப்பவர் அனைவரும் பார்த்தே தீர வேண்டும் என்ற ஆசையால் தான் இந்த மாற்றம் என்றார். அப்படி என்ன அந்த பனிப்பாறை உயர்ந்தது என்று அறிய வேண்டிய தகவல்களைச் சேகரித்தேன். அவை இதோ உங்களுக்காக.

**பனிப்பாறை A24a:** இந்த மேஜை போன்ற வடிவிலான பனிப்பாறை 1986ல் ஒரு பெரிய பனி அலமாரியில் இருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு தனித்து வந்து கடலில் ஒரு மணல் திட்டில் தனியே நிலைத்து நின்றதாம். 2020ல் கடல் அலைகளின் வேகம், சக்தி, அசைவு எல்லாவற்றின் தாக்குதலால், அது தான் இருந்த மணல்திட்டை விட்டு நகர ஆரம்பித்து விட்டது. கடலில் மிதக்க ஆரம்பித்த அந்த பனிப்பாறையைக் கவனித்து வருபவர்கள் டிசம்பர் 2023/

காற்று மிகக்குறைந்த வேகத்தில் வீசும் போது, நிலாஸ் எனப்படும் இதுபோன்ற மிக மெல்லிய பனிக்கட்டிகள் உருவாகின்றன.



ஜனவரி 2024-ல் வெளியிட்ட செய்தி - கூடிய சீக்கிரத்தில் அந்த பனிப்பாறை (A24a) அண்டார்டிகா தீபகற்பத்தை விட்டு திறந்த தென்கடலில் வந்து விடும் என்பதாகும். மேலும் இந்த பனிப்பாறை உருகிக் கொண்டே வருவதால் கடல்நீர் அளவில் ஏற்படப் போகும் மாற்றங்கள் பற்றி அறிஞர்கள் கணித்துக் கொண்டு வருகிறார்கள். அது ஒரு மிக மிகப் பெரியதானதோர் பனிப்பாறை. அந்த பனிப்பாறையின் தடிமன் 1000 அடி. பரப்பளவு 3900 சதுர கிமீ. அமெரிக்கா நாட்டில் நியூயார்க் நகரில் உள்ள மன்ஹாட்டன் தீவின் பரப்பு சுமார் 1210 சதுர கிமீ. லண்டன் மாநகரின் பரப்பளவு இந்த பனிப்பாறையில் பாதியே. இப்பாறை யின் மேல் பகுதி ஒரு மேஜை போல் இருந்தாலும் கடலின் நீர்ப் பரப்பில் பலப்பல சுரங்கங்களைக் காணலாம் .


இதைப் படித்ததும், கேப்டனை வாழ்த்தி விட்டு ஆவலுடன் காலையில் எப்போது பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டே படுத்து விட்டோம். காலை யில் கண் விழித்ததும் எங்களைத் தயார் படுத்திக்கோண்டு A24a வைப் பார்க்க ஆவலுடன் காத்திருந்தால் சூரியன் சதி செய்து கொண்டு பனி மூட்டத்திற்குள் நுழைந்து விட்டது. ஆனால் அந்த மந்த வெளிச்சத்தில் அதைப் பார்ப்பதற்கும் அழகாகவே இருந்தது. ஏதோ ஒரு கனவு உலகில் பார்ப்பது போல இருந்தது. இந்த பனிப் பாறையின் பிரும்மாண்டத்தைப் பற்றி படித்திருந்தும் நேரில் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது. இப்படிப் பட்டதொரு பிரும்மாண்டம் நகர்ந்து கொண்டே இருப்பது இன்னும் ஆச்சர்ய மாக இருந்தது. பனிப்பாறைகளின் உச்சி மட்டுமே நமக்கு தெரிந்தாலும் அதற்கு இணையானதோ, மேலானதோர் அளவிலோ கடல் மட்டத்திற்குக் கீழே யும் இருக்கும் என்பர். அப்படி கடல்



மட்டத்திற்கு மேலே தெரிந்த பகுதிகளில் தான் எத்தனை சுரங்கங்கள்? அவற்றில் கடல் நீர் உள் புகுந்து சுழன்று வெளி வரும் அழகே அழகு. இந்த அலைகளே அந்த பனிப்பாறையில் மோதி மோதி அதன் பனியை சிறுது சிறிதாக கரைப்பதாலேயே இந்த சுரங்கங்கள் ஏற்படுகின்றன. எங்கள் கப்பல் மெதுவாக நகர்ந்து எங்கள் பக்கம் இருப்பவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் பால்கனியில் சௌகர்யமாக இருந்து பார்க்க வசதியாக இருந்தது. பால்கனி இல்லாதவர்களும், எங்களுக்கு எதிர் பக்கம் இருந்தவர்களும் திறந்த வெளி இடங்களில் சென்று பார்த்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் கப்பல் மெதுவாகத் திரும்பி எதிர் பக்கம் இருப்பவர்கள் தங்கள் இடத்தில் இருந்தே பார்க்கும்படியாக அந்த பனிப்பாறையைக் கடந்து சென்றது. அதன் அழகையும், அலைகள் உள்ளே சென்று நுழைந்து வருவதையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததில் 2 மணி நேரம் போனதே தெரியவில்லை. கேப்டன் அறிவிப்பு வந்த போதுதான் அந்த பனிப்பாறை இருக்கும் இடத்தை விட்டு நகரப் போவதை அறிந்தோம் .

பனிப்பாறை நாங்கள் பார்த்த போது இருந்த இடம் தென் கடலில். அந்த இடத்தையோ அண்டார்டிகா தீபகற்பத்தில் நாங்கள் பார்க்க இருந்த சிறு சிறு தீவுகள் சேர்ந்த ஷெட்லண்ட் தீவையோ அடைய முதலில் ட்ரேக் பயணப் பாதையைக் கடக்க வேண்டும். இப்பாதை அட்லாண்டிக் சமுத்திரத்தின் தென்மேற்கு பகுதியையும் (scotia sea - ஸ்கோஷியா கடல் பகுதி), பசிபிக் சமுத்திரத்தின் தென்கிழக்கு பகுதியையும் இணைத்து கீழ்நோக்கி சென்று தென் கடலையும் இணைக்கிறது. இப்படி 3 பெரிய நீர்ப் பரப்பை இணைப்பதாலும், தடை போட நிலப்பரப்பு எதுவும் அருகில் இல்லாததாலும் இந்த கடல்களின் சங்கமம் மிக்க வல்லமை படைத்தது என்பர். அதனால் இங்கு அலைகள் பல நேரங்களில் 40 அடி உயரத்திற்கு எழும்பும். பெரிய பெரிய கப்பல்கள் கூட இப்பாதையைத் தாண்டி செல்ல திண்டாடும். இதைத் தாண்டினால் தான் அண்டார்டிகா தீபகற்பத்தில் நுழைய முடியும். அப்படிப்பட்ட பாதையை A24a - ஐப் பார்க்க இரவு






நேரத்தில் கடந்து விடுவோம் என்றார். சாதாரணமாகவே கப்பலில் பயணித்தால் அலைகளின் அசைவிகளால் ஏற்படும் நோய்க்கு (motion sickness) ஆளாபவர்கள் அதைத் தாங்க அவசரம் அவசரமாக மருந்து சாப்பிட்டனர். நல்ல வேளையாக ஓரளவு ஆட்டத்துடன் தென் கடலை அடைந்து பு24ழி பனிப்பாறையுப் பார்க்கப் போனோம்.

தென் ஷெட்லண்ட தீவுக் கூட்டத் தைக் கப்பலில் இருந்த படியே சுற்றிப் பார்ப்பது தான் இந்த பயணத்தின் நோக்கம். இது பல சிறு சிறு தீவுகளின் கூட்டமே. இந்தத் தீவு அண்டார்டிக் தீபகற்பத்தில் இருந்து 120 கிமீ வடக்கில் உள்ளது. இங்கு எரிமலை தீவிலிருந்து கோடிக்கணக்கான வருடங்களாக இருக்கும் பனிப்பாறைகளையும், பனி மலைகளை யும், பனி அருவிகளையும் காணலாம்.

கார்ன்வாலிஸ் தீவும், இளவரசர் சார்ல்ஸ் ஜலசந்தியும், இந்த சிறு தீவில் பனி மூடாத பாறைப்பகுதிகளை நிறையக் காணலாம் . இளவரசர் சார்ல்ஸ் மன்னராக ஆனபிறகும் பெயர் மாறவில்லை.

யானைத்தீவு: யானையின் தலையைப் போல் இருப்பதால் அதற்கு அப்பெயர். இந்த தீவு இருக்கும் இடம் பயண வழிக்கு ஏற்றதாக இருப்பதால் கப்பல்கள் இத்தீவு வழியிலேயே பயணிக்கின்றன. இந்த அண்டார்டிகா தீபகற் பத்தை சுற்றிக் காட்ட கப்பல் கள் நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும். நங்கூரம் பாய்ச்சி நிறுத்துவதற்கு ஏற்ற துறைமுகங்கள் இங்கு இல்லை. தென் அட்லாண்டிக் கடலில் உள்ள ஃபாக்லண்ட் தீவும், டிரேக் பாதையின் வட எல்லையான சிலே நாட்டின் கேப் ஹார்ன் எனப்படும் முனையுமே தென் ஷெட்லண்ட் தென் கோடியில் தென் கடலில் உள்ள இந்த யானைத் தீவிற்கு அருகாமையில் உள்ள நிலப்பரப்பு. இங்கு பார்க்க வேண்டியது என்ட்யூரன்ஸ் பனிப்பாறை. சாதாரணமாக, பனிப்பாறைகள் நிலத்தில் முடியும். இப்பனிப்பாறையோ கடலில் நேரடியாக முடிகிறது. அதனால் இது மிக வேகமாக சிறு சிறு பனிப் பாறைகளை உருவாக்குவதுடன், மற்ற பனிப்பாறைகளை விட எளிதாக அதன் முனைகள் உருகவும் முடியும். இந்த தன்மைகள் கடலின் தன்மையை, அக்கடலில் வாழும் தாவர, உயிரினங்களை எப்படி பாதிக்கின்றது என்று பற்பல ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

கிங் ஜார்ஜ் தீவும் அட்மிரால்டி விரிகுடாவும்: கிங் ஜார்ஜ் ஞுஞுஞு பெயர் சூட்டப்பட்ட இத்தீவு மிகப் பெரியது. இதன் ஒரு பக்கத்தில் இருப்பதே அட்மிரால்டி விரிகுடா. இங்கு பல வித பென்குவின்களும் (அடிலெய்ட்- கண்ணின் கருவிழியைச்சுற்றி வெள்ளை வட்டம் இருக்கும், சின்ஸ்டராப் - கழுத்தில் நீண்ட ஒரு கறுப்பு கோடு இருக்கும். ஜெண்ட்டூ- முகத்தில் பக்க வீட்டில் மஞ்சள் தடவியது போல் இருக்கும்) சீல்களும் நன்கு வளர்வதற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை இருப்பதால் அவற்றைப் பார்க்கலாம் என்ற ஆவலில் காத்திருந்தால் வெகு தொலைவில் கறுப்பு புள்ளிகளாகவே அவை தோற்றமளித்து ஏமாற்றின. நல்ல

சக்தி வாய்ந்த பைனாகுலர் இருந்திருந்தால் தெரிந்திருக்குமோ என்னவோ. ஆனால் அந்த தீவை மூடியிருந்த பனிப் பாறையை மீறி மேலே துருத்திக் கொண்டு நின்ற உயர்ந்த மலை முகடுகளைப் பார்க்க வியப்பாக இருந்தது. இவை அர்ஜெண்டினாவில் உள்ள ஆண்டிஸ் மலைத் தொடர்களின் ஒரு பகுதியே என்று கேட்டதும் இன்னும் வியப்பாக இருந்தது. ஆழ்ந்த கடல் நடுவில் பல கிமீ கனமான பனிப் போர்வையைக் கிழித்துக் கொண்டு பல வித வடிவங்களில் இருந்த மலை உச்சிகள் பார்க்க வேண்டியவையே. இந்த அட்மிரால்டி விரிகுடாவில் அடுத்து காலின்ஸ் பனிப் பாறையைப் பார்க்க கப்பல் நகர்ந்தது. இத்தீவில் உள்ள 3 பனிப்பாறைகளில் இதுவும் ஒன்று. பாதி நிலா வடிவில் அமைந்துள்ள இப்பனிப்பாறையில் நாங்கள் பார்த்த அதிசயம் நுனியில் இருந்த பனி உருகி ஒரு சிறு அருவியை உண்டாக்கி இருந்ததுதான். இப்பனிப்பாறையைப் பக்க வாட்டில் எல்லாம் பார்க்காமல் அதன் எதிரே கப்பல் நின்றதால் நன்றாகப் பார்த்து ரசிக்க முடிந்தது.

சார்லெட் விரிகுடாவும், விலமினா விரிகுடாவும்: அடுத்து இந்த 2 விரிகுடா வையும் பார்க்க கப்பல் போனது. இந்த இரண்டு இடத்திலும் சிறந்த காட்சி கூம்பு திமிங்கிலங்கள் கப்பலுக்கு மிக அருகில் தன் தன் குடும்பத்துடன் துள்ளி குதித்து விளையாடும் இடம். அங்கு போனதும் தான் கேப்டன் சொன்னது உண்மை எனத் தெரிந்தது. எங்கு திரும்பினாலும் தனித்தோ, 2-3 திமிங்கிலங்களாகவோ துள்ளி துள்ளி நீந்தி சென்றன. விரிகுடா என்பதால் அலைகள் அதிகமில்லாது இருந்ததாலும். நீர்தெளிவாகஇருந்ததாலும் எளிதாக அவற்றை பார்க்க முடிந்தது. அவைகள் அவ்வப்போது தண்ணீர் மட்டத்திற்கு வரும்போது மேல்நோக்கி



# வாவா பூவே வா

அந்தியில் பார்த்தேன் உன்னை
அகத்தினில் நிறைத்தேன கோயில்
நந்தியில் சொன்னேன் காதல்
நகைப்பினில் அலைந்தேன் உண்ணும்
பந்தியும் கசந்தேன் தூங்கும்
படுக்கையும் நொந்தேன் கண்ணீர்
சிந்தியும் வற்ற வில்லை
சிரிப்பினை ஊட்ட வாவா

வருவதால் நெஞ்சில் பூக்கள்
வசந்தமாய்ப் பூக்கும்; அன்பைத்
தருவதால் எந்தன் காலம்
எழிலுடன் மாறும்; நெஞ்சில்
உருவெழில் மட்டும் கொண்ட
உயிர்ப்பினில் இனிப்பே அன்றி
பருவமே தீயாய் மாறி
படுத்துதே உடனே வாவா

நம்மிரு கரங்கள் சேர
நர்த்தனம் மனமே ஆடும்
இம்மையில் அடடா வாழ்வே
இனிப்புகள் இன்னும் கூடும்
அம்மியில் அரைத்த சாந்தாய்
அல்லெலாம் மணக்கும் கொட்டும்
கும்மியில் கரங்கள் ரெண்டு
கூடியே உடனும் வாழும்

தமிழ்நெஞ்சம் அமின்

செலுத்தும் ஸ்ப்ரே மூலமாக முதலில் அவை இருப்பதைக் கண்டு பிடிக்கலாம். பின்பு அதே இடத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தால் அவை அழகாகக் குதித்து குதித்து நீந்தி செல்வது தெரியும். இவை மனிதர்கள் பார்க்கிறார்கள் என்று தெரிந்தால் கூச்சப்படாமல் வந்து துள்ளி விளையாடும். இதற்கு முன் ஹவாய். அலாஸ்கா மற்றும் அமெரிக்காவில் கலிபோர்னியா போன்றவிடங்களில் இவற்றைப் பார்த்திருந்தாலும் பனிப் போர்வை போர்த்துக் கொண்டுள்ள மலைகளுக்கு இடையில் தெள்ளத் தெளிந்த நீரில் பார்க்கும்போது ரொம்ப ரசிக்கத் தக்கதாக இருந்தது.

**லாக்ராய் துறைமுகம்:** எங்களது இந்த அடுத்த நிறுத்தமானது மிகவும் பெயர் பெற்ற இடமாகும். இதுதான் உலகின் தென் கோடியில் அமைந்த தபால் நிலையம். இங்கிலாந்து அரசின் ஆட்சிக்கு உட்பட்ட இடம். கரோனா பாதிப்பால் மூடப்பட்டிருந்த இந்த துறைமுகம் மறுபடி 2022ல் திறக்கப்பட்டது. இங்கு ஒரு அருங்காட்சியகம் உள்ளது. சிறு படகில் பயணிப்பவர்கள் இந்த அருங்காட்சியகத்தை இத்துறைமுகத்தில் இறங்கி பார்க்க முடியும். ஏன் எனில் இத் துறைமுகத்தை சிறு சிறு படகினால் மட்டுமே நெருங்க முடியும். எங்களைப் போன்ற பெரிய கப்பல்களில் வருகிறவர்களுக்குச் சேவை செய்ய இந்நிலையத்தைப் பார்த்துக் கொள்ளும் கடற்படைத்துறைசிப்பந்திகள்கப்பலுக்கே வந்து பல பொருட்களை விற்பனை செய்து தங்கள் அலுவலக செலவைத் திரட்டப் பார்க்கிறார்கள். இவர்கள் உல்லாச கப்பல்களில் வியாபாரம் செய்யும் 11/2 மணி நேரத்தில் எங்கள் கப்பலில் இருந்து ஒரு சிறிய படகு அந்த தபால் நிலையம் சென்று நாங்கள் எங்கள் உறவினர்களுக்கு எழுதிய படக் கார்டுகளை முத்திரை குத்தி எடுத்து வந்து அடுத்த நில நிறுத்தத்தில் போஸ்ட் செய்து விடுவர் .

**டிஸப்ஷன் தீவு:** அடுத்த நாள் காலையில் நாங்கள் இந்த எரிமலைத் தீவைப் பார்க்க நின்றோம். கடலுக்கு நடுவில் எரிமலையா என்று ஆச்சர்யப்படுகிறீர்களா? ஆமாம். இந்த தீவிற்கு அடியில் இந்த எரிமலையின் கொப்பரை ஆழ்கடலில் உள்ளது. இந்த எரிமலை இன்றும் செயற்பாட்டுடன் உள்ளது. 1969-ல் இது கடைசியாக வெடித்தது. இந்த தீவை மேலே இருந்து பார்த்தால் அரைசந்திர வடிவில் இருக்கும். எரிமலை சூட்டினால் இம்மலை மீது பனி கிடையாது. விரிகுடா என்பதால் கடற்கரைகள் அங்கங்கு உண்டு. அக்கடற்கரையில் சின்ஸ்ட்ராப் பென்குவின்கள் கூட்டத்தைக் காணலாம். சில தண்ணீரில் குதித்து, நீந்தி விளையாடி ஆட்டம் காட்டின. சில வெயில் சூட்டில் ஆனந்தமாக உறங்கின. எரிமலையா இதற்கு நடுவிலா என்று ஆச்சர்யப்பட்டால், அதை விட இன்னொரு அதிசயம் கண்டோம். அது என்ன எனில் மிக மிக உயரமான பனிப்பாறை. ஒரு புறம் ஆழ்கடல், மறுபுறம் எரிமலை, இன்னொரு புறம் பனிப்பாறை. இதை விட இயற்கையின் சேர்ப்பு வேறு எங்காவது பார்க்க முடியுமா?

இந்த தீவுதான் எங்களது கடைசி நிறுத்தம். இதன் பிறகு மறுபடி ட்ரேக் பாதையை நோக்கிப் பயணப்பட்டோம். இத்துடன் எங்களது அண்டார்டிகா பயணம் இனிது முடிந்தது. கார்த்திகை தீபம் கடலில் மிதந்தால் எப்படி இருக்குமோ அப்படி இரவில் வரிசையாக மிதந்து செல்லும் பனிப்பாறைகளையும், தென் துருவத்திற்கு (100 கி மீ) மிக அருகில் சென்ற திருப்தியும், கப்பலில் இருந்து தினமும் இரவு கண்ட அந்தி நேர சூரியனையும் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

# சாதம் எப்படி சாப்பிடவேண்டும்?

சாதத்தை எப்படி சாப்பிடுகிறோம் என்பதில்தான் நல்ல உடல் நலத்துக்கான சூட்சமம் இருக்கிறதாம்.

தமிழ் நாட்டில் அதிக அளவில் சர்க்கரை நோய் இருப்பதற்கு காரணம் தினமும் அரிசி சாதம் சாப்பிடுவது என்று பலரும் சொல்கிறார்கள். அது தவறு. அதை எப்படி சாப்பிடுகிறோம் என்பது தான் முக்கியம். பலரும் இன்று குக்கரில் வேகவைத்த சாதம் சாப்பிடுகிறார்கள். கஞ்சியை வடிக்காமல் சாதம் சாப்பிடுவதால் தான் நீரிழிவு ஏற்படுகிறது.

சாதம் வடித்த கஞ்சி சூடாக இருக்கும் போது சிறிது உப்பைப்போட்டு பருகினால் கண் எரிச்சல், பித்தம் ஆகியவை அகலும்.

அதுவே கஞ்சி ஆறிப்போய் குடித்தால் வாயுவை ஏற்படுத்தும்.

சாதம் உலையில் கொதிக்கும் போதே கஞ்சியை எடுத்துப்பருகினால் நீர்க் கடுப்பை நீக்கும்.

கொதிக்கக் கொதிக்க சோறு சாப்பிடக் கூடாது.

மிதமான சூட்டிலேயே சாப்பிட வேண்டும். அதே நேரம் சில்லென்று ஆறிப்போய் சாப்பிட்டால் கீல் வாதம், மூட்டு வாதத்தை ஏற்படுத்தும்.

பழையமுது சாப்பிட்டுத்தான் நம் முன்னோர் நல்லதெம்புடனும், ஆரோக் கியத்துடனும் வாழ்ந்தார்கள்.

முதல் நாள் தண்ணீர் சாதத்தில் ஊற்றி, மறு நாள் காலையில் பழைய சோற்றை சாப்பிடுவது உடலுக்கு குளிர்ச்சி, வலிமை தருவதுடன் வயிற்றுக்கோளாறு, அல்சர், மூட்டு வலி, தோல் நோய்கள் எதுவும் பாதிக்காமல் பாதுகாக்கிறது.

பழைய சோற்றில் தயிர் ஊற்றி சாப்பிடக்கூடாது. மோரைக்கடைந்து ஊற்றி சாப்பிட வேண்டும்.

சோறு வெதுவெதுப்பாக இருக்கையில் பசும்பால் ஊற்றி சாப்பிட்டால் தண்ணீர்த் தாகம் ஏற்படுவதும் பித்தம் உண்டாவதும் நீங்கும்.

பச்சரிசி சோற்றில் பால் சேர்த்துச் சாப்பிட வாதம், பித்தம் நீங்கும்.

சிலர் சாம்பார், ரசம், வற்றல்குழம்பு என்று சாதத்தில் பிசைந்து சாப்பிட்டு மோர் போட்டு சாப்பிடாமல் எழுந்து விடுவார்கள். இது உடம்புக்கு மிகவும் கெடுதல்.

மோர் சாதம் செரிமானக் கோளாறு களை நீக்கி, வாதம், பித்ததை தணிக்கிறது.

மாதாந்திர பிரச்சினை உள்ள பெண் களுக்கு சிவப்பரிசி சாதம் மிகவும் நல்லது.

சம்பா சோறு வயிற்றுப்பொருமலுக்கு மிகவும் நல்லது.

வாழையிலையில் சாப்பிடுவதால் அதி லுள்ள துவர்ப்பு சத்து உடலில் சேர்ந்து நன்மை செய்கிறது.

# வெண்பா போட்டி (பயணம்)

## போட்டியின் கால அளவு : ஆகஸ்ட் 01 முதல் 12 வரை 2024

இம்மாதம் போட்டி... அழகான போட்டி..
காதல் எல்லோருக்கும் வரும். ஆனால்...
அதில் ஒருதலைக் காதல் என்பது கொஞ்சம்
வலிகள் நிறைந்த ஒன்றாகும்...

ஒருதலையாக காதலிப்பவர்கள் எல்லார்க்கும்...
அவள் எப்போது என்னிடம் பேசுவாள்... அல்லது
அவன் எப்போது என்னிடம் பேசுவான்...
என்ற ஏக்கம் இருந்து கொண்டே இருக்கும்
அவ்வாறான ஏக்கத்தை ஒரே வெண்பாவால்
சொல்வதே இம்மாதப் போட்டியின் விதியாகும்...




இதோ எ-கா வெண்பா

.

அப்பழுக்கே இல்லா அழகே; உனையெண்ணி
சொப்பனத்தை மட்டும் சுவைக்கின்றேன் - எப்போதுன்
கண்பார்த்து பேசுங் கணமென்ற ஞாபகத்தில்
புண்ணா கிறதென் பொழுது.

பொதுவான விதிகள் : -

ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

https://www.facebook.com/profile.php?id=100030084520602

# வெண்பா போட்டி (பயணம்)

போட்டியின் கால அளவு : 01 - 12 ஜூலை 2024

என்ன படிச்சுத்தான் என்னபன்ன இங்கேதான்
ஒன்னும் கிடைக்கலையே! ஊராரும் என்னைத்தான்
திட்டித்தான் தீர்க்குதே! தீயாகச் சுடுகிறதே!
வெட்டியாய் ஆனேனே வீழ்ந்து !

நா.பாண்டியராசா.

எஞ்சினியர் வீடெது வென்றுகேட்க நான்சொன்னேன்
அஞ்சாறு பேரோ அலைகிறார் - பஞ்சாய்ப்
பறக்கிறார் சோற்றுக்குப் பாருங்க எந்தத்
தெருக்கோடி தேடு தெரிந்து .

முத்துசாமி தாரமங்கலம்

அப்பாவின் சொல்கேட்டும் அம்மாவின் பேச்சுவாங்கி
தப்பாமல் கற்விகற்றுத் தான்என்ன? - எப்போதும்
வேலையில் லாத்திருந்து வீட்டுக்கு வந்துகட்டில்
மூலையில்தூக் கந்தான் முடிவு

பா.இந்திரன்

பட்டம் பெறப்பட்ட பாடும்;பணியொன்றுங்
கிட்டாமல் கிட்டியதோர் கேவலமும் - எட்டாமல்
போனயிளங் காதலும் போதாதோ?வேறேதும்
ஞானமுற வேண்டுமோ நான்?.

ஜாய் சத்தியா

படித்துப் பயனுற பட்டது போதும்
நடிக்கத் தெரிந்து நடித்திருந்தால் - கோடிகள்
தேடியே வாழ்வினது தேவை அடைந்துமே
மாடியை எட்டலா மே!

பொன்மணிதாசன்

காலரைத் தூக்கிவிட்டுக் காட்டுன கெத்துல
நாலணா தேறல நாந்தேட - வேலயில்ல
காலம்தான் போச்சுங்க கஞ்சிக்கும் வக்கத்த
கோலம்தான் இஞ்சினியர்க் கோ?

ஆனந்த் சுந்தரராமன்

குறிபார்த்துக் கல்வியொன்றைக் கொண்டாடு கின்றார்
பொறியியல் கல்வி புகுந்தோர் - வெறித்தனமாய்க்
கூடிப் பயின்றுக் கொடிபிடித்தோர் வாழ்விலுய்யும்
நாடி நகரவில்லை நம்பு !

பாவலர் கோவதன், மலேசியா

பொறியியல் மட்டுமல்ல பூமியில் கல்வி
தறிகெட்டு போகத் தளர்ந்தார் - முறித்திடும்
புண்ணுடை யோர்கள் புவிதனைக் காணவிழி
மண்ணில் கொடுக்கலா மா!

எம்.ஆர்.தனசேகரன், ரவாங், மலேசியா.

பொறியாளன் ஆகின்ற பொல்லாக் கனவை
எறிந்துவிட்(டு) எத்துறையும் ஏகு - செறிவான
தன்னூக்கம் கொண்டு தடைகளைத் தாண்டினால்
உன்வெற்றி காண்பாய் உவந்து.

குளோரிசக்தி, கரூர்.

பொறியியல் கல்வி படித்தும் பயனோ
உரியவிதம் இன்றி உறுத்தும் - அறிந்ததெல்லாம்
பாலத்தைக் கட்டும் பணியின்றி ஆங்கதன்கீழ்
காலம் கிடத்தியது காண்.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

பொறியாளர் பட்டம் பொரிகடலை கட்ட
அறியாமல் வாங்கினேன் அய்யோ - அறிவில்லை
வைத்த முதலுக்கு வண்டியேதும் வைத்திருந்தால்
பைத்தியமாய் சுற்றுவேனா பார்

ஞால ரவிச்சந்திரன்

.

இன்ஜினியர் ஏந்தானோ இங்கப் படிச்சேனோ
அன்னாடம் சோத்துக்கே ஆகாம - நின்றிட
என்மவனே சொன்னாநீ எம்பேச்சக் கேளுடா
சின்ன தொழில்தொடங்கச் சீர் .

சரஸ்வதி பாஸ்கரன்

.

எங்கும் பொறியாளர் ஏராலம் நாட்டினிலே
இங்கவர்க்கு வேலையில்லை என்செய்வார் - தங்களின்
பெற்றவர்கள் பட்டகடன் போக்க வழியில்லை
கற்றதினால் என்னபயன் கூறு.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

இந்தஜந் தாண்டுபோ, அப்புறம்நீ அம்பானி ;
வந்தவர் போதித்த வாய்மொழி - சிந்தைபுக
நல்லதென எண்ணியே நான்பொறியி யல்பயில
இல்லையே வேலைதா னிங்கு

மலர்மைந்தன்

.

பொறியியல் பட்டந்தான் பொட்டில தூங்கப்
பறிபோன தென்றன் பருவம் - கறிக்கும்
ஒதவல காலணா ஒட்டவு மில்ல !
பதநீர விக்கறென் பார்.

தன்ராஜ் பாப்பணன்

.

கடனும் உடனும் கணக்கின்றி வாங்கித்
திடமாய்ப் பொறியியலில் சேர்ந்து - மடமையெனக்
கற்றதை எண்ணிக் கலங்குகிறார் வேலையின்றிச்
சுற்றிடுவார் சோகம் சுமந்து.

ஒசூர் மணிமேகலை

.

எந்தத் துறையெடுத்தா என்ன கிடைக்குமென்று
சிந்திச்சு பார்த்துதான் சேருறான்? - விந்தையாய்
கற்றத விட்டுட்டு காசுக்காய் ஊடி(ணுாவீ)யென்றால்
மற்றதற்(கு) என்னயிங்கே வாழ்வு?!

செ. இராசா

.

வெறிகொண்டுக் கல்வியை வேட்கையுடன் கற்றேன்
பொறியியல் வேலையெனும் பொறுப்பு - செறிவுடை
நம்பிக்கை எங்கேய்யா, நாளுமே கேட்கின்றேன்
கும்பிட்ட ஈசனிடம் கூற்று

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

அரிய படிப்பென அத்தனையும் விற்றுப்
பெரிய இடர்தாங்கிப் பெற்ற - பொறியியலால்
நாயாய் அலைகின்றேன் நாளெல்லாம் வேலைக்கே
தேயாமல் தேய்கின்றேன் தேர்ந்து!

இவள் இயற்கை விரும்பி அ.வள்ளிபாபு

.

படிக்கவச்சோம் என்ஜினியர் பாருங்க ஆனால்
பிடிச்சுத்தான் பிள்ளை படிச்சான் - முடிச்சானே
நல்லாத்தான்... நல்ல வேலை சம்பளம் இப்படி
எல்லாம் கனவுங்க இங்கு...

தென்றல் கவி

.

வீட்டிற்கோர் இன்ஜினியர் வீழ்ந்து கிடக்கின்றார்
மாட்டிற்கோர் காவலனாய் மேய்த்திருந்தால் - காட்டிற்கும்
நாட்டிற்கும் ஏற்றமுண்டாம் நேற்றுவரை ஆட்டிவைத்துப்
போட்டியிட்டத் தேர்வுகளும் பொய்.

கவிஞர் இரா.ச.பத்மநாபன், தஞ்சாவூர்

.

பொறியியல் கல்வியைப் பேறென எண்ணி
அறிந்துணர்ந்து கற்றதின் ஆற்றல் - வெறியுடன்
தேடுகிறேன் வேலையின்றி தோல்வியில் நிற்கின்றேன்
வாடுகின்ற பிள்ளையின் வாக்கு

கவிஞர் கவிநிலா மோகன், தஞ்சாவூர்.

.

அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடி என்னப்பா
எஞ்சினியர் ஆக எதிர்காலம் - பஞ்சமாய்
வங்கியில லோனத்தான் வாங்கிவக்க வட்டியேற
எங்கிட்டுப் போவேனோ ஏங்கி.

வா.சண்முகம்

---

வேலையே இல்லாமல் வீட்டில் பொறியாளர்
ஆலைக் கரும்பாய் அவர்வாழ்வு - பாலை
உறவுகளைக் கண்டால் ஒதுங்கும் நிலைமை
மறவோனாய் சேருவான் மடம்.

இரா.கவிதா, திண்டுக்கல்

---

பொறியிய ளாராக போகவேண்டும் என்று
குறிவைத்துக் கல்வி குடைந்து - அறிவைப்
பெருக்கிக் கடைசியில் பெற்றதோ இல்லை
அருகிவரும் வேலை அவைந்து

பா.இந்திரன்

---

எல்லாப் பொறியும் இயக்கிடக் கற்றாலும்
பொல்லா உடலாம் பொறியிதன் - தொல்லையால்
வாழும் வழியின்றி வாடிடும் வேளையில்
தாழுமாம் கற்ற தலை...!

ஐ.க.நாகப்பன்

---

எஞ்சினியர் ஆனவுடன் எங்கெங்கோ வேலைக்குக்
கெஞ்சிநான் கேட்டும் கிடைக்கவில்லை - வெஞ்சினத்தால்
பெற்றோர் வெகுண்டு பெரிதாய் வருத்தமுற்றுக்
கற்றதைச் சொல்லிக் கடிந்து

மாலதி திரு

---

போற்றும் படிப்புப் 'பொறியியல்' பொன்'நிகராய்
ஏற்றுப் படித்தேன் இராப்பகலாய் - சாற்றுமுயர்
சான்றுடன் பட்டம் தரம்முதல் வேலையில்லை
ஏன்தான்நான் இன்னும் இழிந்து.

படைக்களப் பாவலர்

---

அறியா வயதினில் ஆளில்லை சொல்ல
பொறியியல் என்றால் பொறியல் - அறியென்று!.
சொல்லி யிருந்திருந்தால் சோகம்தான் இன்றேது
வல்லமை கொண்டிருப்பேன் வாழ்ந்து

வே.செந்தில்குமரன்

---

கஞ்சிக்கு வக்கில்ல காசுகொட்டி நான்படிச்ச
இஞ்ஜினியர் வேலையது இன்றைக்கோ - பஞ்சத்தில்.
சிக்கியப் பாவப்பட்ட சித்தாளு வேலைக்கே
முக்கப் பிதுங்கும் முழி...!!!

கவிஞர். சிந்தனை பாரதி, திருச்சி.

---

எஞ்சினிய ராகி எழுப்புவேன் கட்டடம்
கெஞ்சி பிறர்நிற்க கொள்வேனா - மிஞ்சியே
பேசிப் பணத்தினைப் பெட்டியில் பூட்டுவேன்
வீசிய பொற்கனவோ வீண்

ந.இரா.இராசகுமாரன், கோவை

---

காளான் முளைத்தாற்போல் கல்லூரி கட்டிவைத்தார்
வேளாமல் போனோரே வாத்திகளாம் - கேளாத்
தடியன்கள் எல்லோரும் தான்பொறிஞர், இன்றோ
படியேறிப் பால்போடு றான்!

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

---

கற்றதால் என்னபயன் காலத்தை வீணடித்துப்
பெற்றோரைப் பேணாது பேர்க்கெடுத்தேன் - வெற்றாய்ப்
பொறியாளர் பட்டம் பொருளழித்துப் பெற்றேன்
சிறிதானேன் வாழ்வைச் சிதைத்து!

பசுங்கிளி மணியன்

---

பொறியியல் பட்டம்நற் பொன்னைத் தருமாம்
அறிவுரை கேட்டே அழிந்தேன் - அறிந்ததால்
சொல்லவும் வேலையில்லை சோற்றுக்கே திண்டாட்டம்
செல்லிடம் எல்லாமே சேறு.

தமிழ்க்கீரன், ஈழநாடு.






சுவிஸ் நாட்டுத் தமிழச்சி

திருமகள்

# உரூபா அன்ரன்

## நேர்காணல்

வணக்கம்
தமிழ்நெஞ்சம் இதழுக்காக.

**தங்கள் பூர்வீகம் இலங்கை எனத் தெரியும். இலங்கையில் எந்தப் பகுதியில் தங்கள் குடும்பம் இருந்தது?**

இலங்கை யாழ்மாவட்டத்தில் உள்ள கோப்பாயில் வசித்தோம்.

**எப்போது புலம்பெயர்ந்தீர்கள்? ஏன் சுவிட்சர்லாந்து நாட்டைத் தெரிவு செய்தீர்கள்?**

பல இடப்பெயர்வுகளை தாயகத்தில் சந்தித்தேன். உண்மையில் சுவிட்சர்லாந்து நாட்டிற்கு திருமணத்திற்காகவே வந்தேன். எனது கணவர் தாயகத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் புலம்பெயர்ந்து சுவிற்சர்லாந்தில் தஞ்சமடைந்தார். சுவிற்சர்லாந்தில் ஐக்கிய நாடுகள் ஒன்றியம் இருப்பதால் அந்நாட்டைத் தெரிவுசெய்தார்.

**தங்கள் தந்தையார் மற்றும் தாயாரைப் பற்றி..**

எனது தந்தையார் இலங்கை இராணுவ உளவுப்பிரிவிலும் கவச வாகன பிரிவிலும் 22

வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். அவரது ஓய்வுகாலத்திற்குப் பின்னரே நாட்டு நிலமை மோசமடைந்தது.

தாயார் இல்லத்தரசி.

**தங்கள் இளமைக்காலக் கல்வி எங்கே கிடைத்தது?**

பெரும்பாலும் எனது யாழ் மாவட்டத்திலே கல்வி கற்றேன்.

**தங்கள் இல்லத்துணைவர் மற்றும் குடும்பம் பற்றி.**

கணவர் பருத்தித்துறையைப் பூர்வீகமாக கொண்டவர். பெற்றோரை யுத்த காலத்தில் இழந்து பல துன்பங்களின் பின் புலம்பெயர்ந்தவர்.

**ஏதும் பணிபுரிகிறீர்களா? எங்கே?**

தற்போது ஆலயத்தில் திருப்பண்டக் காப்பாளராகவும் மறை ஆசிரியராகவும் பணி புரிகிறேன்.

**தமிழ் மீது பற்று வரக் காரணம் யாது?**

பிறப்பால் தமிழச்சி இதை விட வேறென்ன தகமை வேண்டும் ?

**தமிழ்க்கவிதைகளை எப்போதிலிருந்து எழுதத் தொடங்கினீர்கள்?**

எனது சிறு வயதிலிருந்தே கவிதை கட்டுரை கதை எனப் பல வடிவங்களில் பத்திரிகைகளுக்கு எழுதுவேன். எனது தந்தையாரின் ஊக்குவிப்பே காரணம்.

**மரபுவடிவத்தில் கவிதையில் எழுதும் ஆர்வம் எப்படி வந்தது?**



குடும்பம்

உண்மையில் மரபுக் கவிதை எழுதும் ஆர்வம் முகநூல் குழுமங்களில் இணைந்த பின்பே ஏற்பட்டது. தொடக்கத்தில் நிலா முற்றத்தில் ஆசான் என நான் அழைக்கும் திரு இராமவேல்முருகன் சகோதரரின் மரபுக் கவிதைப் போட்டிகளையும் விளக்கத்தையும் பார்த்தே எழுதத் தொடங்கினேன்.

**நிலாமுற்றம் பற்றி**

இணையத்தில் கவிதையைத் தேடிய போது கண்டுகொண்ட முகநூல் குழுமம். 2018 முதல் இணைந்து பயணிக்கிறேன். பல்வேறு போட்டிகளில் பங்குபற்றிய அனுபவமும் போட்டிகளுக்கு நடுவராகவும் பொறுப்பாளராகவும் பயணித்த அனுபவமும் மகிழ்வளிக்கிறது. கடந்த வருடம் நடைபெற்ற கவியரங்கில் நேரடியாகப் பங்குபற்றி அனைவரையும் கண்டுகொண்டதும் விருதுகள் பல பெறதும் பெரும் பேறாகும்.

**பாட்டரசரின் பாவலர் பயிலரங்கம்**

***பற்றி.***

*பாட்டரசரின் பயிலரங்கை பெருந்தொற்றுக் காலத்தில் தனிமைப்படுத்தலில் இருந்த போது (2020) அறிந்து இணைந்தேன்.*

*மரபிலக்கணத்தை முறையாக கற்று வருகின்றேன். இதுவரை பல்வேறு வகையான பாடல்களை எழுதும் பயிற்சியில் இணைந்து பயணிக்கிறேன்.*

***தாங்கள் எழுதிய நூல்கள் குறித்துச் சொல்ல முடியுமா?***

*இதுவரை அகவல் சோலை, மற்றும் விருத்தமாயிரம் என்னும் நூல்களை பிரான்ஸ் கம்பன் கழகத்தில் (2022 ) வெளியிட்டுள்ளேன்.*

***இந்தியா வந்தபோது நீங்கள் எங்கெல்லாம் சென்றீர்கள் எனக் கூறவியலுமா?***

*கடந்த வருடம் 2023 ஆம் ஆண்டு அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்திற்கு செல்லும் ஆவலில் இந்தியா வந்தேன். பல நட்புள்ளங்களின் அழைப்பால் பல்வேறு இடங்களை பார்ங்கும் வாய்ப்புக் கிட்டியது. கன்னியாகுமரி தஞ்சை மதுரை சென்னை புதுச்சேரி கும்பகோணம் வலங்கைமான் கோயம்புத்தூர் ஒகேனக்கல் ஏலாக்குறிச்சி சிதம்பரம் இப்படிப் பலவிடங்களைப் பார்வையிட்ட நிறைந்த மகிழ்வு.*

*மேலும், இந்தியா இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இக்காலப்பகுதியில் பலத்தமிழ் நட்புறவுகளை நேரடியாக சந்திப்பது நற்பேறாகும்.*

***மறக்கவியலாத கவியரங்கம் பற்றி.***

*ஆம் மறக்கவியலாத கவியரங்கத்தில் தலைமை தாங்கியது நற்பேறாக கருதுகிறேன். நிலாமுற்ற நிறுவுனர் சகோதரர் அவர்களினது அன்பான அழைப்பும் மற்றும் தலைவர் செயலாளர் ஏனைய ஒவ்வொருவரது உபசரிப்பும் மகிழ் வழித்தது.*

***தங்களுக்குப் பிடித்த கவிஞர்களைக் கூற முடியுமா? ( 5 பேர் மட்டும்)***

*பொதுவாக கவிதையென்றால் கொள்ளையின்பம். அதனை எழுதும் கவிஞர்களை மிகவும் போற்றுபவள் நான். எனது சிறு வயது முதலே தந்தையார் பாடும் ஓடிவிளையாடு பாப்பா பாடலை பாடிய பாரதியாரை மிகவும் பிடிக்கும். எனது சிறுபராயத்தில் பாரதியார் பிறந்தநாளில் கவிதை படித்ததும் அவரைப் பற்றி பேச்சுபேசியதும் இன்றும் பசுமரத்தாணியாய் உள்ளது.*

***வெண்பா விருத்தம் இரண்டில் எது உங்களுக்குப் பிடித்த பா வகை?***

பிரான்சில் நடைபெற்ற கம்பன் விழாவில்





நிலா முற்றம் விழாவில்...

விருத்தப் பாக்களே மிகவும் பிடிக்கும் இதுவரை ஆயிரம் விருத்தங்களை கடந்து எழுதுவதே தமிழன்னை தந்த வரமாகும்.

வெண்பாவும் தொடர்ந்து எழுதுகிறேன்.

**எதிர்காலத் திட்டம் என்ன?**

எழுதிய கவிதைகளை நூலாக்கம் செய்தலும் அதற்கென விழா வைத்தலும்.

உலகத் தமிழர்களை தமிழ்மொழியால் ஒன்றிணைக்கும் மேலான நோக்கமும்.

**வளரும் கவிஞர்களுக்கு நீங்கள் கூறவிரும்பும் அறிவுரை.**

தமிழை மூச்சாகக் கொண்டு தமிழன் னையை மகிமைப்படுத்த உங்கள் எழுத் தாணி பயன்படட்டும்.

**தமிழ்நெஞ்சம் குறித்த தங்கள் கருத்து**

பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் இணையப் பதிப்பு. மிகவும் பயனுள்ள தகவல்களைத் தாங்கிவரும் ஏடாகவும் பலதி றன் கொண்ட தமிழ் மக்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகவும் செயல்படுவது பாராட்டுக்குரியது.

எனது அகவல் சோலை நூலை பதிப்பித்ததும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களை பிரான்ஸ் கம்பன் விழாவில் கண்டுகொண்டதும் சிறப்பாகும்.

நேர்கண்டவர்

**தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்**





# உன் விழிப் பார்வையிலே....

1

அம்பென விழிகள் கண்டே
அக்கணம் விழுந்தேன் நானே
மும்மையும் நிலைக்கும் என்று
முழுமையும் நம்பி னேனே
அம்மொழி சொன்ன மங்கை
அரையிலே சென்றாள் எங்கோ?
வம்பென வந்த காதல்
வருத்துதே என்னுள் மூண்டே.

ஒருமொழி சொல்ல நீயும்
உயிரையே தருவேன் நானே
புருவமே திருப்பிச் சென்றாய்
புதைந்ததே நீரில் கண்ணே
இருளென அடரும் சோகம்
இறுக்குதே கழுத்தை நித்தம்
கருவிழிப் பாவை உன்னால்
காயமே என்னுள் போபோ.

*- த.கி.ஷர்மிதன், இலங்கை..*

2

என்னவள் கண்ணில் வந்தாள்
இன்பமாய்ப் பேசி நின்றாள்
என்மனம் கொள்ளை கொண்ட
ஏந்திழை சொர்க்கம் தந்தாள்
கன்மனம் கொண்ட மூர்க்கர்
காதலை இழிவு செய்து
வன்முறைப் பாங்கில் என்றன்
வாழ்வினைச் சிதைத்து விட்டார்

அஞ்சியே ஒதுங்கி னாளை
அனுதினம் தேடித் தேடி
நெஞ்சமோ ஏங்கி நிற்கும்
நெருடுமே துன்பம் கோடி
பஞ்சிலே பட்ட தீயாய்ப்
பகலிர வெல்லாம் இங்கு
சஞ்சலம் கொள்ளு கின்றேன்
சாந்தியைக் காண்ப தென்றோ?

*-செபா சவிரிமுத்து இலங்கை*

3

வெட்டிநீ வீசும் போதும்
வெல்லுமே என்றன் காதல்
சுட்டுநீ வீழ்த்து பெண்ணே
சொர்க்கமாய் மாறும் நெஞ்சம்
விட்டுநீ எட்டாத் தூரம்
வெற்றுவே டிக்கை வேண்டாம்
இட்டிடும் பொட்டா உள்ளம்
எடுத்திடும் வண்ணம் ஏற்க!

கற்பனைக் காதல் வைத்து
காத்தது பாவ மன்று
கற்சிலை உள்ளம் தானோ
காதலி சொல்லாய் முன்னே
தற்கொலை செய்யத் தூண்டும்
தன்னலம் வேண்டாம் பெண்ணே
பொற்கவிப் பொல்லாச் சாபம்
பூவையே போதும் போதும்

- *மன்னை மணிமாறன்*

4

மனமெலாம் உன்றன் எண்ணம்
மதிமுக பெண்ணே என்னுள்
கனத்திடும் இதயந் தன்னைக்
காதலின் பரிசாய்த் தந்தாய்
தினமுனைத் தெருவில் தேடித்
திரிகிறேன் தேவ தாசாய்
தனமெலாம் இருந்தும் வாழ்வில்
தனிமையைப் பரிசாய்ப் பெற்றேன்

விழிகளால் கதைகள் பேசி
வெஃகலில் திளைத்து நின்றோம்
அழிந்திடாக் காதல் என்றே
அகந்தையும் கொண்டு நின்றோம்
பழியதைச் சுற்றஞ் சூட்டிப்
பங்கமும் விளைத்து நிற்கக்
குழியினுள் வீழ்ந்தா போவோம்
குன்றெனத் துலங்கும் காதல்!

-*குலா கிருஷ்ணா*
*ரொறொன்ரோ / கனடா*

5

மீன்விழி தூண்டில் போட
மெல்லிடைத் தன்னில் வீழ்ந்தேன்!
தேன்மொழி உன்றன் மூச்சில்
தீயெனப் பற்றிக் கொண்டேன்!
வான்முகில் கூந்தல் காற்றில்
வாலிபம் நீந்தக் கண்டேன்!
தேன்மழை அமுதப் பேச்சில்
தென்றலாய் நானும் ஆனேன்!

காதலைச் சொல்வ தற்குக்
காலமும் காத்தி ருந்தேன்!
வேதனை வாழ்வில் தோன்ற
விலகியே நானும் சென்றேன்!
கூதலாய் நினைவு வந்து
கொடுமையாய் நெஞ்சை வாட்டப்
பாதகி உன்னைக் காணப்
பறந்துமே ஓடி வந்தேன்!

-*பாவலர் க.சண்முக சிதம்பரம்*



6

மான்விழி கொண்ட மங்கை
மயில்நடை போடும் கங்கை
தேன்தவழ் மொழியின் கோதை
தென்றலின் குளிர்ச்சி யோடு
வான்தவழ் நிலவைப் போல
வாய்த்தவள் விலகிச் சென்றாள்
நான்தினம் வாடு கின்றேன்
நங்கையின் பிரிவி னாலே .

கண்டதும் காதல் கொண்டேன்
கன்னியும் விரும்பி வந்தாள்
கண்களில் கவிதை துள்ள
கனவிலே மிதந்தி ருந்தோம்
பெண்ணவள் ஓர்நாள் எந்தன்
பின்புலச் சாதி கேட்டாள்
உண்மையைச் சொன்னேன் அன்றே
உதறியே சென்று விட்டாள்

*- சின்ன இளங்கோ கடலூர்*



7

கண்களால் வந்த திந்தக்
காதலால் வாடு கின்றேன்,
பெண்ணவள் போயே விட்டாள்
பெரிதெனப் பணத்தை யெண்ணி,
கண்ணிலே கண்ணீ ரில்லை
கனவிலும் தருவாள் தொல்லை,
எண்ணிடு மிதய மேனோ
எடுக்கவே யில்லை ஓய்வே...!

பொன்னென நினைத்த வொன்று
போலியாய்ப் போன தன்றோ,
புன்னகை கண்டு நானும்
புதைகுழி வீழ்ந்து விட்டேன்,
மன்பதை மறந்து போனேன்
மாதவள் பார்வை யாலே,
அன்னவள் பிரிந்த தாலே
ஆதர வற்றே ன் நானே...!

*- செண்பக ஜெகதீசன்*

8

அந்தியும் சாயும் நேரம்
அழகுடன் காதல் பேசி
முந்தியும் வருவே னென்று
முழுமதி நாளில் சென்றாய்!
மந்திரம் போட்டு நல்ல
மயக்கமும் தந்து விட்டுத்
தந்திர வித்தை யாகச்
சட்டெனப் பிரிந்து போனாய்!

அன்பினைக் கொடுத்து நாளும்
அழகினை போற்றி வந்தாய்!
இன்பமும் நிலைக்கச் செய்தாய்!
இனிமையைப் பரப்பி நின்றாய்!
தன்மையால் கூடும் நேரம்
தவித்திடும் வண்ண மாக
இன்னொரு பெண்ணை வாழ்வில்
இணையென ஏற்ற தேனோ?

*—மாலதி திரு தஞ்சாவூர்*

9

மனமெனும் வானில் நீந்தும்
மங்கையோ நிலவா யென்றும் !
கனவிலும் வந்து செல்லும்
கயல்விழி யவளை நாளும்
நினைந்திடும் நெஞ்ச மேங்கும்
நினைவுகள் நீங்கா தென்றும் !
தினந்தினம் நினைவு வாட்ட
தேகமு மிளைத்துப் போகும் !

விழியெனும் வலையை வீசி
வீழ்ந்திடச் செய்தா ளன்று !
மொழியது தேனாய்ச் சிந்தும்
மோகன முறுவல் பூக்கும்
பழியது தோன்றா வண்ணம்
பண்பினைக் காத்து நிற்க ,
வழியதை மாற்றிச் சென்றே
வாழ்வினிற் றுயரம் தந்தாள் .

*- இரா.சம்பந்தன், ஜேர்மனி*

10

அழகனாய் என்னைக் கண்டே
அகத்தினை எனக்குத் தந்தாள்
குழவியாய் என்னைத் தாங்கிக்
குதூகலம் மிகவே கொண்டாள்
பழகிய காலம் எல்லாம்
பரவசம் தந்தே நின்றாள்
கழற்றியே விட்டாள் என்னைக்
கவலையில் மூழ்க வைத்தாள்.



அன்பினைப் பொழிந்து நின்றாள்
அழகினால் என்னை வென்றாள்
கன்னமும் சிவந்து கொள்ளக்
காதலைக் காட்டிச் சென்றாள்
என்னையும் தவிக்க விட்டே
இன்றெனைப் பிரிந்து சென்றாள்
இன்னமும் அவளை எண்ணி
என்மனம் இருந்து வாடும்.

*- செல்வராஜா சுதாகரன், இலங்கை*

11

என்னவள் பிரிந்து சென்றாள்
எங்ஙனம் நானும் வாழ
இன்னுமே மீள வில்லை
இரக்கமோ அவளுக் கில்லை
நன்றியே இல்லா நங்கை
நடிப்பினைக் காட்டிச் சென்றாள்
என்னவோ காதல் சோகம்
ஏக்கமாய் ஆன பாவம்!

கனவுதான் காதல் மானோ
கண்களை மறைத்த தேனோ
வினவுதே உள்ளம் என்னை
விடுதலை உண்டா என்று
வனத்திலே துறவி ஆனேன்
வாழ்க்கைதான் என்ன வாகும்
மனத்தினில் உறுதி வந்தால்
மாற்றமே நிகழும் நாளை!

*- மு.வா.பாலாஜி ஓசூர்*

12

ஆழ்கடல் வற்றி னாலும்
அன்புதான் வற்றா தென்றாள்.
வாழ்வதும் உள்ளம் அன்றோ
வழிவகை நாமே என்றாள்.
சூழ்நிலை எதுவந் தாலும்
தொடர்ந்துவா என்னை யென்றாள்!
மூழ்கினேன் முல்லை வாசம்
மொத்தமும் அவளே யென்று.

ஊழ்வினை என்று சொல்லி
உதறினாள் ஒருநாள் என்னை!
பாழ்படும் எண்ணம் ஏனோ,
பாவையே என்று கேட்க,
ஏழ்கடல் தாண்டி நல்ல
இணையினை ஏற்றேன் என்றாள்.
தாழ்நிலைப் பணியில் உள்ளாய்,
தகுதியோ பணமே என்றாள்!

*- செல்வக் கடுங்கோ வாழியாதன்*
*மதுரை*



## பனைமரமே - பனைமரமே

ஓங்கி வளர்ந்திருக்கும்
பனைமரமே பனைமரமே
இறைவன் உலகுக்குத்
தந்ததிந்த அருள்வரமே
நீரினை தனக்கடியில்
தேக்குவது உன்தரமே
வெட்டிச் சாய்த்தாலும்
சாத்தாக பயன்தருமே

வாய்க்கா வரப்போரம்
வரிசையா நிக்கிறியே
வேலிக்கு ஓலையாகி
மானத்தை மறைக்கிறியே
பழமாக நொங்காக
கிழங்காக ருசிக்கிறியே
பதநீராய் பலன்தந்து
புத்துணர்ச்சி அளிக்கிறியே

புயலின் வேகத்திலும்
உறுதியாய் நிலைக்கிறாய்
இயற்கை உணவளித்து
மனிதகுலம் காக்குறாய்
மகத்துவம் அறிந்திருந்தும்
மக்களுனை ஒதுக்குறார்
நன்மைகள் புரிந்திருந்தால்
நாடிவந்தே சுற்றுவார்

லீ.லியாகத்அலி.

# ஹைக்கூ

இருட்டு நிலா
இரவில் பரவுகிறது
ஊரில் அமைதி

வெளிச்சப் பறவை
இரவில் பறக்கிறது
இரசிக்கும் இருட்டு

தொலைவில் சத்தம்
இரவைக் கிழிக்கிறது
நடுங்கும் இருள்

இரவின் நிறம்
கறுப்பு என்று சொன்னாலும்
உள்ளத்திற்கு நிம்மதி

இருளின் மௌனம்
ஒலி எழுப்புகிறது
விடியும் வரை

இரவை நிலா
தாங்கிப் பிடிக்கிறது
தூரத்து வெளிச்சத்தால்

வாசத்தில் பூ
செடி மணக்கிறது
தரைக்குத் திருப்தி

மழைத்துளிக்குள் பூமி
செழிப்பாக இருக்கிறது
கார்முகில் கொடை

சிறகில் ஆகாயம்
சுமந்து பறந்து கொண்டிருக்கிறது
சிட்டுக் குருவி

காற்றின் வண்ணமாக
பட்டாம்பூச்சி பறக்கிறது
சிறகின் சிறப்பு

வயல் வரப்பில்
தவளை சத்தம் போடுகிறது
கோடையின் பிரிவு

இலையில் மழைத்துளி
அமர்ந்து கொண்டிருக்கிறது
காற்றின் உறக்கம்

குயிலின் பாடல்
காற்று ரசிக்கிறது
கூவும் கவிதை

மழையின் பாடல்
ஊரை நனைக்கிறது
புழுதி வாசம்

மழையின் ஈரம்
காற்றை வாசமாக்குகிறது
பூவின் மலர்ச்சி

மழைத்துளிக் குளிர்
இலையில் அமர்கிறது
காற்றின் வீச்சு

உழவனுக்கு மழை
அமுதம் ஊட்டுகிறது
விளையும் பயிர்

கோடை மழை
வேர்களின் தாகத்தைத் தீர்க்கிறது
தீரும் பசி

**ராஜகவி**





# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (7)

தமிழ் நெஞ்சம் ஜூலை மாத மின்னிதழில் யாரும் முயற்சி செய்திராத உலகசாதனையுடன் கூடிய பெண்கள் தொகுப்பு நூலொன்று வெளியானது என்று குறிப்பிட்டு இருந்தேன். அது குறித்து காண்போம்

'தன்முனைக் கவிதை படைப்பாளர் பேரவை' அமைப்பின் தலைவர் சு. சுப்புராஜு அவர்களின் ஒருங்கிணைப்பில், மகளிர் தினத்தை ஒட்டி 05/03/2021 அன்று நிகழ்த்தப் பட்ட 'ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்' உலக சாதனை நிகழ்வில் பங்கேற்பதற்காக 23 பன்னாட்டு பெண் படைப்பாளர்கள் அவரவர் வீட்டிலிருந்தே இணைய வழியாக இணைந்தனர். 'கவியுலகப் பூஞ்சோலை' நேரடி ஒளிபரப்பில் 17.15 மணிக்கு முதல் 20.15 மணி வரை கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு மகளிர், இயற்கை, சமூகம், உணர்வுகள் என்ற நான்கு தலைப்புகளை ஒவ்வொரு தலைப்பாக சொல்லச் சொல்ல அவரவர் வீட்டில் இருந்தே மின்னல் வேகத்தில் எழுதிய கவிதைகளை வாசித்தனர். இம்மூன்று மணி நேரத்தில் எழுதி, வாசிக்கப்பட்ட கவிதைகள் 449. இவை கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்களால் அன்றே தொகுக்கப்பட்டு 'மலர்கள் தீட்டிய வரைவுகள்' தன்முனைக் கவிதை தொகுப்பு நூலாக, 'ஆல் இந்தியா வேர்ல்ட் ரெக்கார்ட்' சாதனைச் சான்றிதழுடன் 'நூலேணி பதிப்பகத்தின்' வழியாக, மார்ச் 08/03/2021 பெண்கள் தினத்தன்று 'தமிழ் அமெரிக்க தொலைக்காட்சி' நேரடி ஒளிபரப்பின் ஊடாக வெளியீடானது. மகளிர் மனம் வைத்தால் மாமலையும் சிறுகடுகாம் என்பது நிருபணமானது. இந்நூலில் இடம்



**அன்பு செல்வி சுப்புராஜூ**
தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
பட்டாபிராம், சென்னை

பெற்றுள்ள 449 கவிதைகளில் ஒரு சோறு பதமாக...

இறந்த நாயின் வாயை
மூடிட மனம் வரவில்லை
குட்டிகளுக்காகச் சேர்த்த
சிறு துண்டு உணவு
-அமலஜெயந்தி

ஆழமான, அழுத்தமான இந்தக் கவிதையை வாசித்ததும் கண்முன் விரியும் காட்சியில் மனம் பதறித்தான் போகிறது. குட்டிகள் என்னவாகும் என்ற தவிப்பு தோன்றுவதை தவிர்க்க இயலவில்லை.

மற்றுமொரு சிறப்பாக இம்மலர்கள் தீட்டிய வரைவுகள் நூலில், நான்கு தலைப்புகளிலும் ஏழு வயதுக் குழந்தை இளங்கவிஞர் சு. பிரவந்திகா அவர்கள் எழுதிய கவிதைகளும் இடம் பெற்றன. ஆகையால்

உலகளாவிய 16 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில், தமிழில் தன்முனைக் கவிதை எழுதிய முதல் குழந்தை என்ற சிறப்பு சு.பிரவந்திகாவை வந்தடைந்தது.

தண்ணீர் சேமிப்பைப்
பாடமாகப் படித்தேன்
சிந்திக்கொண்டே போகிறது
தண்ணீர் லாரி
சு. பிரவந்திகா

தண்ணீர் சிக்கனத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதாலேயே அதைப் பள்ளியில் பாடமாக வைத்துள்ளது அரசு. அதனைப் படித்த குழந்தைக்கு தண்ணீர் சிக்கனம் என்பது மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அதனால்தான் சாலையில் நீரைச் சிந்திக் கொண்டே செல்லும் லாரியைப் பார்த்ததும் மனதிற்கு முரணாக தோன்றி அதுவே கவிதையாக வெளிப்பட்டுள்ளது. சு.பிரவந்திகாவின் இந்த கவிதை ஆர்வமே வளரும் குழந்தைகள் தன்முனைக் கவிதைகள் குறித்து அறிந்து கொள்ளவும், எழுதுவதற்காகவுமான பயிற்சியை 'அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்' வழியாக வழங்குவதற்கான தொடக்கமாக அமைந்தது எனலாம்.

உலகளாவிய அளவில் தன்முனைக் கவிதைகளைத் தொடர்ந்து பலரும் எழுதி வரும் நிலையில் தமிழகம் தாண்டிய அயல் நாடுகளில் முதன்முதலாக 'தன்முனைக் கவிதை' நூல் வெளியிட்ட கவிஞர் என்ற சிறப்பைப் பெற்றவர் கவிஞர் நஸீரா எஸ் ஆப்தீன் அவர்கள். இவர் எழுதியுள்ள 'வானும் மண்ணும் நம் வசமே' நூல் புத்தொளி அமைப்பின் வழியாக ஆகஸ்ட் 2020 ஆண்டு இலங்கைஇ ஒட்டமாவடியில் வெளியீடானது. இந்நூலில் இருந்து ஒரு கவிதை

வீசி வீசி அழைக்கின்றன
தேசியக் கொடிகள்
இறங்கியே வரவில்லை
சுதந்திரக் காற்று
-நஸீரா எஸ் ஆப்தீன்

பாடுபட்டு வாங்கிய சுதந்திரம், தேடிப் பார்த்தாலும் கிட்டாத சூழலில்இ காற்றும் விடுதலைக்காகப் போராடுகிறதோ என்னவோ...

பாவலர்மணி இராம வேல்முருகன் அவர்கள் எழுதியுள்ள 'தன்முனைக் கவிதைகள் அந்தாதி' நூல் தன்முனைக் கவிதை வகைமையில் அந்தாதியாக வெளிவந்த முதல் நூல் என்ற சிறப்புடன் 27.07.2021 அன்று வெளியானது.

ஒரு கவிதை முடி யும் சொல்லில் இருந்து அடுத்த கவிதை தொடர்வதே அந்தாதி ஆகும். எடுத்துக்காட்டாக 'குடும்பம்' சூழல் குறித்து பாவலர் எழுதிய அந்தாதி

குடும்பம்
நினைப்பது போலக்
கிடைப்பது இல்லை
மனைவியும் வாழ்க்கையும்
ஏன்..குழந்தைகளும்தான்..

குழந்தையாகவே இருந்திருக்கலாம்
கிடைத்ததை வைத்து
விளையாடி மகிழ்ந்து
எல்லோரையும் நம்பிக்கொண்டே

நம்பிக்கையே சிலநேரம்
துரோகிகளுக்குச் சாதகமாகிறது
தருமம் நியாயமெல்லாம்
நமக்குப் பாதகமாகிறது

பாதகம் எல்லோமும்
எல்லோர்க்கும் பாதகமல்ல;
ஒருவரின் தோல்வியே

இன்னொருவர் வெற்றியாம்

வெற்றியும் தோல்வியும்
இறைவனுக்கு ஒன்றுதான்
ஆனாலும் நாமெல்லாம்
இறைவன் இல்லையே

இல்லை யென்போர்க்கு
இருக்கிறான் இறைவன்
சொல்லாய் செயலுமாய்
என்றும் அவர்நினைவாய்!


-இராம.வேமுருகன்,
வலங்கைமான்

*தன்முனைக் கவிதை வகைமையில் தொடர்ந்து நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் குழந்தைகள் எழுதிய தொகுப்பு நூல், குழந்தைகளுக்காக மூத்தவர்கள் எழுதிய நூல் இவைகளைக் குறித்து அடுத்த தொடரில் காண்போம்.*

### கவிதையெழுத வந்தார்கள்...

எல்லோரும் கூடி ஆளுக்கு ஒரு வரியாக
கவிதை எழுதினார்கள்
முதல் வரியில் வானமும்
மறு வரியில் மேகமும்
அதற்கடுத்து பூமியும்
பிறகு ஒரு நதியும்
இறுதியில் ஒரு கடலுமாக
அந்த கவிதை முடிகிறது
முதல் வாசகன் கடலழகு என்றான்
அடுத்தவன் வானம் அருமை என்றான்
பிறகொருவன் பூமி சிறப்பென்றான்
இப்படியே போக
இறுதியில் வானமாகவும் மேகமாகவும்
பூமியாகவும் நதியாகவும் கடலாகவும்
பிரிந்தது கவிதை!

- கி.கவியரசன்




*நூல் விமர்சனம்!*

# பரிவை படைப்புகள்

*பரிவை சே. குமார் அவர்கள் எழுதிய 22 சிறுகதைகளின் தொகுப்பு தான் 'பரிவை படைப்புகள்'.*

*கலக்கல் ட்ரீம்ஸ் வெளியிட்டுள்ள இந்நூலி(ன் அட்டையி)ல் பரிவை சே. குமார் அவர்களின் மந்தகாசச் சிரிப்புடன் முழு அட்டைப்படம்.*

*இந்தக் கதைகள் அனைத்துமே முழுக்க, முழுக்க கிராமத்து நிகழ்வுகள்தான்!*

*'இதில் இருக்கும் கதைகள் எல்லாமே என்னைச் சுற்றி நடந்தவைகளில் இருந்து எடுத்து தொடுத்தவை தான்! நான் எழுதும் பெரும்பாலான கதைகள் கிராமத்து மனிதர்களின் வாழ்வின் வலிகளை மட்டும்தான் பேசி இருக்கும்!' என்று என்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார் சே.குமார்.*

*ஓர் ஊரில் குறி சொல்பவர்கள் இருவர் இருப்பார்கள். அதில் ஒருவருக்குத்தான் புகழ் வெளிச்சம், மக்கள் வருகை, பணப்புழக்கம் ஆகியன அதிகமாக இருக்கும். அவர் சொல்லும் குறிகளை, பலா பலன்களை அனைவரும் நம்புவார்கள். அவர் சொல்லும் பரிகாரங்களை அதிக தட்சணையுடன் செய்து முடிப்பார்கள்.*

ஆனால் மற்றவர் வெகு எளிமையாக இருப்பார். அவரை 'குடிகாரன்' என்று அனைவரும் திட்டுவார்கள். ஆனால் அவர் குறி சொல்வது உடனடியாக நடக்கும். ஜாதக தோஷம், வாழ்வியல் சுகவீனங்கள் இருப்பவர்கள் யாரிடம் போய் குறி கேட்பார்கள்?

இது போன்ற நிகழ்வுகளை 'சாமியாடி' (எனும்) கதையில் காணலாம்.

கிராமத்து மக்கள்தாங்கள், தங்கள் வீடுகளில் வளர்க்கும் கோழி, ஆடு, மாடு போன்ற பிராணிகளை தங்களது மக்கள் செல்வமாகவே பார்ப்பார்கள். பாசம் காட்டி வளர்ப்பார்கள்! தான் வளர்க்கும் ஆடு நோயுற்றிருக்கும் போது, நோய்க்கான மருந்துகள் கொடுத்தும் நோய் தீராவிட்டால், தன் கண்முன்னே அந்த ஆட்டின் அவலத்தைப் பார்த்து கண் கலங்கி மனம் வருந்தும் ஒரு விவசாயி (சின்னசாமி) என்ன செய்வார்? இந்த கேள்விக்கான பதில் தான் 'சின்னசாமியின் செவப்பி' என்கிற கதை!

பிறக்கும் முன்பிலிருந்தும் பிறந்ததில் இருந்தும் தங்களது குழந்தைகளை வளர்த்துப் பேணிப் பாதுகாத்து, அவர்களைப் படிக்க வைத்து, வேலை அமைத்துக் கொடுத்து, மண வாழ்க்கை கொடுத்து, குடும்ப வாழ்க்கையில் அவர்களை ஈடுபடுத்தி ஒரு குடும்பஸ்தனாக மாற்ற கஷ்டப்பட்டு உழைப்பது அப்பாவும் அம்மாவும். ஆனால் அந்தப் பிள்ளைகள், தங்களது பெற்றோர்களின் இறுதிக் காலத்தில் அவர்களை மதிக்காமல், அவர்களது தேவை களை நிறைவேற்றிக் கொடுக்காமல் உதாசீனப்படுத்துவதோடு அவர்களை பிரித்து வைத்து, சின்ன மகன் வீட்டுக்கும் பெரிய மகன் வீட்டுக்கும் அவர்களைப் பந்தாடுவது கொடுமை! இதை கண்முன்னே சித்திரமாக காட்டுவது 'இணை' என்கிற கதை!

மனிதனாய் இருப்பவன் அவனுள் மது என்னும் சரக்கு இறங்கியதும் மிருகமாக மாறிவிடுகிறான்!

மது எனும் விஷம் குடித்தவன் தன்னிலை மறந்தவனாய் தடுமாறி, உற்ற மனைவியை, பெற்ற பிள்ளைகளைப் போட்டு அடித்து, உதைத்து, சித்திரவதை செய்வதை பல காலமாய் கண்டும் கேட்டும் வருகிறோம். இதனால் பாதிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை உண்டு.

'கடவுளின் கணக்கு' கதையில் இதைப் படிக்கலாம்.

அழகாய் இருக்கும் பெண் அழகாய் இருக்கும் ஆணைத்தான் திருமணம் செய்ய வேண்டும்; அதுபோல ஓர் அழகில்லாத பெண் அழகில்லாத ஆணைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று எந்த ஒரு கட்டாயமும் நியதியும் இல்லை. காலத்திற்கு தகுந்தாற்போல், சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். அழகு நிலையில்லாதது; அன்பே நிலைத்திருக்கக் கூடியது. இதை தனது 'பட்டாம்பூச்சி' என்கிற கதையின் மூலம் உணர வைத்திருக்கிறார் ஆசிரியர்.

இங்கே நான் மேலே குறிப்பிட்டுள்ளவை ஒரு சில எடுத்துக்காட்டுகள்தான். ஆனால் 22 கதைகள் மொத்தமும் கிராமமும் அதைச் சார்ந்த வாழ்வியலும் மட்டும்தான்.

இந்தக் கதைத் தொகுப்பை வாசித்தால், ஒரு வெள்ளந்தியான எளிய மக்கள் வாழுகின்ற ஒரு கிராமத்துக்குச் சென்று வந்த திருப்தி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தொடர்புக்கு:
கலக்கல் ட்ரீம்ஸ் பப்ளிகேஷன்ஸ்,
தொலைபேசி: 9840 96 7484,
இமெயில்: kalakkaldreams@gmail.com

விமர்சித்தவர்:
நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன், பேங்காக்.



# ஏட்டுலா கனவாக்க அமைப்பின் முதல் புத்தகம்

# நிதர்சனத்தின் நிழல்

## வெளியீடு




சிந்தனைத்திறன்மிக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களை புத்தக வடிவாக்கி கனவை நனவாக்கும் அமைப்பான ஏட்டுலா கனவாக்கம் தனது முதலாவது நூலாக அக்கரைப்பற்று காவிதாயினி முபீதா அமீன் அவர்கள் எழுதிய நிதர்சனத்தின் நிழல் எனும் நூலை (06.07.2024) அன்று அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் வெளியீடு செய்யப் பட்டது. இந் நிகழ்விற்கு அக்கரைப்பற்று கலை, இலக்கியப் பேரவை தலைவர் கலாபூசணம் மீரா. எஸ்.இஸ்ஸடீன். அவர்கள் தலைமை தாங்கியதுடன் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்

தௌபீக் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

கடந்த (10.05.2024) அன்று ஏட்டுலா கனவாக்கம் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுடன் இணைந்த 9 பேர் கொண்ட ஒரு குழுமமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு இரண்டு மாதங்களில் அதன் முதலாவது திட்டத்தினை செவ்வனே செய்து முடித்து இருக்கின்றது.

இலைமறைகாய்களான இளம் எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களுடைய புத்தக்கனவை நனவாக்கம் செய்வதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாகும்.




## ஏட்டுலா கனவாக்கம் குழும செயற்பாட்டாளர்கள் விவரம்

1. திரு. ஆஷிக் ஹுசைன் (பணிப்பாளர்),
2. திரு. அமின் மொஹமெட் (பிரதம ஆசிரியர்-தமிழ் நெஞ்சம்-பிரான்ஸ்),
3. திரு.ஜே.எம்.ஐ இஹ்சான் (பிரதம ஆசிரியர் முத்திதழ் சஞ்சிகை),
4. திரு. முஹம்மட் இன்ஷாப் (பணிப்பாளர் Rj Media),
5. திரு.றஜா முஹம்மட் (பிரதம ஆசிரியர் பேனாத்துளிகள் சஞ்சிகை),
6. திருமதி. ஆயிஷா ஷகீலா (வடிமைப்பாளர்-Designglitz),
7. திருமதி.பஹ்ரியா பாய்ஸ் (இளம் எழுத்தாளர் - ஹெம்மாதகமை பிராந்தியம்),
8. திருமதி. அதீகா மசூர் - Skyதமிழ் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்),
9. திருமதி.ஹாஸ்மியா தாஹா (இளம் எழுத்தாளர் பல்கலைக்கழக மாணவி SEUSL).

இலங்கையில் எந்த பாகத்திலிருந்தும் இவ்வமைப்பை தொடர்புகொள்வதன் மூலம் தங்களுடைய புத்தகக் கனவை, நனவாக்கிக் கொள்ள முடியும். தொடர்பு இலக்கம் (+94755757879,+971558192969 )

ஹெம்மாதகை பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் இன் முயற்சியால் இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாத்தில் அதன் முதற்கனவை நனவாக்கியது குறிப்பிடத்தக்கது. முதல் ஏட்டுலா ஒரு கனவு நனவானது.

இதில் பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர், முக்கிய பிரமுகர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். இதனை அக்கரைப்பற்றில் இலக்கிய செயற்பாட்டாளர் சகோதரர் எம் ஐ எம் நாளீர் முன்னின்று அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையுடன் தலைமை தாங்கி தொகுப்பாளராகவும் சிறப்பாக நடாத்தி முடித்தார்.





# ஈடேறியது எண்ணம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

இரண்டு கைகளையும் தலையணை யாக்கி அதில் முழுதாக தலையை சாய்த்து முகட்டை பார்த்தவாறு மல்லாக்க படுத்துக்கொண்டிருந்தான் அஷ்மல். சூரிய வெளிச்சத்திற்காக வீட்டுக் கூரையின் நடுவே போடப்பட்டிருந்த சிறு கண்ணாடித் துண்டின் மூலமாக நிலவொளியின் மங்கிய வெளிச்சம் உள்நோக்கிப் பட, மூடாத கண்களை மூட வைப்பதற்காக வெகு நேரம் சிரமப்பட்டு தோற்றவன், என்ன இது வாழ்க்கையென கொஞ்சம் சத்தமாகவே அங்கலாய்த்துக் கொண்டான்.

'மகன்.. நீங்க இன்னும் தூங்கலையா?' எனக் கேட்ட தாயின் குரலில் மெல்லமாய் நாக்கை கடித்துக் கொண்டவன்,

'இதோ தூங்கிட்டேன் மா' என்றவாறு தாய்க்கு முன்பு வழமை போல் அன்றும் நடிக்கத் தொடங்கினான், தான் நிம்மதியாகவும் சந்தோமாகவும் இருப்பதைப் போன்று.

இத்தனைக்கும் அஷ்மல் அவ் வளவு வறுமையான குடும்பத்தை சேர்ந்தவனில்லை தான். இருந்தாலும் ஏதோ அன்றன்றைக்கு உழைப் பதை அன்றன்றைக்கு உண்டு வாழும் ஒரு சாதாரண குடும்பம் அவனது.

தந்தை வெளிநாடு சென்று குடும்பத்தைப் பார்ப்பதற்காக உழைத்து உழைத்துக் களைத்து, பணத்தை இவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தபோதுதான் ஒரு தடவை யாரும் எதிர்பாராதது போல் மாரடைப்பு வந்து அங்கேயே மரணத்தை எய்தினார்.

'அஞ்சு வரும் தான் உங்களுக்கான நேரம். அதற்குள்ள உழைக்கிறத உழைச்சிட்டு வந்துருங்க. பிள்ளைகளை தனியே இருந்து என்னால பார்க்க முடியாது' என அவரிடம் கண்டிப்பாக சொல்லி அனுப்பிய மனைவிக்குத் தெரியுமா இனி ஒரு போதும் மீள முடியாத மரணத்தை அவர் எங்கேயோ பல மைல் தூரமிருக்கும் இடத்திலிருந்து

சுவைப்பாரென.

விம்மி அழுத தாயை ஆறுதல் படுத்துவதா அல்லது தன்னுடைய தங்கையைத் தேற்றுவதா எனத் தெரியாது திண்டாடிப் போனான் அஷ்மல். உண்மையில் அவனைத் தேற்றுவதற்கே யாரேனும் ஒருவரின் உதவி தேவைப்பட்டது. பெண்ணாய் பிறந்திருந்தால் வீட்டோடும் தாயோடும் தானும் தன் பாடுமென வாப்பாவோ அல்லது சகோதரனோ உழைத்து தருவதை வைத்து, வீட்டு செலவுகளை சமாளித்துக் கொண்டு எப்படியோ வாழ்ந்துவிடலாம். அப்படித் தான் முடியாது போனால் வீட்டோடு ஏதேனும் சிறு தொழில் செய்து வருமானம் பெற முயற்சிக்கலாம்.

ஆனால் ஆணாகப் பிறந்தால் உண்மையில் எத்தனை தடைகளைத் தாண்ட வேண்டும். எத்தனை சிரமங்களை பொறுத்திட வேண்டும்.

தந்தை உழைத்த போது செல்லப்பிள்ளையாக இருந்து விட்டு திடீரென்று தந்தை இறந்து போன பின்னர் மொத்த குடும்பப் பொறுப்பையும் தானே ஒனுவனாய் சுமப்பதென்பது அத்தனை இலகுவான விடயமா என்ன?

சுமார் 23 வயது மட்டுமேயுடைய அஷ்மலை தந்தையின் இழப்பு எந்தளவுக்கு தாக்கியதென்பதை அதே வயதில் தந்தையை இழந்த மகன்மாரைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள்.

அந்தளவிற்கு மனதளவிலும் உடலளவிலும் உடைந்து நொறுங்கி அடுத்த கட்டம் என்ன செய்யப் போகிறேன், எப்படி குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறேனென்ற துளியளவு முடிவோ எண்ணமோ இன்றி பித்து பிடித்தவன் போல் யோசித்து யோசித்து பல போதுகளில் களைத்துப் போனான் அஷ்மல்.

'மச்சான்.. எதையும் யோசிச்சு மனசை குழப்பிக்காதடா. எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழி கட்டாயம் பிறக்கும். நீ ஏன் ஒங்கட தங்கச்சிக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சு வைக்கக் கூடாது? ஒங்கட குடும்ப சுமை யாவது குறையுமே' என்ற தன் தோழனை ஒருவித சோகத்தோடு பார்த்த அஷ்மலின் கண்கள் கலங்கிப் போயின.

'ஏன்டா அழுவுற?' என்று கம்மிப்போன குரலில் கேட்ட தன் நண்பனை நோக்கியவன், 'வாப்பா இருக்கும் வரைக்கும் அன்றன்றைக்கு சமைத்து சாப்பிட்டுட்டு சந்தோமாகத் தாண்டா வாழ்ந்தோம். வாப்பாட சேமிப்பில் பணம் எப்பவுமே இருந்ததில்ல. அங்க வேலை செய்ற நேரத்துலயும் வாப்பா அவ்ளோ பெரிய சம்பளம் எடுக்கல. இருந்தாலும் அல்ஹம்துலில்லாஹ்னு வாழ்ந்துட்டு போனோம். ஆனா இப்ப இப்படி திடீரென்று நடந்த வாப்பாட மரணத்தால எனக்கு எதுவுமே செய்ய முடியாமலிருக்குடா. எனக்கு என்ன செய்யறதுண்டு விளங்கல்ல' என தவித்துப் போன அஷ்மல் அப்படியே தன் தோழனின் தோளில் சாய,

'ஒன்றும் யோசிக்காதடா அல்லாஹ் எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழியை காட்டுவான்.' என்றவனை ஒருவித ஆறுதலுடன் பார்த்தான் அஷ்மல்.

அதன் பின் தன் படிப்புடன் சேர்த்து ஒரு தொழிலை தேடுவதில் சிரமத்தை உணர்ந்தவன் படிப்பை அடியோடு நிறுத்திவிட்டு வேலையொன்றை தேடத் தொடங்கினான். யாருடைய எண்ணங்களைத் தான் உடனடியாகவும் முழுமையாக இந்த வாழ்க்கை நிறைவேற்றியது.

அப்படித்தான் ஒரு எண்ணம், தேவை நிறைவேற வேண்டுமானாலும் எத்தனை பெரிய சவால்களையும் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் சிரமங்களையும்

கடந்து செல்ல வேண்டியிருக்கிறது இந்த வாழ்விலென தன்னை நொந்து கொண்டவனுக்கு இறைவனின் அருள் படி ஒரு கம்பெனியில் தட்டச்சு வேலை செய்வதற்கான வாய்ப்பொன்று வந்தது.

இப்போதைக்கு இதுவே பெரிது தானென அதில் இணைந்து கொண்டவன் ஒவ்வொரு மாதமும் சம்பாதித்து அதன் மூலம் தன்னையும் தன் தாயையும் சகோதரியையும் பார்த்துக் கொண்டான். தன் தந்தை இருக்கும் போது இருந்தது போலொரு வாழ்வை அவனால் ஈடு செய்ய முடியாது போனாலும் வறுமையின் பிடியில், வாழ்வதற்கு சிரமப்படுகிறோமெனும் இடத்திலிருந்து ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனுமளவிற்கு தன் குடும்பத்தை முன்னேற்றிக் கொண்டான்.

இருந்தும் இரவுகளிலும் பகலிலும் அவனை அவஸ்தைப்படுத்திக் கொண்டு தூங்கவிடாமல் செய்து கொண்டிருந்த ஒரே ஒரு சிந்தனையென்றால் அது அவனுடைய சகோதரியின் திருமண வாழ்க்கை பற்றியது தான். என்னதான் ஆயிரம் பேர் ஆறுதல் சொன்னாலும்

எல்லாம் சரியாகிவிடுமென தூர நின்று சொல்லி விட்டு நகர்ந்தாலும் யாருமே தோள் தூக்கி விடுவதற்கோ கைதந்து உதவுவதற்கோ அவனுக்கு இருக்கவில்லையென்றே சொல்லலாம்.

என்ன உலகம் இது! ஒரு பெண் பிள்ளையை பெற்றெடுத்தால் எத்தகைய சிரமங்களை அனுபவிக்க வேண்டி இருக்கின்றதென்பதை தெளிவாகக் காட்டியது அவனுடைய அந்த யதார்த்தம் நிறைந்த அன்றாட வாழ்வு. தன்னுடைய சகோதரியை, தான் எப்படியேனும் கரை சேர்த்து விட வேண்டுமென அவன் எடுத்த முயற்சிகள் ஒன்றா இரண்டா. அவையோ ஏராளம். தன்னுடைய நண்பர்கள் தொடக்கம் ஏனையோர் வரை அத்தனை பேரிடமும் அவன் இது பற்றி பேசாத நாட்களே இல்லை.

‘என்னுடைய தங்கைக்கு மிகப் பொருத்தமான ஒரு மணமகனை தேர்வு செய்து தந்தால் மிகவும் உதவியாக இருக்குமென அவன் ஜாடை மாடையாக எத்தனை பேரிடம் சொன்னாலும் ஏதேதோ காரணங்கள் சொல்லி ஒவ்வொருவராக விலகத் தொடங்கினார்களே தவிர இல்லாதோரையும் சிரமப்படுவோரையும் அன்றன்றைக்கு உழைத்து உண்போரையும் யார் தான் இங்கு விரும்புவார்களென்பதை அவன் உணரத் தொடங்கினான். ஒரு சொந்தமான வீடு தன் தங்கைக்கென்று கட்ட முடியாததாலும் ஏனைய வசதிகளும் சீதனங்களும் அவனால் கொடுக்க முடியாததாலும் உண்மையில் திண்டாடித் தான் போனான் அஷ்மல்.

புதிதாய் ஒரு வீடு கட்டி அதன் மூலம் தன் தங்கையை திருமணம் செய்து கொடுப்பதற்கு உண்மையிலேயே இன்னும் பல வருடங்கள் போகலாம். அதுவரைக்கும் தன் தாயின் கண்ணீரையும் தன்னுடைய மகள் இப்படி திருமண வயதை அடைந்த பின்னும் தனியாக திருமணமாகாமலே இருக்கின்றாளேயென்ற விரக்தியும் அவரை ஏதாவது செய்து விடுமோவென பயந்த அஷ்மல் என்ன செய்வதென சிந்தித்த வண்ணமே இருந்தான்.

ஒரு நாள் தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேலைக்கு செல்வதற்கான நேரம் நெருங்கியதை அறிந்து அலுவலகம் நோக்கி விரைந்தவனது கண்களில் நீண்ட நாட்களில் பின் தென்பட்டான் ஹகீம். ஹகீம் அவனுடைய பால்ய காலத்து நண்பன். ஹகீம் தரம் ஏழில் தான் அஷ்மலுடைய பாடசாலையில் வந்து

இணைந்து கொண்டாலும் சுமார் ஆறு வருட நட்பு அவர்களது.

ஹகீம் உண்மையிலேயே ஒரு வசதியான குடும்பத்தை சேர்ந்தவன். இருந்தாலும் அவனுக்கு ஏனோ அவனுடைய இயல்புடைய நண்பர்களைத்தான் அதிகம் பிடித்துப் போனது. குறிப்பாக அவனுக்கு அஷ்மல் என்றால் மிகவும் பிடிக்கும். எதையும் அவனோடு பேசி எதையும் அவனோடு பகிர்ந்து கொண்டு எப்போதும் ஒரே மாதிரி இருக்கக்கூடிய ஒரே நண்பனென்றால் அவனுக்கு அது அஷ்மல் மாத்திரம் தான்.

அதனால் தான் அவனோடு தன்னுடைய வாழ்வின் எல்லா துன்பங்களையும் பகிர்ந்து கொண்டு சுமார் ஆறு வருடங்கள் நெருங்கிய நண்பர்களாக அவர்கள் வாழ்ந்த காலம் கண் முன் துளிர் விட, 'டேய் ஹகீம். அஸ்ஸலாமு அலைக்கும்' என்றவாறு போனவனை உடனே அடையாளம் கண்டு கொண்ட ஹகீம் தன்னுடைய வாகனத்தில் இருந்து இறங்கி ஓடி வந்து கட்டி அணைத்துக் கொண்டான்.

'எப்படி இருக்க டா மச்சான்?. உன்னைத் தான் நான் சந்திக்கணும்னு இருந்தேன்' என்று கேட்டவனை புருவம் சுருக்கிப் பார்த்த அஷ்மல்,

'ஏன்டா என்னை சந்திக்க நெனச்சாய்? நீதான் இப்ப பெரிய பார்ட்டியே' என வழமை போல் நக்கல் செய்தவனது தோளில் தட்டிக் கொடுத்த ஹகீம்,

'டேய் உண்மையாவே என் வாழ்க்கையில உன்னை நான் மறக்கவே மாட்டேன். எவ்வளவு தான் வசதி வாய்ப்புகள் உடையவங்களாக நாங்க இருந்தாலும் ஒரு தடவை ஸ்கூலுக்கு நான் ஃபோன் கொண்டு வந்ததை டீச்சர் பார்த்து எங்கட வாப்பா

# அநீதமே ஒழிக

கானல்நீரே காயம் ஆற்றிடுமோ
அடைமழை தாகம் தீர்த்திடுமோ
நினைவே நீ தூரம் போ
நியாயமெல்லாம் நீ எங்கே
நீதியெல்லாம் பதவிக்காரனில் தொக்கி
பணபலத்தால் வழுக்கி தான் வீழ்ந்திடுமோ...

யார் பிழை என்ற தேடல் தீர முன்னே
யார் குற்றமென்று தெரிந்தே பிழையில் மூடி
நியாயத்தை மறைக்கும்
பதவிக்காரர்களுக்கு தெரிவதில்லையோ ....

இறைவன் அமைதியில்
அடாவடியாகி போகும் குற்றம்
எல்லாம் தெருவில் நீதியோடு
பந்தயம் இடுகினர் ...

இறையோன் நாடும்
யாவுமே நடக்கின்றன யென நம்பும் போது
நம்மில் நமக்காண நேர்த்தியும் பிறக்கும் ..

ஆ வென கதறி விடும் வலிக்கு
நியாயமொன்று இல்லாது போய் விடுமோ,,

இறைவனிடம் அநீதத்தில் சிக்குண்டவரின்
பிரார்த்தனைகள் போய்
சேராமலா இருந்து விடும்..

அவன் ஒன்றும் வேடிக்கையாளனல்லவே
மௌனம் காத்து தீர்ப்பான் நீதி
நானுமே காத்திருக்கிறேன் ...

அநீதமிழைத்து விட்டு
ஒன்றுமே செய்யாதவனைப்போல
பதவியோடு பத்திரமாகி நிற்பவனுக்கான
தண்டனையை எதிர்ப்பார்த்து ....

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்

கிட்ட சொல்லி என்னை ஸ்கூல விட்டு விலக்கிறதாக சொன்னப்ப நீ டீச்சர்ட கெஞ்சிப் பேசி எனக்காக மன்னிப்பு கேட்டு அந்த பிரச்சினைய சரி செஞ்சி என்னோடயும் பேசி அந்த ஃபோனை நான் ஸ்கூலுக்கு கொண்டு வராத மாதிரி ஆக்கின. அதைவிட பெரிய ஹெல்ப், எனக்கு இருந்த போதை வஸ்து பாவனைய நீ இல்லாமலாக்கினது தான்.

ஒரு தடவை நான் அடுத்த ஃப்ரண்ட்ஸ் மாரோட சேர்ந்து சிகரெட் புடிச்சத நீ கண்டு என்னோட கொஞ்ச நாள் பேசாம இருந்தடா, அந்த நேரத்துல தான் நான் உண்ட உண்மையான நட்பை மிஸ் பண்ணினேன். அதற்கு பிறகு தான் நான் உனக்கு சத்தியம் செஞ்சு இனிமேல் இந்த மாதிரி சிகரெட் எதையும் எடுக்க மாட்டேன் என சொன்னப்ப நீ என்னை நம்பினடா.. அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யக்கூடாது என்றதுக்காக உண்மையாகவே நான் அதற்குப் பிறகு ஒரு நாள் கூட அந்த பக்கம் போறதே இல்ல.

இப்ப என்னோட, நீ இல்ல. நான் சிகரெட் குடிச்சாலும் அதை காண்றதுக்கு நீ இல்லடா. இருந்தாலும் என்ன வழி நடத்தி என்ன திருத்தின ஒரே உண்மையான நண்பன்னா அது நீதாண்டா.

அதோட நான் உன்கிட்ட ஒரு வியம் கேட்கணும்' என்றவாறே அது வரை ஒரு வேகத்தில் பேசிக் கொண்டிருந்த ஹகீம் சிறிது தடுமாறத் தொடங்கினான். 'ஹகீம் என்னடா எனட்ட பேசுறதுக்கு தடுமாறிட்டு இருக்காய். என்னன்னு சொல்லு' எனக் கேட்ட அஷ்மலிடம், 'டேய் உனக்கொரு தங்கச்சி இருந்ததானே. அவங்கள எனக்கு உன்னோட படிக்கிற காலத்தில் இருந்தே விருப்பம்டா. ஆனா நீதான் ரொம்ப ஸ்ட்ரிக்கான ஆளாச்சே. ஒரு சிகரெட் பிடிச்சதுக்கு என்னோட பேசாம இருந்துட்டாய். உங்க தங்கச்சியை நான் விரும்புறேன்னு சொன்னா நீ ஏத்துப்பியா.. அதனாலதான் எத்தனையோ தடவை இதை உன்கிட்ட சொல்ல வந்தாலும் நான் சொல்லலடா..

ஆனா இப்ப நான் வெளிநாட்டுக்கு போய் உழைச்சு ஏதோ ஒரு நல்ல நிலைமையில் இருக்கேன். அதனால தான் இப்ப இருந்த தைரியத்தை எல்லாம் வர வெச்சு கேக்கறேன். அந்த புள்ளைய எனக்கு திருமணம் செய்து தர உனக்கு சம்மதமா? எனக்கு எதுவுமே வேணாம்டா உங்க தங்கச்சியை மட்டும் நீ தந்தால் போதும். மத்த எல்லா செலவுகளையும் மற்ற எல்லா வியங்களையும் நானே பார்த்துக்கிறேன். ப்ளீஸ் டா' என்றவாறு அவன் முகம் பார்க்கத் தயங்கி கீழே பார்த்து பேசிய நண்பனை அப்படியே கட்டி அணைத்துக் கொண்ட அஷ்மலுக்கு மாலை மாலையாக கண்ணீர் வடியத் தொடங்கியது.

உண்மையில் எத்தனை நாளைய ஏக்கம் இது! எத்தனை நாட்கள் இதற்காக தஹஜ்ஜத்திலும் ஏனைய பொழுதுகளிலும் பிரார்த்தனை செய்து அழுது களைத்துப் போயிருந்தான் அவன். அப்போதுதான் அவனுக்கு ஒன்று மட்டும் நினைவுக்கு வந்தது நாம் ஒருவருக்கு கொடுக்கும் எந்தவித நன்மையையும் அல்லாஹுத்தஆலா ஒரு போதும் வீணாக்க மாட்டானென்பது.

'டேய் அழுதது போதும். வாடா உங்க உம்மாவை சந்திச்சு நான் முறையாக பெண் கேட்கப் போறேன்.' எனக் கூறியவாறு நண்பனின் கைகளைப் பிடித்துக் கொண்டு நகர்ந்தவனை பெருமிதத்துடன் பார்த்த அஷ்மல் மனதார புகழத் தொடங்கினான் இறைவனை!



**பாக்யபாரதி**
தருமபுரி

# கள்ளச் சாராயம்

திருமணமாகி
ஒரு வருடத்தைக் கூட
தாண்டாத
இளம்பெண்ணொருவள்
விதவைப் பட்டத்தைச்
சுமக்க தொடங்குகிறாள்...

ஏற்கனவே
அம்மா இல்லாமல்
வாழ்ந்த மாணவன்
தற்போது
தந்தையையும் இழந்து
அனாதை என்கிற
அடைமொழிக்கு ஆளாகிறான்...

வறுமையுடன் போராடி
தம்பி தங்கைகளைப்
படிக்க வைத்த
அண்ணனைத் தொலைத்த
குடிசை ஒன்று
அடுத்த அடி
எடுத்துவைக்க முடியாமல்
தடுமாறுகிறது...


ஒற்றை மகனைப்
பறிகொடுத்த
தாயொருவள்
தரையில் வீழ்ந்து
கதறி கதறி அழுவது
கல்நெஞ்சுக்காரனையும்
கலங்க வைக்கிறது...

முப்பது வயதில்
மூச்சடைத்துப்போன
மகனை நினைத்து
எழுபது வயது
முதியவரொருவர்
இந்த சாவு
எனக்கு
வரக்கூடாதாயென்று
கண்ணீர் வடிக்கிறார்...

இரண்டு நாட்களாக
செய்திதாள்களைப்
புரட்டடும்போதும்
தொலைக்காட்சியைப்
பார்க்கும்போதும்
கனத்துப்போகிறது
என்னிதயம்...

கள்ளச்சாராயம்
குடிக்கும்
குடிமகன்களே
கவனத்தில் கொள்ளுங்கள்
குடி உங்களை
மட்டுமல்ல
உங்கள் குடும்பத்தையே
கூறுபோட்டுவிடுமென்று...






*நூலின் பெயர்:* அப்பாவின் டயரி. (தேசிய பத்திரிகையான தமிழன் வாரவெளியீட்டில் பிரசுரமானவை)
*வகை:* சிறுகதைகள்
*கதைகள்:* கதைகள்: 15
*நூலாசிரியர்:* எஸ். ஏ. கப்பார்
*வெளியீடு:* வெண்ணிலா பதிப்பகம்
*பக்கங்கள்:* பக்கங்கள்: 104
*விலை:* இலங்கை ரூபா. 500
*தொடர்பு:* +94 776968671
*மின்னஞ்சல்:* kavignarsagaffar@gmail.com

# அப்பாவின் டயரி – இது கப்பாரின் உயிர்

*எஸ். ஏ. கப்பார்- 1977 களில் உற்பவித்துப் பாய்ந்த ஓர் எழுத்து ஆறு. எழுத்தாளர், சஞ்சிகை ஆசிரியர், பத்திரிகையாளர், வங்கி மேலாளர் எனப் பல முகங்கள் கொண்டவர். வெண்ணிலா எனும் காலாண்டிதழை கடந்த 2021 முதல் நடத்தி வருகிறார். இவர் வங்கித் தொழிலிருந்து ஓய்வு பெற்றபின் பல்வேறு ஊடகங்களில் எழுதி வந்தாலும், தமிழன் பத்திரிகையில் வெளியான தன் 15 சிறுகதைகளைத் தொகுத்து 'அப்பாவின் டயரி ' என்ற இந்நூலை கொணர்ந்துள்ளார்.*

*தன் வாழ்வியலில் கண்டு, கேட்டு, அனுபவித்த மானுடவியலின் பல்வேறு கூறுகளை எழுதுவது இவரது இயல்பான சுவாபம் ஆகும். இத்தொகுப்பிலுள்ள பல கதைகள் இதற்கு சான்றாக உள்ளன. மானுட வாழ்வின் இழிகுணத்தை சுட்டெரிக்கின்ற தன்மை இவரது கதை நெடுகிலும் ஊடுபாவிச் செல்கின்றன.. தவிர மானுட வாழ்வின் சில மென்மை யான பக்கங்களை, அவர் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு, தொட்டுச் செல்வதிலும் அவரது எழுத்தனுபவம் நன்கு வெளிப்பட்டு நிற்கிறது*

*'அப்பாவின் டயரி' என்ற கதை உயிரோட்டமும் உணர்வோட்டமும் கலந்து வாசகர் மனங்களை கதையின்பால் இறுகப் பிணைத்து வைக்கிறது. தாய் வீடு, அம்மாவின் வளையல்*

*களும் எஞ்சிய நூல்களும், போன்ற கதைகள் அத்தகைய தறியில் அழுத்தமாக நெய்யப்பட்ட அழகான சிறுகதைகளாகப் பரிணமிக்கின்றன. சமூக சேவகி, தோழி ஜெனீரா, ரியுசன் மாஸ்டர் போன்ற கதைகளில் கப்பார் தன் எழுத்தை சமூகப் பொறுப்புடன் முன்னிறுத்தி அவற்றை ஒரு சிற்பம் போல, தேர்ந்த ஒரு சிறுகதையின் வடிவம் தப்பாது செதுக்கியுள்ளார்.*

*தொகுப்பிலுள்ள 15 கதைகளும் நம்முடன் வாழுகிற நம்மவர்களின் இயல்புகளையே மையச் சரட்டாகக் கொண்டு நகர்ந்திருக்கின்றன.. சின்னச் சின்னக் கதைகளைத் தேர்ந்து சின்னச்சின்ன மொழிநடையில் சிக்கலின்றி நேரடியாக கதை சொல்லியிருக்கும் தன்மையில் கப்பார் ஓர் எழுத்தாளராக வெற்றி பெற்றிருக்கிறார்.*

*அழகான வடிவைப்பும், தள நேர்த்தியும் கொண்டு வெண்ணிலா பதிப்பக வெளியீடாக 104 பக்கங்களில் ரூபா 500 விலையில் கிடைக்கிறது இந்நூல்.*

*நூலை காலம்சென்ற தன் அன்பு மனைவிக்குச் சமர்ப்பணம் செய்திருப்பது மனதை நெகிழச் செய்கிறது. ஒவ்வொரு கதைக்கு முன்னும் அக்கதை வெளியான தமிழன் பத்திரிகை நறுக்கை இணைத்திருப்பது ஒரு புது முயற்சி ஆகும்.*

*ஒரு கவிஞன், பத்திரிகாசிரியராக அறிந்து வைத்திருந்த நண்பர் எஸ்.ஏ. கப்பார் அவர்களை இந்நூல் வாயிலாக ஒரு அழகான 'கதை சொல்லி'யாகவும் அறிந்து வியப்படைந்தேன். அன்பு வாழ்த்துக்கள்.*

–ஆர். எம். நௌஸாத் ( தீரன்)
**(மூத்த கவிஞர், சிறுகதை எழுத்தாளர் மற்றும் நாவலாசிரியர்)**
24-07-2024.

# இன்னிசை வெண்பா

**கலக்கமுற்றேன் நெஞ்சம் கனமாய் வலிக்க**
**நலமனைத்தும் என்னுள் நழுவிடவும் நின்றேன்**
**பலனின்றிப் பாவம் படுத்திவைக்க நோயாய்**
**வலியுடன் நாளும் வலித்து**

**நிலையற்ற மானிடர் நித்தம் இடியாய்**
**களையின்றி என்முகம் கண்டிட - என்னுள்**
**உலையிட்ட நீராக உள்ளம் கொதிக்க**
**அலையலையாய் வேதனை ஆம்.**

**–பாவலர் வா.சண்முகம்**

இக் கதை முற்று முழுதாக உண்மையாக ஒருவருடைய வாழ்வில் இடம் பெற்ற சம்பவம் கதை இறுதியில் இவள் ஜெயித்தாளா இல்லை வீழ்ந்தாளா என்பது தான் இக் கதையின் கரு.. ”

# ஓர் அறிமுகம் ...

*ஒரு அழகிய கிராமம். பார்ப்போர் பார்வையை கொள்ளை கொள்ளும் வகையில் பாதைக்கு இரண்டு பக்கமும் பச்சைப் பசேல் என காட்சியளிக்கும் வயல் வெளிகள் இதமான மனதை வருடும் மெல்லிய தென்றல் காற்று.. அழகிய சிறிய கிராமம் அது. சரி காட்சிக்கும் செல்வோம்..*

*துகர்ந்து கிடக்கும் குட்டையில் பூத்து அந்த குட்டையை அழகு படுத்த பூத்துக் குலுங்கும் பூவாக அந்த குடும்பத்தை அழகு படுத்த பூவுலகில் பாதம் பதிக்கிறாள் அவள்..*

*மகிழ்ச்சியின் உச்சத்தில் உறவுகள் மிதக்க காலங்கள் பல உருண்டோடின. அவள் வீட்டில் முதல் பிள்ளை அவளுக்கு இரண்டு தம்பி மற்றும் இரண்டு தங்கை*

*தாய்:- மரீனா*
*தந்தை:- வஹாப் (b)*
*முதல் தம்பி :- மீரான்*
*இரண்டாவது தம்பி :- சாகீப் (b)*
*முதல் தங்கை :- பாத்திமா*
*இரண்டாவது தங்கை :- நஸ்ரியா*
*முன்றாவது தங்கை :- ரீமா*

*சரி யார் அவள்?*
*அவள் பெயர் சைனப். பொறுமை காப்பதில் சீதேவி. இளம் வயதிலேயே தன் தம்பி தங்கையை தாய்க்கு நிகராக சுமத்துவள். துடிப்பான மன தைரியமான பெண். பிரச்சினைகளை தனியாக தைரியமாக சமாளிக்கக் கூடிய வல்லமை கொண்டவள். சிரித்த முகம். பார்ப்போர் ஈர்க்கும் வகையில் அத்தனை குணாதிசயங்கள் கொண்டவள். ஆனால் இவளது சிரிப்புக்கு பின்னால் பல கண்ணீர் சிந்தும் கதைகள். பார்ப்போம்.*

*அனைவருக்கும் வாழ்வில் வசந்த காலம் போல் ஓர் கொடைக் காலமும் உண்டு ஆம் நிச்சயமாக இங்கு அவளுக்கும் அவ்வாறே. இலை மறை காயாக நகர்த்த அவளது வாழ்க்கை. பல விதமான பிரச்சினைகளை யும் இன்னல்களையும் சந்தித்தால் சமாளித்தாள். குடும்பத்தில் ஏற்பட்ட வறுமை*

*காரணமாக தாய் வெளிநாட்டில் வேலைக்கு செல்லும் நிலை இவளது கல்வி கேள்விக் குறியாக மாறியது காரணம் இவள் வீட்டில் முதல் பிள்ளை தம்பி தங்கை மிகவும் சிறியவர்கள். பாடசாலைக் கல்வியை இடை நிறுத்துகிறாள்.*

*நான் முன்னர் கூறினேன் இவள் தாய்க்கு நிகர் என்று காரணம் இப் போது புரிந்திருக்கும்.அவ்வாறே பல வருடங்கள் உருண்டோடின. அவள் திருமணம வயதை அடைகிறாள். திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. விருப்ப மற்ற நபர் பெற்றோரின் விருப்பப்படி அவளது சம்மதத்தை கேளாது திரு மணம் நடைபெறுகிறது.*

*ஏன் அவளுக்கு இந்த திருமணத்தில் சம்மதம் இல்லை???*

*காரணம் அவளது கணவன் ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தைக்கு தகப்பன் என்பது மட்டும் இன்றி. அந்த குழந்தைக்கு தாயாக இவள் மாற வேண்டும். அந்த குழந்தைக்கு இரண்டு வயது மாத்திரமே. சைனபின் வயது 18 கணவனின் வயது 28 காணப்பட்டது. திருமணமாகி சில மாதங்களில் அவளும் கர்ப்பம் தரிக்க உறவுகள் மகிழ்ச்சி கடலில் மூழ்கி ஆனந்தம் கொள்கிறார்கள்.*

**சரி சரி என் அன்பு உறவுகளே கதையில் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு எனின்,**

**சைன(B)பின் அடுத்த கட்ட திருமண வாழ்க்கை எவ்வாறு அமைத்தது?**
**கணவன் யார்? கணவனின் குணம் எவ்வாறு இருக்கும்?**
**கணவனின் முதல் குழந்தை ஆணா? பெண்ணா?**
**கணவனின் முதல் குழந்தை யார்?**
**அக் குழந்தையின் வாழ்க்கை எவ்வாறு நகர்த்தப்பட்டது?**
**சைனபிற்கு குழந்தை பிறந்தா? இல்லையா?**
**பிறந்தநாள் அக் குழந்தையின் வாழ்க்கை எவ்வாறு நகர்த்தப்பட்டது?**

சிறு வயதில் திருமணம், கணவனின் முதல் குழந்தையை ஏற்க வேண்டும், தானும் கர்ப்பம் அடைந்த நிலை இரண்டு குழந்தைகள், தம்பி தங்கை இக்கட்டான சூழ்நிலையில் அவள்

விரிவான சுவாரஸ்யமான காட்சிகளுடன்
உங்களுக்காக விரைவில்...

# சிரிப்பால் மறைத்த சோகம்



# நினைவே செயலாக...

‘எதை நாம் தொடர்ந்து தினமும் நினைக்கிறோமோ அதுவே நமது செயல்பாடாக அமையும் என்று பலரும் சொல்லக் கேட்டிருக் கின்றோம். இடைவிடாத முயற்சி என்பது எதையாவது ஒன்றை வெற்றியாக்கியே தரும் என்பதும் நிதர்சனம்‘. ஆகவே நினைப்பு தான் என்றும் செயலாகிறது. அதற்காக எதையாவது நினைக்கலாமா? அப்படி நினைத்தால் அது நடந்திடுமா? என்றால் அதற்கு வாய்ப்பில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது.

விதைக்கும் விதை எல்லாமும் முளைத்து விடுவதில்லை. முளைத்த பயிரெல்லாம் முழுப்பயனைத் தருவதுமில்லை. அப்படியிருக்க நினைப்பே பிழைப்பைக் கெடுக்கும் என்றால் அதன் பொருள் தான் என்ன? இடைவிடாது நினைத்தும், நடக்காது போவது ஏன்? அங்குதான் சூட்சுமம் இருக்கிறது. நமக்கு புராணங்கள் நிறையவே போதித்திருக்கின்றன. முனிவர்களைப் பற்றியும் அசுரர்களைப் பற்றியுமான கதைகள் நிறையவே. இதில் முனிவர்களை நல்லவர்களாகவும் அசுரர்களை மாற்றாகவும் சித்தரித்து நமக்கு காட்டியுள்ளார்கள்.

இதில் முனிவனுக்கு ஈடாக அசுரனும் கடுந்தவம் செய்தாலும் கேட்ட வரத்தைப் பெற்றாலும் அந்த வரத்தாலேயே அவன் முடிந்து போவதாகப் படித்திருக்கிறோம்.

இடைவிடாத கடுந்தவம் இருப்பது போல் காட்டி அவனை இல்லாது செய்து விட்டதே. ஏன்? அவன் தன் விருப்பத்தை வரத்தை நல்லதுக்காக மற்றவர்களின் துயர் துடைப்பதற்காக கேட்கவில்லை. மற்றவர்களை அடக்கி ஆள்வதற்காகவே அவன் தவம் இருந்ததால் அது நிலைக்கவில்லை என படித்திருக்கிறோம். இதெல்லாம் உண்மையா கேட்கக் கூடாது. உணர்த்தும் பொருளை மட்டும் மனதுள் விதைக்க வேண்டும்.



எதை நினைக்க வேண்டுமோ அதை நினைக்க வேண்டும். கத்தரியை விதைத்து விட்டு வெண்டையை எதிர்பார்க்கக் கூடாது. எது நடப்பிற்கு சரியானதாக இருக்குமோ அதையே நினைப்பில் வைக்க வேண்டும். எந்த கழனியில் எந்த காலநிலையில் எதை விதைக்க வேண்டும் என்று அறியும் அறிவு உனக்கிருக்க வேண்டும். எண்ணம் அப்படியிருந்தால் நினைப்பது நடக்க லாம்.

வாழ்க்கை என்பது ஓடுகளம் தான். அதில் ஓடிக்கொண்டேதான் இருக்க வேண்

டும். முன்னால் இருப்பவனை நீ துரத்த வில்லை யென்றாலும், பின்னால் இருப்பவன் உன்னைத் துரத்த வில்லை யென்றாலும் நீ ஓடிக்கொண்டுதான் இருக்க வேண்டும். எதற்காக ஓட வேண்டும். கேள்வி கேட்கலாம். ஓடிக் கொண்டே இருந்தால் மட்டுமே நீ உயிர்ப்போடு இருப்பதாய் அர்த்தம். ஓட்டமே உன்னை அடையாளப் படுத்துகிறது. . ஓடுவது அவசியம் தான். உன் ஓட்டம் ஒரு இலக்கை நோக்கியதாக இருப்பதும் அவசியம். அந்த இலக்கு உன் வாழ்வை வடிவமைப்பதாகவும் இருக்க வேண்டும். சிலர் தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ள எதையும் செய்வார்கள். அவர்கள் செயல் அரிதான ஒன்றாகவே இருந்தாலும் வாழ்வுக்கு அவசியமானதா என்று உணர வேண்டும்.

ஒருவன் தலைகீழாக கைகளால் நடந்து வரலாம். அது சாதனையாகக் கூட இருக்கலாம். ஆனால் அவனது இந்த சாதனை எதை சாதிக்கப் போகிறது. இதற்காக ஒதுக்கிய நேரத்தை உருப்படியாக வேறெதிலும் கவனத்தில் கொண்டிருந்தால் அது அவனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இருக்கும். இப்படித்தான் பலர் எதற்கும் உதவாத ஒன்றிற்காக மெனக்கெட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நேரத்தின் மதிப்பு உணராதவர்களால் நிலையான வாழ்வைப் பெறமுடியாது. இங்கு எது அவனைத் தூண்டியது என்றால் புகழ்போதை கண்முன் முன் நிற்கிறது.

போதைகள் பலவிதம். அதில் புகழ் போதை என்பது மிகவும் உச்சமானது. புகழுச்சியில் ஒருவன் நிலை கொண்டு விட்டால் பின் இறங்குவதற்கு மனம் வருவதில்லை. மாறாக அதை தக்க வைத்துக் கொள்ள எதையும் செய்ய தயாராகி விடுகின்றான். நல்லது கெட்டது கண்ணுக்குத் தெரிவதில்லை. தவறான பாதையாக இருந்தாலும் அறம் மறந்தவனாய் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவே முயல்கின்றான். இந்த புகழ் எதைக் கொடுத்தது? சிந்தித்தால் அங்கே வெற்றிடமே கண்ணுக்குத் தெரியும்.

மதிப்போடு வாழ வேண்டும் என்பதில் தவறில்லை. மதிக்க வேண்டும் என்பதற்காக எதையும் செய்யக்கூடாது. உனது செயல்பாடுகள் உண்மையாகவும் பிறருக்கு நலம் பயப்பதாகவும் இருந்தால் பொறுப்பும் பதவியும் தானே தேடிவரும். தேடிப் போகக் கூடாது. தேடிப்போகும் போது நீ உன்னை மறந்து விடுவாய். மறக்கும் போது மனம் நிலை கொள்ளாது எதையும் செய்ய வைத்துவிடும். மனம் உனது கட்டுப்பாட்டில் இருந்தால் நீ மனிதன். மனதின் கட்டுப்பாட்டில் நீ போனால் நீ மிருகம்.

ஆக மனதே மூலம். மனதில் எதைக் கொள்கிறாயோ அதுவே விளையும் என்பது உணர்ந்து, எதை விளைவித்தால் எல்லோருக்கும் நல்லது என்றாய்ந்து அதனை நினைத்தால் இடைவிடாது நினைத்தால் அது ஈடேறும். உனது நினைப்பு என்றும் மற்றவர்களுக்கு தொந்தரவு தராதபடி இருக்க வேண்டும். சிறு அளவாவது அதில் கருணையும் இரக்கமும் மனிதமும் இருக்க வேண்டும்.

மனம் உணர்ந்து சிந்தனையை விதையுங்கள்.



**இதயமலர் சென்னை**

# தாயின் மாண்பு



கருவினில் உயிரைத் தாங்கிக்,
கவனமாய்ப் பேணும் அன்னை!
தருவெனத் தழைக்கும் சேய்க்குத் ,
தண்மையாய்க் கொடுப்பாள் தாய்ப்பால்!
கருவிழி இமையைப் போன்றே,
கனிவுடன் சேயைக் காப்பாள்!
கருணையும் அன்பும் கொண்டு,
கலையருள் தருவாள் தாயே!

உலகினில் உயர்ந்த உள்ளம்,
உடையவள் எங்கள் தாயே!
கலங்கிடும் நிலையைப் போக்கக்,
கார்முகில் போலத் தோன்றி,
நிலவிடும் துன்பம் நீக்கி,
நித்தமும் துயரம் ஏற்பாள்!
பலவிதப் பணிகள் ஆற்றும்,
பண்பினைப் பகிர்வாள் தாயே!

கல்வியில் உயர்வைக் காட்டும்,
கலங்கரை விளக்காய் நிற்பாள்!
வல்லமை வளர்க்க என்றும்,
வலிகளைத் தாங்கச் சொல்வாள்!
செல்வழி தவறாக் கொள்கை,
செழித்திடச் செய்யும் தங்கம்!
தொல்லியல் தமிழாம் பண்பைத்,
தொடர்ந்திடச் சொல்லும் நல்லாள்!

**– கிண்ணியா சபீனா**



# யக்கா வாசம்

- நா.விச்வநாதன்

ஏதோ பேசும்
ஏதோ புலம்பும்
அம்மாவிடம்
அநியாயமாய்த்
திட்டுவாங்கும்-

அப்பா
பேசுவதே இல்லை.
அக்கம் பக்கம்
முணுமுணுப்பதும்,
தெரு நடைக்காரர்கள்
ஒருவிநாடி பார்த்துக்
கடந்து போகும்
அவசரமும்
விளங்கவில்லை.

யக்காவின்
வெறித்த பார்வை
ஜன்னல் தாண்டியும்.
என்ன தேடுகிறது
எவ்வளவு தூரம்
என்பதொன்றும் புரியாமல்
சோர்ந்து பார்க்கும்
பரிதாபத்தோடு நான்.

யக்கா
எப்போதாவது
சிரிக்கும்.
சிரித்தால்
நிற்காத நீள் சிரிப்பு.

அழுவதும் அபூர்வம்-
அழுதால் நிற்காது
பலமணிக்கு.
இந்த ஆடிவந்தால்
நாற்பத்தி யொன்னு
என
அலட்சியமாய்
யக்கா நோக்கும்
பாட்டியின் கணக்கும்
புதிரானது.

முகம் தடவி
தலைதடவி
மார்பழுந்த
தம்பீ..யென அழைத்த
மூர்க்கத்தில்
நிறையத் தகிப்போடு
இருந்தது
யக்கா வாசம்
புதிராக.




# பருந்து நண்பன்

பறவைகள் எல்லாம் கூட்டமாக வயல் வெளிகளில் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்பொழுது திடீரென்று பெரிய பருந்து ஒன்று பறந்து வந்தது. அதைப் பார்த்ததும் சிறுசிறு பறவைகள் பயந்து, பறந்து சென்றன. பறந்து வந்து அமர்ந்த பருந்து 'ஏன் என்னைப் பார்த்து எல்லாரும் பயப்படுறீங்க , நானும் உங்கள் பறவை யினத்தைச் சார்ந்தவன் தான். நான் உங் களை ஒன்றும் செய்ய மாட்டேன். நானும் என் குழந்தைகளுக்காக இரை தேடி வெகு தொலைவில் இருந்து வந்திருக்கிறேன்' என்று பருந்து கூறியது. அதைக் கேட்டதும் அருகில் இருந்த குருவி அமைதியாகி 'நீ உருவத்தில் பெரியதாக இருப்பதால் உன்னைப் பார்த்ததும் எங்களுக்குப் பயம் வந்துவிடுகிறது' என்றது.

'அதுதான் நீங்கள் செய்யும் தவறு, ஒருவரின் உருவத்தைப் பார்த்து அவரைப் பற்றித் தவறாக நினைக்கக் கூடாது.



நெருங்கிப் பழகிப் பார்த்தால் மட்டுமே அவரின் உண்மையான குணம் நமக்குத் தெரியும். இனிமேல் பயப்படவேண்டாம் . இன்று முதல் நாம் நண்பர்கள்' என்று பருந்து சொன்னது. அன்று முதல் பருந்தும் குருவியும் நண்பர்களாகினர்.

ஒருநாள் குருவி மிகவும் சோகமாக இருந்ததைப் பார்த்த பருந்து 'என்னாச்சு' என்று கேட்ட பொழுது 'நான் இட்ட முட்டையில் இருந்து நேற்று தான் எனது குழந்தைகள் வெளிவந்தன. அவர்களைத் தனியாக விட்டுவிட்டு வந்திருக்கிறேன். அங்கே ஒரு பெரிய பாம்பு ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது . எந்த நேரத்தில் வரும் என்று தெரியாது. அது எப்பொழுதும் எந்தப் பறவை முட்டையிட்டாலும் அதன் குஞ்சுகளை உணவாக்கிக் கொள்ளும். அதனால் தான் பயந்து கொண்டு இருக்கிறேன்' என்று குருவி கூறியது. 'இதற்காகவா பயப்படுகிறாய்? நான் உன் நண்பன் அல்லவா உனக்கு உதவி செய்வது என் கடமை. நீ செல்லும் பொழுது உன் கூட்டிற்கு என்னையும் அழைத்துச் செல்' என்று பருந்து சொன்னது.

இருவரும் ஒன்றாகக் குருவியின் இருப்பிடத்திற்குப் பறந்து சென்றனர் . குருவி இருக்கும் மரத்தை நெருங்கியபோது அதற்குள் அந்த பொல்லாத பாம்பு மரத்தின் மேல் ஏறி கிளைகளில் இருக்கும் கூட்டின் அருகில் சென்றுவிட்டது . அதைப் பார்த்ததும் ' என் கூட்டின் அருகே பாம்பு வந்துவிட்டது' பயந்த குருவி கத்தியது. உடனே பருந்து ஒரு சத்தத்துடன் அந்த மரத்திற்கு மேலே பறக்கத் தொடங்கியது. சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த பாம்பு பருந்தைப் பார்த்ததும் 'அய்யோ! இவன் எங்கே இங்கே வந்தான்? இவன் கண்ணில் மட்டும் பட்டால் அவ்வளவுதான் இன்னைக்கு என்னை அவன் குழந்தைகளுக்கு உணவாக எடுத்துச் சென்று விடுவான்' என்று பயந்தபடியே வேகமாக இறங்கிச் சென்றது பாம்பு. மரத்தில் இருந்தபடியே குருவி பருந்துக்கு நன்றி சொன்னது.



**ஜனனி குமார்**
**நாகப்பட்டினம்**

அன்று முதல் பருந்து அந்த மரத்திற்கு வந்து குருவியை அழைத்துச் செல்வதால் பாம்பு அந்த மரத்தை நெருங்குவது கூட இல்லை. குருவிக்கு, பருந்து உதவியதைப் பார்த்த மற்ற பறவைகளும் பயம் தெளிந்து பருந்துடன் நட்புடன் பழக ஆரம்பித்தன. பறவைக் கூட்டங்கள் ஒற்றுமையாக வானில் பறந்து வட்டமிட்டன.





# புத்தக நண்பன்

குழந்தைகளுக்கு விடுமுறை என்றாலே மகிழ்ச்சி. அதுவும் கோடை விடுமுறை என்றால் அளவற்ற மகிழ்ச்சி. ஏனென்றால் விடுமுறை நீண்ட நாட்கள் வரும். நிறைய ஊருக்குப் போகலாம்.

புதுப்புது இடங்களுக்குப் போகலாம், அதிக தின்பண்டங்களை சாப்பிடலாம், குறிப்பாக வீட்டுப் பாடங்கள் எழுத வேண்டாம், டீவி பார்க்கலாம், காலையில் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டாம், எனச் சொல்லிக் கொண்டே போனாள் சுதா. அவளின் நண்பர்களிடம் கூறிக்கொண்டே மாலை நடைப்பயிற்சி தாத்தாவுடன் சென்றார்கள்.

தாத்தா குழந்தைகளிடம் 'நீங்கள் காலையில் எங்கள் இல்லத்திற்கு வாங்க நிறைய, நிறைய கருத்துள்ள கதைகளை உங்களுக்குச் சொல்கிறேன்' என்றார்.

குழந்தைகள் காலையில் வந்தவுடன் சுதாவின் அம்மா கலா உபசரிப்பு செய் தார்கள். தாத்தாவும் குழந்தைகளுக்கு கதை கூற பல நீதிக் கதைகளை நினைவுப்படுத் தி க் கொண்டே இருந்தார்.

இவ்வாறு ஒரு வாரம் சென்றது. காலையில் கதை, மாலையில் அதிலிருந்து சிறு சிறு வினா என்று ஒரு சில நாட்கள் கழிந்தன. மதியும், மோகனும் சுதாவிடம் 'உனக்கும் கதைகள் தெரியுமா' எனக் கேட்டார்கள். 'ஆமாம். எனக்கு ஒரு சில கதைகள் தெரியும்' என்றாள்.

தாத்தா மறுநாள் 'நீங்கள் எனக்கு ஒரு கதை கூற வேண்டும். நான் மட்டுமே கூறிக்கொண்டே செல்கிறேன். நீங்களும் தினமும் ஒருவர், ஒருவராக கதை கூற வேண்டும்' என்றார்.

உடனே மதி 'எனக்குக் கதை தெரியாது' என்றான். மோகன் 'எனக்கும் தெரியாது' என கூறிக் கொண்டே நடைப்பயணம் மேற் கொண்டனர்.

சுதாவிடம் மறுநாள் இன்று நீ என்ன கதை கூற போகிறாய் என்றான் மதி. 'என் அம்மாவிடம் கேட்டேன் கலா அம்மா தாத்தாவின் நண்பரைப் போய் கேள்' என் றார்கள்.

'தாத்தாவின் நண்பரா... யார்?' என்று பெரும் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

ஏனென்றால் இவர்கள் அனைவரும் அமெரிக்காவில் வசிக்கிறார்கள். தாத்தாவின் நண்பர்கள் ஊரில் தானே இருப்பார்கள் என அவர்களின் பார்வையிலேயே புரிந்தது.

அப்பொழுதுதான் கலா அம்மா கூறத் தொடங்கினார்கள். 'தாத்தா வெளிநாட்டிற்கு வந்ததால், அவர்களின் நண்பர் களைப் பிரிந்து இருக்கும் துயரத்தைப் போக்க புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார்கள். பிறகு அதுவே தாத்தாவின் சிறந்த நண்பனாக மாறியது. அவரின் அறையில் உள்ள புத்தகங்கள்தான்' என சொல்லி முடித்தார் அம்மா.

தாத்தாவும் கேட்டுக் கொண்டே வந்தார். 'நீங்களும் இங்குள்ள புத்தகங்களைப் படித்து எனக்கு ஒரு கதை கூறுங்கள்' என்றார்.


குழந்தைகளும் 'அப்படியே செய்கிறோம்' என தலையை அசைத்துக் கொண்டே அங்குள்ள புத்தகங்களை எடுக்க முயன்றனர்.

**ஜீ. மைத்ரேயி, வந்தவாசி**



**ஏ. அனன்யா, சத்யா சிறப்பு பள்ளி, புதுச்சேரி..**





**வே. க. ரோஹின் கவி திருப்பூர்.**





# ஆராய்ச்சியாளர் சிவா

சென்னை புறநகர் பகுதியில் சிவான்னு ஒரு பையன் இருந்தான் அந்தப் பையன் எப்படினு உங்களுக்கு தெரியுமா? அவனுக்கு எப்பவுமே நிறைய கேள்விகள் மனசுக்குள்ள ஓடிக்கிட்டே இருக்கும். இதை யாரு கண்டுபிடிச்சா... அதை யாரு கண்டுபிடிச்சா... நாம எல்லாரும் எப்படி வந்தோம்...இப்படின்னு நிறைய சந்தேகம் அவனுக்கு அறிவியல் பாடம்னா ரொம்பவும் பிடிக்கும். அவனுக்கு சந்தேகம் வரும் போதெல்லாம், அவங்க அம்மா கிட்ட போய் கேப்பான். சில சமயம் அவங்க அம்மா பதில் சொல்லுவாங்க, சில சமயம் வேலை ஆகி இருக்குன்னு சொல்லுவாங்க.

பூமி வட்டமா இருக்குன்னு யார் கண்டு பிடிச்சாங்க, பருவ காலங்கள் எப்படி சுழற்சி முறையில வருது, தண்ணீருக்கு அந்த பேர் வச்சது யாரு, மரம் எப்படி ஒரு விதைக்குள்ள மறைந்து இருந்தது, அந்த மரத்துல இலைகள் எல்லாம் எப்படி முளைக்குது, வடிவங்களுக்கு வட்டம், முக்கோணம், சதுரம் அப்படின்னு பேர் வெச்சது யாரு, பெயருக்கு யார் பெயர்னு பேர் வச்சா ... அப்படின்னு நிறைய சந்தேகம்

ஒரு கட்டத்துல அவங்க அம்மா 'டேய்... ஏன்டா உனக்கு மட்டும் இவ்வளவு சந்தேகம் வருது, தயவு செஞ்சு போயிடு' அப்படின்னு சொல்லிட்டாங்களாம். ஆனாலும் சிவா வுக்கு சந்தேகம் வரும் போதெல்லாம் பக் கத்துல இருக்குற பூங்காவுக்குப் போய் உட்கார்ந்து யோசித்துக் கொண்டே இருப்பானாம். அவனுக்கா ஏதாவது பதில் தோணும். பிறகு வந்துருவான்.

அன்னைக்கு அப்படித்தான் இரவு நேரத்துல அவங்க வீட்டு மொட்டை மாடியில வானத்தைப் பார்த்துகிட்டு உட்கார்ந்திருந்தான். வானத்துல நிறைய நட்சத்திரங்கள் ஒன்னா சேர்ந்து அவனுக்கு யானை வடிவில் தெரிஞ்சது. அதைப் பார்த்ததும் சிவாவுக்கு ரொம்ப சந்தோசமா ஆயிடுச்சு. அந்த யானை வடிவத்துக்குள்ள எத்தனை நட்சத்திரங்கள் இருக்கு அப்படின்னு எண்ணத் தொடங்கி விட்டான். தொடர்ந்து எண்ணிட்டு இருக்கான். எண்ணுறான்... எண்ணுறான்... எண்ணிக்கிட்டே இருக்கான். ஆனா அவனால எண்ணி முடிக்கவே முடியல.

அதுக்குள்ள சிவாவோட அம்மா மாடிக்கு வந்து 'ஏன்டா சிவா, இவ்வளவு நேரம் இங்க என்ன பண்ணுற, வந்து தூங்குடா... சீக்கிரம் தூங்குனா தானே, காலையில சீக்கிரமா பள்ளிக்குப் போக முடியும்...' என்று கூப்பிட்டாங்க.

'அம்மா... அம்மா...'

'என்னடா...'



‘இந்த நட்சத்திரங்களை ஏம்மா எண்ணவே முடியல’ கேட்டான் சிவா.

‘அங்க எனக்கு ஆயிரம் வேலை கிடைக்கு. உனக்கு இதுதான் கவலையா... போ... வர சனிக்கிழமை பக்கத்துல இருக்கிற நூலகத்துக்குப் போய் அங்கே புத்தகங்கள் எல்லாம் இருக்கும். அதை எடுத்துப் படிச்சு உன்னோட சந்தேகங்களைத் தீர்த்துக்கோ’ என்றார் அம்மா.

சனிக்கிழமை காலைல எழுந்ததும் வேக வேகமா குளிச்சிட்டு ‘அம்மா, காலை உணவு தாங்க’ அப்படின்னு ஓடி வந்தான் சிவா.

‘இவ்வளவு சீக்கிரம் எங்கடா கிளம்பிட்ட...’ அம்மா கேட்கவும், ‘பக்கத்துல இருக்குற நூலகத்துக்குப் போய் படிக்கப் போறேன் மா’ சொல்லிவிட்டு நூலகத்திற்குச் சென்றான்.

அங்கு நூலகரியிடம் இவனது தேவையைச் சொல்லவும் அவர் ஒரு புத்தகம் எடுத்து தந்தார். அந்தப் புத்தகத்தில் ‘நாம் வாழும் பூமி ஒரு சூர்யக் குடும்பத்தில் இருக்கிறது. பல சூரியக் குடும்பங்கள் சேர்ந்தது, பால்வெளிக் குழுமங்கள் ஆகும். பல பால் வெளி குடும்பங்கள் சேர்ந்தது அண்டம் அல்லது பேரண்டம் ஆகும். அந்தப் பேரண்டம் முழுமையாக நிரம்பி இருக்கிறது நட்சத்திரங்கள் என்று போட்டிருந்தது. அதைப் படித்ததும் சிவாவின் சந்தேகம் தீர்ந்தது. வீட்டிற்கு வந்து அம்மா கிட்ட, நண்பர்கள் கிட்ட தான் படித்ததைச் சொல்லி மகிழ்ந்தான்.

சிறிது நாள்கள் கழித்து சிவாவின் பள்ளியில் அறிவியல் ஆசிரியர் பாடம் சார்ந்த இடுபணி (ப்ராஜெக்ட்) ஒன்னு தந்தாங்க. அது என்னன்னா ‘பால் வெளி குறித்து எழுதிக்கிட்டு வரலாம். இல்லனா ஏதாவது ‘மாதிரி வடிவம்’ செஞ்சு எடுத்துட்டு வரலாம். அப்படி கொண்டு வரவங்களோடதுல, இந்தப் பள்ளியிலேயே யாரோடது ரொம்ப நல்லா இருக்கோ, அவங்களை காலைல பள்ளி பிரார்த்தனை நேரம் இருக்கு இல்லையா அங்க வச்சு தலைமை ஆசிரியர் பாராட்டுவாங்க...’ என்று சொன்னார்.

சிவாவுக்கு ரொம்பவே மகிழ்ச்சியாயிடுச்சு. அவன் நூலகத்துல படிச்ச புத்தகத்துல இருக்கிறதெல்லாம் நினைவுக்கு கொண்டு வந்து அழகா ஒரு கட்டுரை எழுதினான். கூடவே பால்வெளி குறித்து ‘இரண்டு மாதிரி வடிவமைப்புகள்’ செஞ்சு பள்ளிக்கு கொண்டு போனான். அதைப் பார்த்த அவங்க அறிவியல் ஆசிரியருக்கு வியப்பு அதிகமாயிடுச்சு. அவன மனசார பாராட்டினார். காலை பிரார்த்தனை நேரத்திலையும், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களும் சிவாவை ரொம்பவே பாராட்டினார்கள்.

அப்போ தலைமை ஆசிரியர் சிவாகிட்ட ‘நீ வளர்ந்ததும் என்னவா ஆகப் போகிற?’ அப்படின்னு கேட்டாங்க.

‘பெரிய விஞ்ஞானியா, வானவியல் ஆராய்ச்சியாளரா வரணுங்கிறது தான் என்னோட ஆசை ஐயா’ என்றான் சிவா.

‘உன்னோட கனவு நிறைவேறுவதற்கு எங்களோட மனமார்ந்த வாழ்த்துகள்’ வாழ்த்தினார் தலைமையாசிரியர்



**சு. பிரவந்திகா,**
**பட்டாபிராம்,**
**சென்னை.**



# ஆச்சிக்குப் பாடம் நடத்திய அம்மு

அம்முவின் வீட்டிலிருந்து இரண்டு தெருக்கள் தள்ளிதான் அவள் படிக்கும் மழலையர் பள்ளி இருந்தது. நாள்தோறும் காலையில் அம்முவைப் பள்ளிக்குக் கொண்டு சென்று விடுவதும், நண்பகல் பள்ளி விட்டதும் வீட்டிற்கு அழைத்து வருவதும் அம்முவின் ஆச்சியே.

பள்ளிச் சீருடை அணிந்து, ஆச்சியின் கை விரல்களைப் பிடித்தபடியே நடக்கும் அம்முவுக்குப் பள்ளிக்குச் செல்வதற்குள் நிறைய சந்தேகங்கள் வரும். ஆச்சி இது என்ன செடி, அது என்ன விலங்கு, நாய் ஏன் குலைக்கிறது, இந்த மரத்திற்கு ஏன் வேப்ப மரம் என்று பெயர் வந்தது, ஏன் கோழி மட்டும் முட்டையிடுகிறது, பள்ளிக்கு ஏன் சீருடை அணிந்து செல்ல வேண்டும் என்று ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டுக் கொண்டே நடப்பாள். ஆச்சியும் அவருக்குத் தெரிந்த அளவுக்குப் பதில் சொல்லிக் கொண்டே செல்வார்.

அம்முவால் ஒரு நிமிடம் கூட பேசாமல் இருக்க முடியாது. கேட்பதற்கு எதுவும் சந்தேகங்கள் இல்லாவிட்டால், ‘ஆச்சி ஆத்தி சூடி சொல்லட்டுமா, இல்ல திருக்குறள் சொல்லட்டுமா?’ என்று கேட்டு அவைகளைச் சொல்லிக் கொண்டே வருவாள்.

மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் அம்முவை அவளது வீட்டில் மட்டுமல்ல பள்ளியிலும் அனைவருக்கும் பிடிக்கும்.

அன்று மதியம் அம்முவை அழைத்து வருவதற்காக பள்ளிக்குச் சென்றார் ஆச்சி. பள்ளி முடிந்ததற்கான மணி அடித் ததும், குழந்தைகள் வெளியே வரத் தொடங் கினார்கள். ஆச்சியைப் பார்த்து வேகமாக ஓடி வந்தாள் அம்மு.

‘அம்மு, மெதுவாக வா, விழுந்து விடப் போகிறாய்’ சத்தமாக சொன்னார்கள் ஆச்சி.

‘ஆச்சி, நாளைக்கு நீங்களும், தாத்தாவும் எங்க வகுப்புக்கு வரணும். ஆசிரியர் சொல்லி விட்டார்கள்’

‘எதற்காக அம்மு?’

‘அச்சோ... இது தெரியாதா உங்களுக்கு? நாளைக்கு எங்க பள்ளிக்கூடத்துல தாத்தா, பாட்டி தினம் கொண்டாடுறோம். அதுக்குத் தான் நீங்க வரணும்’ அம்மு சிரித்தாள்.

‘அடடே... நாளைக்குத்தான் தாத்தா, பாட்டி தினமா? அவசியம் வருகிறேன் செல் லம்’ பாட்டி சொன்னார்கள்.

‘தாத்தா, பாட்டி தினம் என்றால் என்னது ஆச்சி?’

‘அதுவா.. தாத்தா, பாட்டி மற்றும் பேரக் குழந்தைகளுக்கு இடையே உள்ள பாசத்-தைக் காட்டுவதற்காக கொண்டாடப்படுகிற ஒரு நாள். 1965 இல் போலந்து நாட்டில் முதன்முறையாகக் கொண்டாடப்பட்டது‘

‘வருசத்துக்கு ஒரு நாள்தான் பாசம் காட் டணுமா... மத்த நாளெல்லாம்?’அம்மு கேட் டதும் சிரித்தார் பாட்டி.

‘அப்படி இல்ல அம்மு, எல்லா நாளும் பாசம் காட்டுவோம் தான். ஆனா இப்போ வெளியூர்ல இருக்குற, இங்கேயே வேற வீட்ல இருக்குற பேரப்பசங்கள தாத்தா, பாட்டி யால நாள்தோறும் பார்க்க முடியாது இல் லையா? அவங்க எல்லாம் இந்தக் குறிப்பிட்ட நாளில் பாட்டி வீட்டுக்கு வந்து பாட்டி, தாத்தாவோட இருந்துட்டு போவாங்க. இதுனால தாத்தா, பாட்டிக்கும் சந்தோசம். பேரக்குழந்தைகளுக்கும் சந்தோசம். அவங்க ளுக்குள்ள இருக்குற பிணைப்பு அதிகமா கும் இல்லையா. அதுக்காகத்தான் இந்தக் கொண்டாட்டம்’

‘நாம எல்லாரும் ஒரே வீட்ல இருக்க றதுனால, எனக்கு ஒன்னும் தெரியல, நாம இப்படி ஒன்னாவே இருப்போம்’ சொல்லிய அம்மு பாட்டியின் கையில் முத்தம் தந்தாள். பாட்டியும் அம்முவுக்கு முத்தம் தந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் அம்மு, தாத்தா, பாட்டி மூவரும் பள்ளிக்குச் சென்றார்கள். அனைவரும் வந்ததும் பள்ளியில் கொண் டாட்டம் தொடங்கியது.

முதல் நாளே குழந்தைகளிடம் அவர்க ளுக்குப் பிடித்த உணவு, வண்ணம், உடை இவைகளைக் கேட்டு குறித்து வைத்துக் கொண்ட ஆசிரியர்கள், அவற் றிலிருந்து தாத்தா, பாட்டிகளிடம் கேள்வி கேட்டார்கள். சரியான பதில் சொன்னவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

குழந்தைகள் வகுப்பில் பாடும் பாடலை முதியவர்களைப் பாடச் சொல்லி, பிழை இல்லாமல் பாடியவர்களுக்கு பரிசு தந்தார்கள். ஒவ்வொரு தாத்தா, பாட்டியையும் அவர்களது பேரக்குழந்-தைகளுடன் நிற்கச் செய்து புகைப்படம் எடுத்துத் தந்து மகிழ்வித்தார்கள்.

இறுதியாக 'பேரக் குழந்தைகளுடன் இன்னும் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என விருப்பம் உள்ளவர்கள் பேசலாம்' ஆசிரியர் சொன்னதும் வேகமாக எழுந்த அம்மு 'எங்கள் ஆச்சி பேசுவார்கள்' என்றாள்.

அம்முவின் ஆச்சிக்கு சிறுவயதிலிருந்து திக்குவாய் இருந்ததால் பொது இடங்களில், மேடைகளில் பேசுவதற்கு மிகவும் தயங்குவார்கள். அதனால் 'நான் பேசல அம்மு, தாத்தா பேசட்டும்' என்று சொன்னார்கள்.

'அதெல்லாம் இல்ல ஆச்சி, நீங்கதான் பேசணும். நான் சொன்னா நீங்க பேசுவீங்க தானே'அம்மு கேட்கவும் 'இல்லடா தங்கம், ஆச்சிக்கு சரியா பேச வராதுனு உனக்குத் தெரியும் தானே' தன்மையாகச் சொன்னார் ஆச்சி.

அம்முவும், ஆச்சியும் இங்கு பேசிக் கொண்டிருக்கும் பொழுது, மேடையில் பேசிக் கொண்டிருந்த விவானின் தாத்தா தனது பேச்சை முடித்துக் கொண்டு கீழே இறங்கினார். உடனே தனது ஆச்சியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மேடையை நோக்கிச் சென்றாள் அம்மு. ஆசிரியர் ஒலிவாங்கியை ஆச்சியிடம் தந்தார். ஆச்சிக்கு திக்குமோ என்ற பயத்தில் பேச்சே வரவில்லை. நாக்குக் குழறியது.

ஆச்சியின் பக்கத்தில் நின்றிருந்த அம்மு அவரின் சேலையைப் பிடித்து இலேசாக இழுத்தாள். கீழே குனிந்து பார்த்தார் ஆச்சி. 'உங்களால் பேச முடியும் ஆச்சி, பயப்படாம பேசுங்க, இவங்க எல்லாருமே உங்க பேரக்குழந்தைகள் தான்... அப்படின்னு நினைச்சுக்கிட்டு பேசுங்க' என்றாள் அம்மு.

'இவளை நல்ல அறிவோட, தைரியமா, வீரமா வளர்க்கணும் நினைச்சுகிட்டு இருக்கோம். இப்ப நாம பயந்தோம்னா, குழந்தையும் நம்மளைப் போலவே வளர்ந்துருவா, அதனால எதையாவது பேசிடுவோம்' என்று நினைத்த ஆச்சி பேசத் தொடங்கினார்கள்.

'அவங்க குழந்தையா இருக்கும்போது தாத்தா, பாட்டிகளோட எப்படிப் பழகினாங்க, இப்ப இருக்குற குழந்தைகள் எப்படி பழகுறாங்க அப்படிங்கறத குட்டிக்குட்டி கதைகளோட எல்லாரும் விரும்பிக் கேட்கிற மாதிரி நகைச்சுவையோட பேசினாங்க ஆச்சி.

அவங்க பேசி முடிச்சதும் எல்லாரும் கைதட்டினாங்க. 'இவ்வளவு நல்லா பேசுற நீங்க ஏன் தயங்குனீங்க?' ஆசிரியர் ஆச்சரியமாக கேட்டார். ஆச்சிக்கு மகிழ்ச்சியில் கண்கள் கலங்கியது. அம்முவைத் தூக்கி ' உன்னால்தான் பேசினேன் செல்லம்' என்றார்

'நல்லா பேசுனீங்க ஆச்சி' பெருமையாக சொன்னாள் அம்மு. 'நீ பேசும்போது உனக்கு திக்குவாய் என்பதே தெரியவில்லை. எப்படி பேசுகிறோம் என்பதை விட, என்ன பேசுகிறோம் என்பதே முக்கியம். தொடர்ந்து பேசலாம்' தாத்தா பாராட்டினார்.

இதோ இப்போது ஆச்சி ஒரு தொலைக்காட்சியில் சிறுவர் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருக்கிறார். அனைவரிடமும் 'எனது அம்முவால் மட்டுமே நான் தயக்கமின்றி பேசத் தொடங்கினேன்'என்பதைச் சொல்லாமல் இருந்ததே இல்லை.



**அன்புச்செல்வி சுப்புராஜ்**
**பட்டாபிராம், சென்னை**

# வாட்ஸ்அப் வானரங்கள்

அடர்ந்த பெரிய அழகிய காட்டில் எல்லா திசைகளிலும் இருந்து 'டிக்! டிக்.. டிக்..' 'ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்..' என்ற சத்தம் நிற்காமல் கேட்டுக் கொண்டே இருந்தது. இது என்ன கடிகாரத்தின் சத்தமா? என்றால் அது தான் இல்லை.

அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அம்மா ஒட்டக சிவிங்கி கொடுத்த 'வாட்ஸ் அப் வானரங்கள்' என்ற புத்தகத்தைப் படித்-துக் கொண்டு இருக்கும் குட்டி ஒட்டகசிவிங்கி யாஷ் உடன் சேர்ந்து நாமும் அந்த கதையில் பயணிப்போமா



பிருந்தாவனம் என்ற அழகிய காட்டில் ஒட்டக சிவிங்கிகள் கூட்டமாக வசித்து வந்தன. அந்த ஒட்டக சிவிங்கி கூட்டத்தில் யாஷ் என்ற குட்டி ஒட்டக சிவிங்கி எப்பொழுதும் சுறுசுறுப் பாக எதாவது செய்து கொண்டே இருக் கும். யாஷ்க்கு, அம்மா அப்பாவுடன் விளையா டுவது, புத்தகங்கள் படிப்பது ,பாட்டு பாடுவது, நண்பர்களுடன் விளையாடுவது என எதாவது அரட்டை அடித்துகொண்டே பிடித்தமான செயல் களை செய்து கொண்டே இருக்கும்

ஒரு சில நாட்கள் யாஷ் எதுவும் செய்ய பிடிக்காமல் அமைதியாக அமர்ந்து இருக்க ஆரம்பித்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை அம்மா ,அப்பாவுடனும் விளையாட வரவில்லை. சரியாக பேசவும் இல்லை. நண்பர்களுடன் விளையாட போக வும் இல்லை. பாட்டு பாட கூட மனமில் லாமல் இருந்தது.

இதை கவனித்த அம்மா ஒட்டக சிவிங்கி தன் னுடைய குழந்தையை நினைத்து கவலைப்பட்டு கொண்டே இருக்கையில் தற்செயலாக ஒரு புத்தகம் கண்ணில் பட்டது. யாஷுக்கும் புத்தகம் என்றால் ரொம்ப பிடிக்கும். உடனே 'டேய் இந்தா இந்த புத்த கத்தைப் படி' உனக்கு மிகவும் பிடிக்கும். என் அம்மா எனக்கு கொடுத்த புத்தகம். இதில் உணர்வு பூர்வ மான அறிவுத்திறனை வளர்க்கக் கூடிய நிறைய கதைகள் இருக்கு படித்துப் பார் என்று கொடுத்துச் சென்றது.

அந்த புத்தகத்தை வேகமாக வாங்கிய யாஷ் அதை ஆர்வத்துடன் திறந்து படிக்க ஆரம்பித்தது. அதில் பல வண்ண படங்களுடன் இருந்த அந்த புத்தகத்தில் கண்ணில் பட்ட முதல் கதையின் தலைப்பு 'வாட்ஸ்அப் வானரங்கள்'.

மிக உயரமான விண்ணைத் தொடும் அளவுக்கு பெரிய மரங்கள், கண்ணை கவரும் புள்ளி மான் கூட்டங்கள்,சின்ன சின்ன நீரோடைகள், மரத்திற்கு மரம் தாவி விளையாடும் குரங்கு கூட்டங்கள், யானை கள், புலிகள், சிங்கங்கள் பார்க்க பார்க்க ரம்மியமான சூழல் நிறைந்த வனத்துறை கட்டுப்பாட்டில் இயங்கும் சுற்றுலா தள மான அதியனூர் காடுகள். எப்பொழுதுமே பறவைகள் ரீங்காரம், விலங்குங்களின் சத்தம் என் அந்த காடே பயங்கர பிஸியாக நம்ம ஊர் நகரம் மாதிரி இருக்கும்

அங்கே ஒவ்வொரு முறையும் சுற்றிப் பார்க்க நிறைய சுற்றுலா பயணிகள் வருவார்கள். வனத்துறை அதிகாரிகள் அங்கு வரும் பயணிர்களிடம் காட்டை தூய்மையாக வைத்துக் கொள்ள சொல்லி அறிவுறுத்துவார்கள். மற்றும் அவர்களை சோதனை செய்து பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள் போன்றவற்றை வாங்கி வைத்த பின்பு தான் அவர்களை உள்ளே அனுமதிப்பார்கள்...

அந்த காட்டில் அவர்கள் அனைவரின் கவனத்தை ஈர்க்கும் விலங்கு என்றால் குரங் குகளும் அது செய்யும் சேட்டைகளும் தான். அதை அனைவருமே மெய் மறந்து பார்த்து ரசிப்பார்கள். ஒருநாள் சுற்றுலா பார்க்க வந்த பயணியரில் ஒருவரின் கையில் இருந்த போனில் இருந்து டிக்.. டிக்.. என்று சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. அதை கவனித்த குரங்குகளில் ஒன்று, 'ஐ! இது பார்க்க மிகவும் விநோதமாக உள்ளதே, இதை கண்டிப்பாக நண்பர்களிடம் காட்ட வேண்டும் என்று எண்ணியது'. அந்த சுற்றுலா பயணி அசந்த நேரத்தில் போனை 'லபக்' என்று பிடுங்கிக் கொண்டு சென்றது.இதைப் பார்த்த மற்ற பயணியர்கள் எல்லாம் அந்த இடத்தை விட்டு ஓட ஆரம்பித்தனர்.

போனை எடுத்துச் சென்ற குரங்கு மற்ற குரங்குகளிடம் காட்ட அதன் மீது 'ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்..' என்று தட்டியதும் பல பல Ga- mes வந்ததது. உடனே மிகவும் குஷியாக விளையாட ஆரம்பித்தது.இதைப் பார்த்த ம ற்ற குட்டி விலங்குகளும் பயணியர்களிடம் இருந்து போனை பிடுங்கி விளையாட தொடங்கின. அந்த காடு முழுக்க டிக்.. டிக்.. 'ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்.. ' என்ற சத்தம் மட் டுமே கேட்டுக் கொண்டே இருந்தது.

இரவு, பகல் பாராமல் எல்லா விலங்கு களுமே அந்த போனிலேயே பொழுதை கழித்தது சொல்லப்போனால் அதிலேயே மூழ்கியது எனலாம். இதனால் சுற்றுலா பயணியர்களை மகிழ்வித்து வந்த அனைத்து குட்டி விலங்குகளும் தங்களுடைய இயல் புக்கு மாறாக கூட்டமாக உட்கார்ந்து மொபைல் போனிலேயே இருந்ததால் விலங் குகளை பார்க்க வரும் சுற்றுலா பயணியர்கள் கூட்டம் குறைந்தது. இதனைப் பார்த்த மற்ற பெரிய விலங்குகள் எவ்வளவு சொல்லியும் இவைகள் கேட்பதாக இல்லை.

இந்த நிலைமையை மாற்ற எண்ணிய பெரிய விலங்குகள் ஒரு நாடகம் நடத்த முடிவு செய்தனர். அதன்படி காட்டில் உள்ள அனைத்து விலங்குகளும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென அழைப்பு விடுத்தனர். அந்த நாடகத்தில் ஒரு காட்சியில் குட்டி முயல் படு வேகமாக, தாய் மானை முந்தி ஓட வேண்டும். ஆனால் குட்டி முயலால் முடியவில்லை. அதேபோல் குட்டி மான்களால் தங்களுடைய வயதான பெரிய மான்களை போல் ஓட முடியவில்லை. குட்டி குரங்குகள் தாவுவதையே மறந்து விட்டது. குயிலுக்கு ஓசை வராமல் வெறும் காற்று தான் வந்தது.மயிலுக்கு நடனம் ஆட தெரியாமல் கைப்புள்ள நடந்தால் எப்படி இருக்குமோ அப்படி ஆகிவிட்டது. இதேபோல் எல்லா குட்டிஸ் விலங்குகளும் அவைகளுடைய இயல்பை இழந்திருந்தது. அப்பொழுது தான் எல்லா

குட்டிஸ் விலங்குகளுக்கும் தெரிய வந்தது, நாம் நாமாக இல்லை என்று.அதே நேரத்தில் பெரிய விலங்குகள் பேச ஆரம்பித்தவுடன் தங்களுடைய தவறு என்னவென்று உணர ஆரம்பித்தது. மொபைல் போன் தான் எல் லாவற்றிக்கும் காரணம் என்று அறிந்தவுடன் வெட்கி தலை கவிழ்ந்தது

இதைப் பார்த்து மனம் வருந்திய குரங் குகளும் குட்டி விலங்குகளும் தங்கள் கையில் இருந்த போனை மனிதர்களிடமே தூக்கி எறிந்து விட்டு அவர்கள் அம்மா அப்பாவை கட்டிக்கொண்டு மன்னிப்பு கேட்டு அழுதனர்.. அதியனூர் காடு பழைய பொலிவுடன் குதூகலமானது. ‘சுற்றுலாத்து-றை மூலமாக பயணிகளிடமிருந்து அவர்களு-டைய கைப்பேசிகளும் உள்ளே வரும் முன் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது.‘

என்று இந்தக் கதையைப் படித்து முடித்த யாஷ் குட்டி ஓடிச் சென்று ‘அம்மா, இந்த புத்தகத்தை படித் து நான் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். நான் எப்போதும் போல் இருப்பேன் அம்மா’! என்று கட்டி கொண்டது.!

‘என்ன நண்பர்களே, இது மனிதர்க ளாகிய நமக்கும் பொருந்தும் தானே!



**செ.ப. கமல்சங்கர்**





**ஆண்டாள் ரங்கநாயகி**
கோயம்புத்தூர்

# இயற்கையே நீதான் பேரழகி

அன்றாடம் மரங்களைக் கவனித்து
ஆர்வத்தோடு தண்ணீரை ஊற்றி
இலைகளின் அழகினை இரசித்து
ஈன்றாள் போல் அரவணைத்து
உள்ளத்தை மலர்ச்சியாய் வைத்திட
ஊமையாய் (மௌனமாய்) பேசி
ரசித்து மகிழ்ந்திட
எண்ணங்களைச் செம்மையாய் பயன்படுத்தி
ஏற்றமிகு வாழ்வினை வாழ்ந்திடவே
ஐயங்களைக் களைந்து  ஆதரவை அழித்து
ஒற்றுமையை நிலைநாட்டிட
ஒவ்வொன்றாய் விதைத்து
ஓங்கி உயர்ந்து நிமிர்ந்து வளர்ந்து நிற்க
இயற்கையே நீதான் பேரழகி
உயிர்களுக்கெல்லாம் வரம் நீ......

சுற்றுச் சூழலே மழலையின் அழகிலே
காதோர தென்றலே
இயற்கையே வாழ்வின் பேரானாந்தமே
சுவாசத்தில் கலந்த ஊற்றே
தரணியெங்கும் பசுமை நிலைத்திட
சுற்றுச் சூழலை பேணி காத்திட
நம் தலைமுறைக்கு
நல்ல விதைகளை பரிசளித்து
சுற்றுச் சூழல்  இல்லையேல்
நாம் இல்லை என்பதை
அடுத்த தலைமுறையினர் மனதில்
பசுமரத்தாணி போல் பதித்து
நல்லதை விதைத்து நாளும் வளர்த்து
மாசில்லா சுழலை வளர்த்து நேசிப்போம்
இயற்கையான காற்றை சுவாசிப்போம்
வளமுடன் வாழ்வோம்



# எது அறிவு? யார் அறிவாளி?



உலகில் யார் அறிவுடையோர் அறிவிலார் என்று தீர்மானிக்க முடியுமா? சாக்ரடீஸ் முதல் பாரதியார் வரை பல அறிவுடையோரை முட்டாள்களாகவே அன்றைய சமூகமும் குடும்பமும் எள்ளி நகையாடியது . ஆனால் இன்றோ, அவர்கள் மாண்ட பின் அறிவாளிகளாக பலரால் கொண்டாடப்படுகின்றனர்.

ஏன், எதனால், எப்படி, யார் என்ற பல கேள்விகளின் பதில் தான் இன்றைய நவீன உலகின் பல வியப்பூட்டும் படைப்புகள். கற்கால மனிதன் நெருப்பை கண்டறிந்த பின் தொடங்கியது விஞ்ஞான வேட்டை. இன்று இயற்கைக்கே சவால் விடும் அளவிற்கு ஓங்கி ஒலிக்கிறது மனித அறிவாற்றல்.

ஏதேனும் கண்டுபிடிப்பு செய்து அசத்தியவர்கள் மட்டும் தான் அறிவாளிகளா? இல்லை. .இல்லவே இல்லை..!!' படிப்பு மட்டும் அறிவு இல்லை' பண்புடன் கூடிய பகுத்தறிவுடையவனே அறிவாளி .! ஹிட்லர் முதல் பெரியார் வரை ஒவ்வொருவரின் எண்ணங்களும் கருத்துகளும் மாறுபடுமே தவிர இதனிப்பட்ட நபரின் அறிவாற்றலை அவ்வளவு எளிதில் எடை போட்டுவிட முடியாது. எதை/ எப்பொழுது/ எங்கு/ எப்படி செய்ய வேண்டும் எதை/ யாரிடம்/ எப்படி பேச வேண்டும்? என்று உணர்ந்து செயல்படுவது சிறப்பு .இதை விளக்கும் கதை ஒன்றை பார்ப்போம் .

பல கலைகளில் தேர்ந்த, வயது முதிர்ந்த துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். பல ஊர்களில் இருந்து பிரசங்கம் செய்ய அவருக்கு அழைப்பு வந்தவாறே இருந்தது. அவரின் சொற்பொழிவை மக்கள் வெகுவாக ரசித்தனர். ஒரு நாள் பூஞ் சோலை கிராமத்தில் சொற்பொழிவிற்காக, பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. துறவியை அழைக்க குதிரைக்காரன் ஒரு வனை அனுப்பி வைத்தார்கள் .அப்பொழுது பலத்த

காற்றுடன் கனமழை பெய்தது. துறவி வந்து பார்த்த போது மக்கள் கலைந்து சென்று கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் மழையும் நின்றது. ஆனால் மக்கள் இல்லை. குதிரைக்காரன் மட்டுமே தனியாக நின்று கொண்டிருந்தான்.

மக்கள் முன்னிலையில் பேச பல குறிப்பு கள் எடுத்து தயார் செய்து கொண்டு வந்த துறவிக்கோ ஏமாற்றம். குதிரைக்காரன் முன் னிலையில் மட்டும் பேச மனம் வரவில்லை. 'இப்பொழுது என்னப்பா பண்ணலாம்?' என்று குதிரைக்காரனிடம் கேட்டார் .

'ஐயா நான் குதிரைக்காரன். எனக்கு ஒன்னும் தெரியாதுங்க. ஆனா ஒண்ணே ஒண்ணு மட்டும் தெரியுங்க.நான் முப்பது குதிரை வளர்க்கிறேன்.ஆனால் நான் புல்லு வைக்க போகும் பொழுது, எல்லா குதி ரையும் வெளியே போயிருந்தாலும் காத்து நிற்கும் ஒற்றை குதிரையை ஏமாற்றாமல் உணவு கொடுத்துவிட்டு தான் வருவேன். என்றான் . துறவிக்கு ஓங்கி கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது.

குதிரைக்காரனுக்கு சபாஷ் போட்டு-விட்டு புதிய உற்சாகத்துடன் அவனுக்கு மட்டும் சிறப்பாக சொற்பொழிவை தொடங்கினார். பல தத்துவங்கள், மேற் கோள்கள், பாவம் புண்ணியம், சொர்க்கம், நரகம் என்று எல்லாவற்றையும் பற்றி விவரித்து பேசி பிராமதப்படுத்தினர் துறவி. சொற்பொழிவு இனிதே நிறைவுற்றது. குதி ரைக்காரனிடம் எப்படி இருந்தது என்று பெருமையுடன் கேட்டார் துறவி .

'நான் குதிரைக்காரன் .எனக்கு ஒன்னும் தெரியாதுங்க. ஆனா ஒண்ணே ஒண்ணு மட் டும் தெரியுங்க. நான் புல்லு வைக்க போன இடத்தில் ஒரு குதிரை மட்டும் இருந்தால் அதற்கு தேவையான புல்லை மட்டும் தான் வைப்பேன். முப்பது குதிரைக்கு தேவையான உணவை அந்த ஒரே குதிரைக்கு கொட்ட மாட்டேன்' என்றான் .துறவி அதிர்ந்து போனார் .

மற்றவர்களுக்கு எது தேவையோ எப்படி சொன்னால் புரியுமோ அதை மட்டும் கூற வேண்டும்.புரியாத இடத்தில அவசியமற்ற சொற்பொழிவு நம்மைத்தான் முட்டா ளாக்கும் .

படித்த அனைவரும் புத்திசாலிகளும் அல்ல. படிக்காத அனைவரும் முட் டாள்களும் அல்ல. சரியான நேரத்தில் சூழ்நிலை அறிந்து பண்புடன் நடந்து கொள்பவன் அனைவரின் மனதிலும் இடம் பிடிப்பான். பெற்ற அறிவை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற யுக்தி பெற்றவன் மேலும் சிறப்படைகிறான்.

*'எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வ துறைவ தறிவு.'  (குறள் - 426)*



# துணிவாளுவோம்

இனம்வாழ மொழிவாழப் போராடுவோம்
இருந்திங்கே கிடந்தேதான் தடுமாறிடோம் (இனம்வாழ)

வடக்கென்றும் தெற்கென்றும் பிரித்தாள்வதேன் ?
இடர்தந்து தாம்வாழக் குறைகூறலேன் ?
அடர்காட்டு விலங்காக மனமாவதேன் ?
தடமேதும் இல்லாமல் தான்போவதேன் ? (இனம்வாழ)

போராடி விடுதலைநாம் பெற்றதில்லையா ?
பாராளும் நம்மக்கள் அறிந்ததில்லையா ?
யாராலும் துடிப்பின்றி இருப்பாகுமோ ?
நீராலே நெருப்பணையா நிலையுள்ளதோ ?  (இனம்வாழ)

அறிவற்ற இனமாக நாம்வாழ்வதோ ?
நெறியற்ற தேக்கம்போல் நாமாவதோ ?
வெறியோடு போராடத் தடையென்னவோ ?
குறிக்கோளே இல்லாமல் புகழ்சேருமோ (இனம்வாழ)

தடையெல்லாம் உடைத்தேதான் தலைதூக்குவோம்
தடந்தன்னைத் தப்பாமல் உருவாக்குவோம்
புடமிட்டும் பொன்னேபோல் புவிதோன்றுவோம்
அடலேறாய் நாமென்றும் அறிவாளுவோம் (இனம்வாழ)

குறைசொல்லும் போக்கெல்லாம் குழிதள்ளுவோம்
முறையற்றார் முன்வந்தால் பின்தள்ளுவோம்
இரையாக்க நினைப்பார்க்கே இரையாகிடோம்
நரைத்தாலும் தளராமல் துணிவாளுவோம் (இனம்வாழ)

- படைக்களப் பாவலர் துரை.மூர்த்தி

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஆகஸ்ட் 2024



## இதோ இந்த நெஞ்சோடு

ஓலைக் குடிசையிலே ஒண்ணாவே நாமிருக்க
வேள கூடிடுச்சே! வெள்ளியிலே மிஞ்சியல்லோ?
சீலைத் துணியெடுத்தேன் சித்திரமே ஒனக்காவ!
வாலக் குமரியல்லோ! வையிரதும் இனிக்காதோ?

மாமே ஒனக்காவ மனசத்தா(ங்) கொடுக்கிறனே!
மானே எனக்காவ மாங்கல்யத்த ஏத்துக்கடி!
தேனே ஒன்றமேலே தெளியாத பைத்தியந்தான்!
தேமேன்னு இருக்கத்தான் என்னாலயும் ஏலாதடி!

இதோ இந்த நெஞ்சோடு காத்திருக்கேன்!
எதுக்காக என்னுசுரைத் தாங்கி இருக்கேன்!
முப்போதும் ஒன்னெனப்பு! முடிஞ்சிகிட்ட என்னுசுரை!
தப்பாம ஏத்துக்கடி! தங்கமே! தாயல்லோ!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்**, புதுச்சேரி.